# HISTORY OF INDIA

## (THE BRITISH PERIOD)

V. RAJAGOPALA AYYAR, M.A., L.T.,
Headmaster, Board High School, Erode
AND
Member of the Senate, University of Madras.

V. S. VENKATARAMAN & CO.,
PUBLISHERS,
IMBAKONAM.

[A

V2
N35
97412

*First Edition, December 1*




PRINTED AT
THE ROYAL PRINTING WORKS
MOUNT ROAD : : MADRAS

# PREFACE

This book is primarily designed for the use of pupils in Form IV under the 1934 Scheme. The syllabus prescribed by the S. S. L. C. Board has been followed.

It has been recognised by scholars that 'no part of the achievement of the British race is more deserving of study than the process' of the establishment of British Power and the growth and development of a system of government in India.

An attempt has been made in this little volume to set forth in Tamil, the history of the rise and growth of the British Rule in India, for the benefit of the pupils.

As one can understand the genius of the scheme, two main themes have received emphasis :—

1. The gradual extension of the British territory.

2. The story of the internal administration and beneficial measures.

Events of a purely military character have been omitted and the episodes such as the Anglo-French Wars in the Carnatic, and dealings with Mysore have been outlined, to enable the pupils to recollect the details that led to the treaties mentioned in the syllabus.

Practical difficulties of the class-room have been kept in view and the number of pages has been adjusted to the demands of teaching.

The Tamil equivalents of English terms in History, Politics, and Civics published by the Government have been adopted wherever necessary, and in the cases of transliteration or translation of English words, indication has been given of the same.

In the course of the narrative, care has been taken to explain details and situations to help the pupils to grasp fundamental notions of History and Civic ideas and to understand the connection between Indian and English History, and to stimulate imagination.

Introductory paragraphs have been given in certain chapters with a view to aid the pupils to understand and follow the sequence of events and to reduce the difficulties incidental to 'the topical treatment' of the subject.

I desire to record my thanks to two of my friends, Mr. R. Ramakrishna Ayyar, M.A., L.T., and Mr. D. Venkataramanan, M.A., L.T., who were kind enough to discuss with me the nature and scope of the syllabus and to offer their suggestions.

I am deeply grateful to Mr. N. T. Tiruvenkatachari, B. A., Vidwan (Tamil) who has placed me under a great obligation by reading and editing the entire manuscript and by giving me the benefit of his attainments and scholarship. But for his valuable assistance, I feel, I could not have completed this responsible task.

I also wish to express my gratitude to the Publishers who have taken pains to secure suitable maps and illustrations and inspired in me the desire to take up this work.

Though my primary aim is to supply a suitable text-book, I have endeavoured to adapt the style and method of presentation to the needs of the general reader.

THE AUTHOR

# பொருளடக்கம்


| அத்தியாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆங்கிலேய அதிகாரத்தின் துவக்கம் ... | 1 |
| 2. | ஆங்கிலேயரின் அதிகார வளர்ச்சி ... | 9 |
| 3. | ஆங்கிலேயர் வங்காளத்தைப் பெறுதல் ... | 17 |
| 4. | வாரன் ஹேஸ்டிங்க்ஸ் ... ... | 27 |
| 5. | லார்டு கார்ன்வாலிஸ் : ஸர் ஜான் ஷோர் ... | 38 |
| 6. | லார்டு வெல்லஸ்லி ... ... | 43 |
| 7. | 1858 வரை ஆங்கிலேயர்களின் அதிகார வளர்ச்சி ... ... ... | 50 |
| 8. | பெண்டிங்க் : டல்ஹௌசி காலத்திய சீர்திருத்தங்கள் ... ... | 63 |
| 9. | கம்பெனி ஆட்சியின் முடிவு ... ... | 69 |
| 10. | கானிங் பிரபு ... ... ... | 77 |
| 11. | இந்தியாவில் ஆங்கிலேய அரசியல் : பர்மா : ஆப்கானிஸ்தானம் ... | 81 |
| 12. | உள் நாட்டு துரைத்தனம் ... ... | 90 |
| 13. | உள் நாட்டு துரைத்தனம் (தொடர்ச்சி) ... | 98 |
| 14. | உள் நாட்டு துரைத்தனம் (தொடர்ச்சி) ... | 108 |
| 15. | தற்கால ராஜாங்க அமைப்பு ... ... | 115 |



டில்லி தர்பார்—1911

[பக்கம் 109

# இந்திய தேச சரித்திரம்

## பிரிட்டிஷ் ஆட்சிக் காலம்

### அத்தியாயம் I

#### ஆங்கிலேய அதிகாரத்தின் துவக்கம்

**முகவுரை :**—நமது இந்தியா தேசத்தில் பல் வேறு காலங்களில் பல ராஜ்யங்கள் நிலைபெற்றிருந்தன. முதலில் அசோகருடைய ராஜ்யம் தெற்கில் மைசூர் வரையிலும் பரவி யிருந்தது. பிறகு குப்த ராஜ்யம், ஹர்ஷ ராஜ்யம் முதலியன ஒன்றன் பின் ஒன்ருய் ஏற்பட்டுச் சிறப்புற்றிருந் தன. இவ்வாறு கடைசியாக ஆண்டு வந்தவர்கள் மொகலாய சக்கரவர்த்திகளாவர். இவர்களுக்கப்பால் பல ஐரோப் பிய தேசத்தார்கள் இந்தியாவில் தங்கள் வர்த்தகத்தையும், அதிகாரத்தையும் நிலைநிறுத்த முயன்ருர்கள். இவர்களில் ஒருவரான ஆங்கிலேயர் இம்முயற்சியில் பெரிதும் பயன டைந்து, தங்களுடைய ஆதிபத்தியத்தை ஏற்படுத்திக் கொண்டு இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டு வருகிருர்கள். இவர்களுக்கு முன் பல இந்து, மக மதிய அரசர்கள் திறமையாக ஆண்டபோதிலும், அவர்கள் யாவரும் இத்தேச முழுவதையும் ஒன்றுபடுத்தி அரசாட்சி செய்ததாகச் சொல்லமுடியாது; பூகோள நிலைமையை அனு சரித்து இது ஒரே தேசமாக இருந்ததே ஒழிய, ராஜ்ய விஷ

யங்களில் இப்பொழுது இருப்பதுபோல், ஒரே ஐக்கியமான ராஜ்யமாக எக்காலத்திலும் இருந்ததாகச் சொல்ல முடியாது. கன்னியா குமரி முதல் இமயமலை வரையிலும் ஒரே ராஜ்யமாக ஆளும் சிறந்த பெருமை ஆங்கிலேயர்களுக்கே உரியதாகும். இவ்விதம் ஆங்கிலேயர் தம்முடைய ராஜ்யாதிபத்தியத்தை இந்தியாவிலேற்படுத்தின வரலாற்றைப் படிப்போம்.

மோகலாய ராஜ்யத்தின் க்ஷீணதசை :—கி. பி. 15-ம் நூற்றாண்டின் முடிவுக் கால முதல் பல ஐரோப்பிய தேசத்தார் கீழ்கடலில் பிரயாணம் செய்வதும், இந்தியா முதலிய தேசங்களோடு கடல் மார்க்கமாய் வர்த்தகம் செய்வதுமாக இருந்தனர். இவர்களிற் பலர் இந்தியாவின் கடற்கரையோரங்களிலுள்ள இடங்களில் வர்த்தகசாலைகளை அமைத்துக்கொண்டு வியாபாரம் செய்யவும், காலக்கிரமத்தில் தங்களுடைய அதிகாரத்தை உள்நாட்டில் பெருக்கிக் கொள்ளவும் முயன்றார்கள். அப்போது இவர்களுக்குப் பல விஷயங்கள் சாதகமா யிருந்தன. அக்பர் சக்கரவர்த்தி காலத்தில் நிலைபெற்ற மொகலாய ராஜ்யமானது, அவருடைய பேரப்பிள்ளையான ஔரங்கஜேப் காலத்திற்குப் பின் க்ஷீணகதி யடைந்தது. 1707 வரை மொகலாய ராஜ்யம் ஒருவாறு கட்டுக்குலையாமலிருந்தபோதிலும், ஔரங்கஜேப் காலத்திலேயே க்ஷீணதசைக்குரிய ஆஸ்பதங்கள் தோன்றிவிட்டன எனக் கூறலாம். அவர் தமது மத வைராக்கியத்தினால், மொகலாய ராஜ்யத்திற்கே அக்பர் காலத்தில் இன்றியமையாத் துணையாகவிருந்த ரஜபுத்திரர் முதலிய இந்துக்களின் விரோதத்தைத் தேடிக்கொண்டார். மதவிஷயங்களில் கடின சித்தமுள்ள எந்த அரசரும், நெடுங்காலம் அன்னிய மதஸ்தரான குடிகளை அடக்கி யாளுவதென்பது முடியாத காரியமாகும்.

மேலும் அக்பரால் ஆரம்பிக்கப்பட்டு, ஔரங்கஜேப்பால் முடிவுற்ற தக்ஷிணப் படையெடுப்புக்களால், கோல்கோண்டா, பீஜப்பூர் ராஜ்யங்கள் சிதைந்தன. அதனால் இதுகாறும் பல மொடுங்கி யிருந்த மஹாராஷ்டிரர் யாதோர் தடையு மின்றிப் பலாட்டியர்களாகி, ஒரு காலத்தில் டில்லி வரையிலுங்கூடப் படையெடுத்துச் செல்லலானார்கள். மேலும், இந்தப் படையெடுப்புக்களால் ஏராளமான பொருட் சேத மேற்பட்டதல்லாமல், ஔரங்கஜேப் தக்ஷிணத்திலிருந்த காலமெல்லாம், டில்லியில் துரைத்தன காரியங்கள் சீர் குலையலாயின. ராஜாங்க உத்தியோகஸ்தர்களின் தொந்தரவால் குடிகளுக்கு அரசாங்கத்தினிடம் வெறுப்பும், அவநம்பிக்கையு முண்டாயின. 'தக்ஷிணத்திற்கும், டில்லிக்கும் வெகுதூரம்' (Deccan is distant from Delhi) என்றோர் பழமொழியுமுண்டு; நடை, உடை, பாவனைகளில் வேறுபட்ட தென்னாட்டவரை வட நாட்டார் செவ்வையாக அவர்களின் நன்மையை உத்தேசித்து ஆளுவது அசாத்தியமாகும். மேலும் தற்காலத்திற் போல, போக்கு வரவு சாதனங்களில்லாத காலத்தில் நெடுந்தூரத்திலுள்ள தலைநகரத்திலிருந்து கொண்டு தக்ஷிண முதலிய தொலைவிலுள்ள பிரதேசங்களைத் திறமையாக ஆளுவது கூடாத காரியம். அதனால் தூரத்திலுள்ள ராஜ்யங்கள் மொகலாய ஆட்சியைப் பொருட்படுத்தாமல் சுயேச்சை யடைந்தன.


இஃதன்றி, ஒவ்வொரு இலாகா விஷயங்களையும் தனித் தனி உத்தியோகஸ்தர்கள் கவனிப்ப தென்பதின்றி எல்லாக் காரியங்களையும் அரசரே நேரில் கவனிப்பதென்ற வழக்க மிருந்தது. இதனால் இதர உத்தியோகஸ்தர்களுக்கு அரசாங்கத்தில் பொறுப் பில்லாமற் போவதோடு, ஆளுந் திறமையற்ற அரசர்கள் இவ்வதிகாரத்தைத் தகாத வழியிற் செலுத்தலுங் கூடுமல்லவா? ஔரங்க ஜேப்பிற்குப் பிற்

பட்ட மன்னர்களும், அவர்களுடைய சேனவீரர்களும் மிகவும் பலமற்றவர்களாகவும் இருந்தார்கள். மொகலாய ராஜ்யம் பெரும்பாலும் அரசர்களின் திறமையினுலும், ராணுவ பலத்தாலுமே நிலைத்திருந்தது. இவர்கள் பலங்குன்றியதே அந்த ராஜ்யத்தின் அழிவிற்கு முக்கிய காரணமாகும்.

மேற்கூறியவாறு பல காரணங்களால், மொகலாய ராஜ்யம் சிதையவே, நாதர்ஷா, ஆமத்ஷா துரானி என்போர் ஆப்கானிஸ்தானத்தைப் பலப்படுத்திக் கொண்டு இந்தியா மீதும் படை யெடுக்கலாயினர் ; பஞ்சாபில் சீக்கர் பலமுற்ருர்கள். மஹாராஷ்டிரர்களே யன்றிப் பல சிற்றரசர்களும் தம் அதிகாரத்தை அதிகப்படுத்திக் கொண்டனர்.

இந்தியா தேசமானது இத்தகைய நிலையில் இருக்கும் போதுதான், வர்த்தக நிமித்தமாக இங்கே வந்து குடியேறின ஐரோப்பிய தேசத்தார்களின் அதிருஷ்டம் ஆரம்பமாகிற தென்னலாம். தொன்று தொட்டு இந்தியாவில் படையெடுத்து வந்தவர்களெல்லாம் வடமேற்குக் கணவாய்களின் வழியாகவே வந்தார்கள் ; ஆதலால் மொகலாய சக்கரவர்த்திகளை உள்ளிட்ட அரசர்கள், கடலின் வழியாக அன்னியர் வரக்கூடும் என்ருவது, கடற்கரைகளைப் பாதுகாக்க வேண்டுமென்ருவது நினைக்கவேயில்லை. அதனுல் ஐரோப்பியர்கள் கடல் மார்க்கமாக எளிதில் வரத் தலைப்பட்டார்கள். இவர்களது வருகையும் மொகலாய ராஜ்யத்தின் அழிவுக்கோர் காரணம் என்பதும் பொருந்தும். 1858 வரை பெயரளவில் மொகலாய சக்கரவர்த்திகளிருந்த போதிலும், அவர்களால் யாதொரு தடையுமின்றி, ஐரோப்பியர்கள் இந்தியாவில் தம் செல்வாக்கையும், அதிகாரத்தையும் பெருக்கிக் கொள்ள முடிந்தது.

**போர்ச்சுகீசியர் வரவு:**—நெடுங்காலமாக ஐரோப்பியர்கள் தரைமார்க்கமாகச் செய்துவந்த இந்திய வர்த்த




கம், 1453 முதல் துருக்கர்களின் ஆதிக்கத்தால் தடைப்படவே, அவர்கள் புதிய மார்க்கத்தைக் கண்டுபிடிக்கத் தீவிரமாய் முயன்றனர். இதுவன்றி, கீழ்ப்பிரதேச வியா

பாரத்தைத் துருக்கர்களிடமிருந்து பறிக்கவேண்டுமென்ற எண்ணமும் உண்டாயிற்று. ஐரோப்பிய தேசங்களில் முதன் முதலாகச் சுதேச உணர்ச்சி உண்டானது போர்ச்சுகல் தேசத்திலேதான். அவர்களின் அறிவாற்றல்களால் வெளியிடங்களிற் செல்ல அவர்கள் பிரயாசப்பட்டார்கள். இவற்றால் முதன் முதலில் போர்ச்சுகீசியரே இந்தியாவுக்கு வந்து, வர்த்தகத்தை ஸ்தாபிக்கலாயினர். இவர்கள் ஏற்கெனவே மேற்குக்கரை நாடுகளின் மூலமாய் இந்தியாவோடு வியாபாரம் செய்து வந்த துருக்கர்களையும், அராபியர்களையும் பல போர்களில் வென்று, தம் சமுத்திராதிபத்தியத்தையும், கோவா (1510), ஆர்மஸ் முதலிய இடங்களில் கோட்டைகளையும், பண்டகசாலைகளையும் அமைத்துக் கொண்டு, ஸுமத்ரா, ஜாவா, போர்னியோ, மலாகா முதலியவைகளோடு வர்த்தகம் செய்துவரலாயினர். இவர்கள் நாளடைவில் டையு (1538), டாமன் (1558) என்றவிடங்களிலும், கிழக்குக்கரையில் ஸான் தோமிலும், வங்காளத்திலும் தங்களுடைய வியாபாரத்தை நிலைக்கச் செய்தார்கள்.

போர்ச்சுகீசியர் வர்த்தகத்தின் அழிவு:—கி. பி. 16-வது நூற்றாண்டில் போர்ச்சுகீசியரின் வியாபாரம் மிகவும் செழித்தோங்கியது. ஆனால் அடுத்த நூற்றாண்டிற்குள் பல காரணங்களால் இவர்களுடைய வியாபாரம் சிதைவுற்றது. போர்ச்சுகல் என்பது மிகவும் சிறிய தேசம்; ஆதலால் பல்லாயிர மைல்களுக்கப்பாலுள்ள இந்தியா போன்றதொரு பெரிய தேசத்தை ஜயித்து ஆளுவதென்பது அவர்களுடைய சக்திக்கு மீறிய காரியமாகும். தம்முடைய வர்த்தகத்தை மாத்திரம் கவனித்து வந்திருப்பார்களாயின், ஒரு வேளை இவர்கள் நிலைத்திருக்கக் கூடும். அதைவிட்டு, கொஞ்சங் கொஞ்சமாய் ராஜ்யத்தை

ஸ்தாபிக்கவும், கிறிஸ்தவ மதபோதனை செய்து இந்தியரைக் கிறிஸ்தவராக்கவும் முயன்றது அக்காலத்திற்கேற்றவை கள் அல்ல ; அவற்றிற்கு அது பக்குவகாலமன்று. மேலும் இவர்கள் சுதேச ராஜாக்களைத் தம் எஜமானத்துவத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தூண்டியதும் இவர்களுக்கிருந்த மதிப்பைக் கெடுத்தது. இவர்கள் சில வியாபார மார்க்கங் களைத் தனி உரிமை (Monopoly) யாக அனுபவித்ததும், அதன்பொருட்டுக் கையாண்ட முறைகளும், இவர் களுக்கப்பால் இந்தியாவுக்கு வந்த டச்சுக்காரர், ஆங்கி லேயர்களின் பொறாமைக்கும், போட்டிக்கும் காரணமாக இருந்தன. 1580-ல் போர்ச்சுகல் தேசம் ஸ்பெயின் தேசத் திற்கு அடங்கியதாலும் இந்திய விஷயங்களை நன்கு கவனிக்க முடியாமற் போயிற்று. இக்காரணங்களால் போர்ச்சுகீசியரின் இந்திய வியாபாரம் அழிவுற்றது.

டச்சுக்காரர் வருகை :—உலந்தா (Holland) தேசம் அநேகமாய்க் கடல் சூழ்ந்திருப்பதால், அங்குள்ளவர்கள் சுபாவமாகவே சமுத்திரப் பிரயாணம் செய்வதில் வல்லவ ராகின்றனர். 16-ம் நூற்றாண்டின் இறுதிக்காலமுதல் இத்தேசத்தவர்கள் (டச்சுக்காரர்) மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள், இந்தியா முதலியவற்றோடு வர்த்தகம் செய்ய லாயினர். பின் நாளடைவில் இவர்கள் போர்ச்சுகீசியரைத் துரத்திவிட்டு, அவர்களிடமிருந்த பல வியாபார ஸ்தலங்களை யும் கைக்கொண்டார்கள். அவற்றில் மேற்குக் கரையில் சூரத்தும், கோச்சியும், கிழக்குக் கரையில் பழவேற்காடு, மசூலிப்பட்டணம், நாகப்பட்டினம், சின்ஸுரா, என்பவைகளும் முக்கியமானவையாகும். இவ்வாறு பல விடங்களில் வர்த்தகக் கிடங்குகளை இந்தியாவில் ஏற் படுத்திய போதிலும், மலே ஆர்ச்சிபிலோகோ தான் டச்சுக் காரரின் முக்கிய ஸ்தானமா யிருந்ததென்னலாம்.

**டச்சு வியாபாரத்தின் அழிவு:—17**-வது நூற்றாண்டின் முற்பகுதியில் அவர்களுடைய வியாபாரம் மிகவும் உயர்ந்திருந்தது. அதன்பிறகு அவர்களுடைய இந்திய வியாபாரம் அழியத் தலைப்பட்டது. அவர்களும் இதனை அவ்வளவு முக்கியமாகக் கருதாமல், கிழக்கிந்தியத் தீவுகளோடு வாசனைத் திரவியங்களின் வியாபார மொன்றையே கருதி இந்தியாவை விட்டகன்றனர். மற்றும் இவர்களுடைய சொந்த தேசம் கடலுக்குத் தாழ்ந்திருப்பதால், மதில்களைக் கட்டி அதைப் பாதுகாப்பதிலேயே மிகுந்த சிரமமெடுத்துக்கொள்ள வேண்டியவர்களானார்கள். இதன்றி இங்கிலாந்தும், உலந்தாவும் கடல் வலிமை காரணமாகத் தம்முள் சண்டையிட்டு வந்தன. இவர்களையும், பிரெஞ்சுக்காரரையும் சமுத்திர வல்லமை மிக்குள்ள ஆங்கிலேயர் முறியடித்தனர். ஆங்கிலேயரின் வியாபாரப் போட்டிக்கும், கடல் வலிமைக்கும் டச்சுக்காரர் பின்வாங்க வேண்டியவர்களானார்கள். இவற்றால் டச்சு வியாபாரமும் அழியவே, இனி அதிகாரத்தின் பொருட்டும், வர்த்தகத்தின் பொருட்டும், மிகுந்துள்ள பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் தம்முள் சண்டையிடவேண்டியவர்களானார்கள்.

# அத்தியாயம் 2

## ஆங்கிலேயரின் அதிகார வளர்ச்சி

**ஆங்கிலேயரும் பிரேஞ்சுக்காரரும் :**—போர்ச்சுகீசியரையும், டச்சுக்காரரையும் போலவே, ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் இந்தியாவோடு வர்த்தகம் செய்யத் தொடங்கினார்கள். இங்கிலிஷ்காரர் 1600-ம் ஹூ எலிஜபெத் மஹாராணியிடத்தில் ஒரு சாஸனம் பெற்று இந்தியாவில் வர்த்தகம் செய்யும்பொருட்டுக் கிழக்கிந்தியக் கம்பெனியை (East India Company) ஸ்தாபித்தார்கள். நாளடைவில் இவர்களும் சூரத், மசூலிப்பட்டணம், ஆக்ரா, பாட்னா முதலிய இடங்களில் தம் சாமான்களைச் சேகரித்துப் பத்திரமாக வைப்பதற்கேற்றவாறு பல பண்டகசாலைகளைக் கட்டிக்கொண்டதோடு, டச்சுக்காரரையும், போர்ச்சுகீசியரையும் மீறினவர்களானார்கள். பிறகு சென்னை, பம்பாய், கூடலூர் முதலிய இடங்களும் இவர்களுக்குச் சொந்தமாயின.

இவர்களைப் போலவே, பிரெஞ்சுக்காரரும், அதே காலத்தில் மேற்குக்கரையில் மாஹி யென்னுமிடத்திலும், கிழக்குக் கரையில் சந்திரநாகூர், புதுச்சேரி, காரைக்கால் முதலிய விடங்களிலும் வர்த்தக ஸ்தலங்களை ஏற்படுத்திக் கொண்டு, தம் வியாபாரத்தை மேலோங்கச் செய்தார்கள். அதோடு தென்னிந்தியாவின் சுதேச விஷயங்களில் தலையிட்டுக்கொண்டு, தம் செல்வாக்கையும், அதிகாரத்தையும் பெருக்கிக் கொள்ள நினைத்தார்கள்.

**பிரேஞ்சு—ஆங்கிலேயப் போட்டி :**—இந்தியாவில் இவ்விரு ஐரோப்பிய தேசத்தார்களுக்கும் சீக்கிரத்திலேயே சண்டை ஆரம்பமாயிற்று. இதற்கு முக்கிய காரணம் இவர்


களுக்குள்ளிருந்த வியாபாரப் போட்டியே. இதுவன்றி ஐரோப்பாவில் ஆஸ்டிரியா தேசத்துப் பட்டம் காரணமாக (1740-1748) ஒவ்வொருவரும் விரோதக் கட்சியிலிருந்து சண்டை செய்தார்கள். இதுமுதல் அநேக வருஷம் வரையிலும், இவர்களுக்குள் ஐரோப்பாவிலிருந்த சம்பந்தா சம்பந்தங்களே, இவர்கள் ஸ்நேகமாகவோ, விரோதமாகவோ இந்தியாவில் இருப்பதை நிர்ணயிக்கும் விஷயமாயிருந்தது. இப்படி 18-ம் நூற்றாண்டு முழுவதும் இவர்களுக்குள் இந்தியாவிலேற்பட்ட பகை நட்புக்களுக்கு இவர்களுடைய ஐரோப்பிய நடவடிக்கைகளே காரணமாயிருந்தன.

சுதேச ராஜ்யங்களின் நிலைமை:—ஔரங்கஜேப் பிற்குப் பின் தென்னிந்தியா முழுவதும் அநேகமாய்ச் சுயேச்சை யடைந்தது. கர்னாடகத்தை அன்வார் உத்தீன் என்கிற நவாப் ஆண்டு வந்தார்; தஞ்சாவூரும், மைசூரும் ஹிந்து அரசர்களின் ஆட்சியில் வந்தன. இவ்வாறு தென்னிந்தியா முழுவதும் பல சிறு ராஜ்யங்களாகப் பிரிந்ததனுலும், ஏற்கெனவே ஆங்கிலேயர்கள் தங்கள் நிலைமையை வங்காளத்தில் ஸ்திரப்படுத்திக் கொண்டதாலும், இவர்கள் தங்கள் வலிமையை நிலை நாட்ட முடிந்தது.

டூப்ளே:—ஐரோப்பாவில் ஆஸ்டிரியா வார்ஸுப்போர் தொடங்கி ஆறு வருஷமான பிறகு தென்னிந்தியாவிலும், ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் தமக்குள் சண்டையிடலாயினர். இப்போது பிரெஞ்சு கவர்னராகப் புதுச்சேரியில் டூப்ளே என்பவர் இருந்தார். இவர் மிகவும் புத்தி கூர்மையுள்ளவர்; பராக்கிரமசாலி. பிரெஞ்சுக்காரரின் அதிகாரத்தையும், செல்வாக்கையும் அதிகப்படுத்தவும், ஆங்கிலேயர்களை இத்தேசத்தை விட்டுத் துரத்தவும் இவர் விரும்பினுர். இதைச் சாதிப்பதற்காக அவர் சுதேச

விவஹாரங்களில் கலந்து கொள்வதும், சுதேசமன்னர்களோடு சிநேகம் செய்துகொள்வதுமாக இருந்தார்.

**முதல் கர்நாடகயுத்தம் (1745-1748):—** இவர் 1746-ல் லாபோர்டனே என்பவர் தலைமையில் ஒரு பிரெஞ்சுக் கப்




பற்படையை அனுப்பிச் சென்னையை முற்றுகையிடும்படி செய்தார். சென்னையும் பிரெஞ்சுக்காரர் வசமாயிற்று. இதைக் கண்ட கர்நாடக நவாப்பான அன்வார் உத்தீன் சென்

2னையை ஆங்கிலேயர் வசம் ஒப்பிவிக்கும்படி வேண்டியும், பிரெஞ்சுக்காரர் அதைப் பொருட்படுத்த வில்லை. உடனே பிரெஞ்சுக்காரரைத் தாக்கும்படி நவாப் ஒரு சேனையை அனுப்பினர். இதற்கும் பிரெஞ்சுப் படைக்கும் ஸான் தோமில் ஒரு சண்டை நடந்தது. அதில் பிரெஞ்சுக்காரரே வெற்றி யடைந்தனர். இதிலிருந்து கட்டுக் குலைந்து, சின்ன பின்னமாக இருக்கும் இந்திய தேசத்தை விரைவில் அதிக பராக்கிரமமுள்ள ஐரோப்பிய தேசத்தார் அடக்கி ஆளக் கூடு மென்பது வெளிப்பட்டது.

உடனே இங்கிலிஷ்காரர் கூடலூரிலுள்ள ஸெயின்ட் டேவிட் கோட்டைக்கு ஓடிப்போனர்கள். பிரெஞ்சுக் காரர் அதையும் முற்றுகையிட முயன்றபோது, ஆங்கிலே யர் அவர்களை முறியடித்தனர். இதற்குள் ஐரோப்பாவில் இவர்களுக்குள் சமாதானம் (Treaty of Aix La Chapelle) உண்டானதால், இங்கும் சண்டையை நிறுத்திப் பிரெஞ்சுக் காரர் சென்னையை மீண்டும் ஆங்கிலேயரிடம் ஒப்புவிக்க வேண்டியதாயிற்று.

**இரண்டாவது கர்னடக யுத்தம் : காரணங்கள் :**—இவ் விரு தேசத்தாருள்ளும் ஏற்பட்ட சமாதானம் நீடித்திருக்க வில்லை. அதிசீக்கிரத்தில் மறுமுறையும் சண்டை யேற் பட்டது. ஹைதராபாத் நிஜாமாகவிருந்த நிஜாம் உல் முல்க் 1748-ல் இறந்ததும், அவனுடையபிள்ளையான நாஜர் ஜங்கும் (Nasir Jang), மகள் வயிற்றுப் பேரனை முஜபர் ஜங் (Muzafur Jung)கும் அப்பட்டத்தின் பொருட்டுத் தம் முள் விரோதங் கொண்டனர். ஹைதராபாத் நிலைமை இவ் வாறிருக்கையில் கர்னடகத்தின் துரைத்தன விஷயங் களும் தாறுமாறுயின. ஹைதராபாத் நிஜாம் பழைய ராஜ வம்சத்தை நீக்கிவிட்டு, அன்வார் உத்தீன் என்பவனைக் கர் னடக நவாப் ஆக்கினன். ஆயினும் பழைய வம்சத்தைச்

சேர்ந்தவனும், சேனைத் தலைவனுமான சந்தா சாஹிப் அப்பட்டம் தனக்குரியதென்று விவாதித்து டூப்ளேயின் உதவியை நாடினான். சுதேச விஷயங்களில் தலையிட்டுத் தம் அதிகாரத்தை விருத்தி செய்ய விரும்பிய டூப்ளேயிக்கு இஃதோர் நல்ல சமயமாயிற்று.

டூப்ளே முஜபர் ஜங்கையும், சந்தா சாஹிப்பையும் ஆதரிக்கத் தொடங்கினார். இதனால் ஆங்கிலேயரும் அவர்களுடைய விரோதக் கட்சியாருக்கு உதவி செய்ய வேண்டியது அவசியமாயிற்று. ஆனாலும் இவ்விருவரும் தம் தம் விரோதிகளைக் கெடுத்துத் தம் எண்ணத்தை நிறைவேற்றுவதற்கோர் சமய மளித்தது மாத்திரமேயன்றி, இவர்களுக்குச் சுதேச விஷயங்களில் உண்மையான நல்லெண்ணமோ, ஊக்கமோ இருந்ததாகச் சொல்லமுடியாது. ஐரோப்பாவில் இப்போது இவ்விரு தேசத்தாருக்கும் சண்டை ஏற்படாதிருந்தும், இந்திய விஷயங்களை யொட்டி இவர்கள் சண்டையிட வேண்டியவர்களானார்கள்.

பிரேஞ்சு வெற்றி :—டூப்ளே, புஸ்ஸி என்பவர் தலைமையில் ஒரு பிரெஞ்சு சைன்யத்தைச் சந்தா சாஹிப்புக்கு உதவியாக அனுப்பினார். அப்போது நடந்த சண்டையில் அன்வார் உத்தீன் கொலையுண்டார். உடனே டூப்ளே சந்தா சாஹிப்பைக் கர்னாடக நவாப்பாகவும், முஜபர் ஜங்கை ஹைதராபாத் நிஜாமாகவும் ஆக்கினார். கொலையுண்ட அன்வார் உத்தீனுடைய பிள்ளையான மஹமத் அலி திருச்சினாப்பள்ளிக்கு ஓடி, மலைக்கோட்டையில் ஒளிந்து கொண்டான். முஜபர் ஜங் தனபட்டத்தை அடைவதற்காக ஹைதராபாத் செல்லும் வழியில் கொலையுண்டார். அதனால் டூப்ளே மறுபடியும் ஸலபட் ஜங் என்பவனை நிஜாமாக்கினார். அவனும் தனக்குப் பிரெஞ்சுக்காரர் செய்த நன்றிக்குப் பிரதியாக வட ஸர்க்காரைக் கொடுத்தான். இது நிற்க,

சந்தா சாஹிப், மஹமத் அலியைத் துரத்திச் சென்று திருச்சினுப்பள்ளியையும் முற்றுகை யிட்டான்.

லார்டு கிளைவ் :—இந்த நிலைமையில் ராபர்ட் கிளைவ் (பின் லார்டு கிளைவ்) இங்கிலிஷ் சைன்யத்தின் தளகர்த்தராக நியமிக்கப்பட்டார். இவர் தமது இளம்பிராயத்திலேயே கிழக்கிந்தியக் கம்பெனியில் குமாஸ்தா வேலையிலமர்ந்து, பின் படிப்படியாக உயர்ந்த அந்தஸ்துக்களை அடைந்தவராவர். இவர் இதர உத்தியோகங்களைச் செய்வதிலும், ராணுவத் தலைமை வகிப்பதற்கு ஏற்றவரென்பது, பிரெஞ்சுக்காரர் ஸெயின்ட் டேவிட் கோட்டையை முற்றுகைபோட்டபோது நன்கு வெளியாயிற்று. இவரைப் பிரிட்டிஷ் இந்திய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த மூல புருஷராக நாம் கருதலாம்.

ஆற்காடு முற்றுகை :—பிரெஞ்சுக்காரரின் உதவியைப் பெற்ற சந்தா சாஹிப் திருச்சினுப்பள்ளியை முற்றுகைசெய்ததும், மஹமத் அலியும் ஆங்கிலேயரின் உதவியை நாடினன். இந்நிலைமையில், கிளைவின் சமயோசித புத்தி மிகவும் பிரயோஜனமா யிருந்தது. அவர் சந்தா சாஹிப்பின் தலைநகரமான ஆற்காட்டை முற்றுகை யிடும்படி ஒரு சேனையையும், திருச்சினுப்பள்ளியை விடுவிக்கும்படி ஒரு சேனையையும் அனுப்பினர். இதனுல் கிளைவின் எண்ணம் நிறைவேறிற்று; சந்தா சாஹிப் தன் சொந்த ஊரைக் காப்பாற்றும்படி தன் சேனையின் ஒரு பகுதியை அனுப்பவேண்டியவனுனன். இங்கிலிஷ் படை ஆற்காட்டைக் கைக்கொண்டு, சந்தா சாஹிப்பை நாடிழந்து ஓடும்படி செய்தது. திருச்சியும் விடுதலையடைந்தது. பிறகு பிரெஞ்சுக்காரர் இங்கிலிஷ்காரரோடு 1754-ல் சமாதானம் செய்துகொண்டனர். அதே ஆண்டில், பிரெஞ்சு துரைத்தனத்தார் டூப்ளேயைத் திரும்பி வருமாறு உத்தரவிட்டனர். டூப்ளேயும், தம்

எண்ணம் முற்றுப் பெருமல், திரும்பிச் செல்லவேண்டிய தாயிற்று; இதோடு பிரெஞ்சு பலமும் இந்தியாவில் ஒடுங்கிய தென்றே கூறலாம்.

**மூன்ருவது யுத்தம்: காரணங்கள்:**—மறுபடியும் ஐரோப்பாவில் இவ்விரு தேசத்தவர்களும் ஏழு வருஷப் போரில் (1756—1763) கலந்து எதிர்க்கட்சிகளில் நின்று சண்டை தொடுத்தனர். அதனுல் திரும்பவும் இந்தியாவிலும், அமெரிக்காவிலும் சண்டை யுண்டாயிற்று. பிரெஞ்சு துரைத்தனத்தார் இப்போது கவுண்ட் டி லாலி என்பவரைப் புதுச்சேரி கவர்னராக நியமித்தனர். இவர் இந்தியாவில் வந்திறங்கினபோது, இவர்களுடைய கட்சி பலத்தில் மிகவும் மாறுதல் காணப்பட்டது. இதற்குள் ஆங்கிலேயர் தம் அதிகாரத்தை வங்காளத்தில் ஸ்திரமாக்கி விட்டார்கள்; தென்னிந்தியாவிலும் அவர்களே மிகவும் பலாட்டியராக விருந்தார்கள்.

**மூன்ருவது கர்னுடக யுத்தம்:**—லாலி ஸெயின்ட் டேவிட் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார். பின் ஹைதராபாத்திலிருந்த புஸ்ஸியை வரவழைத்து, சென்னையை முற்றுகையிடும்படி அவர் தலைமையில் ஒரு சேனையை அனுப்பினுர். லாலி இவ்வாறு புஸ்ஸியை வரவழைத்ததனுல் ஹைதராபாத்திலிருந்து ஒருவித உதவியையும் பெறமுடியாதவர் ஆனுர். மேலும் பிரான்சிலிருந்தும் சரியான உதவி கிடைக்காமல் போயிற்று. இவற்ருல் பிரெஞ்சுக்காரரின் நிலை மிகவும் பரிதாபகரமானதாயிற்று. புஸ்ஸியால் சென்னையையும் பிடிக்க முடியவில்லை. 1760-ல் வந்தவாசி யென்ற விடத்தில் நடந்த சண்டையில் அவரை ஸர் அயர் கூட் (Sir Eyre Coote) என்ற இங்கிலிஷ் தளகர்த்தர் வென்ருர். அடுத்த வருஷம் புதுச்சேரியும் ஆங்கிலேயர் வசமாயிற்று. கிளைவ் வங்காளத்

திலிருந்து அனுப்பிய சைன்யம் கர்னல் போர்டு தலைமையில் பிரெஞ்சுக்காரரைத் தோற்கடித்து, வட ஸர்க்காரைக் கைப்பற்றினர் (1758). வங்காளத்திலும் கிளைவ் பிரெஞ்சுக் காரருக்குச் சொந்தமான சந்திரநாகூரைப் பிடித்துக் கொண்டார். இவ்வாறு பிரெஞ்சு நிலைமை சீர்குலைந்ததற்கு லாலியின் திறமையின்மையே காரணமென்றெண்ணி அத்துரைத்தனத்தார் அவரைத் திரும்பி வருமாறு உத்தரவிட்டதோடு, தங்கள் செல்வாக்கும், அதிகாரமும் இந்தியாவில் குறைந்ததற்கு அவரே காரணமென்று அவருக்கு மரணதண்டனை விதித்தனர் (1766).

1763-ல் ஐரோப்பாவில் ஏற்பட்ட பாரிஸ் சமாதானத்தால், இந்த யுத்தம் முடிவுக்கு வந்தது. அதன் பிரகாரம் ஆங்கிலேயர்கள் புதுச்சேரி, சந்திரநாகூர் முதலிய இடங்களைப் பிரெஞ்சுக்காரருக்கே கொடுத்துவிட்டனர். அப்படிச் செய்தும் அவர்களுடைய வியாபாரமும் ராஜ்யாதிகாரமும் க்ஷீணித்தது.

பிரெஞ்சு அதிகாரத்தின் அழிவு:—பிரெஞ்சு வியாபாரம் நசித்துப்போனதற்கும், அவர்கள் ஸ்திரமான ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்த முடியாமற் போனதற்கும் பல காரணங்கள் உண்டு. டூப்ளே நுட்ப புத்தியுள்ளவராகவும், திறமைசாலியாகவும் இருந்து காரியங்களை நடத்திவந்தார்; ஆனால் அவருக்குப்பின் வந்தவர்கள் திறமையற்றவர்களா யிருந்ததாலும், துரதிருஷ்டத்தாலும், அவர்கள் ஜயம்பெற முடியவில்லை. ஆங்கிலேயக் கட்சியில் லார்டு கிளைவ், ஸர் அயர் கூட் முதலிய பல தலைவர்கள் போர்செய்யும் வலிமையும், புத்திசாலித்தனமும் உள்ளவர்களாக இருந்தார்கள். பிரெஞ்சுக் கம்பெனி நிர்வாகத்திலும் பல குறைகளிருந்தன; அதனால் சமயத்திற்கேற்ற காரியங்களைச் செய்யப் போதுமான பணமும் உதவியும் கிடைக்க

வில்லை. மேலும் பிரெஞ்சுக்காரர் புதுச்சேரியிலிருந்து, இந்திய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க முயன்றது கைகூடாத காரியமாகும். வடக்கே ஆப்கானிஸ்தானம் முதலிய விடங்களில் பலமுள்ள சுதேச ராஜ்யங்கள் ஏற்பட்டதால் இனித் தரைமார்க்கமாய் இந்தியா மீது எவரும் படையெடுக்க முடியாது. சமுத்திர மண்டலாதிபத்தியம் பெற்றவர்களே வரக்கூடும். அதனால் கடலில் வலிமை படைத்த ஆங்கிலேயர் வங்காளத்தில் முதலில் நிலைபெற்றுக் கொஞ்சங் கொஞ்சமாய் உள்நாடுகளையும் தம் வசமாக்கிக்கொள்ள முடிந்தது. பிரெஞ்சுக்காரர் ஆங்கிலேயருடைய கடல் பலத்தை மீறி ஒன்றும் செய்ய முடியவில்லை. மேலும் பிரெஞ்சு துரைத்தனமும், ஏககாலத்தில் அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பா மூன்றிடத்திலும் தம் கவனத்தைச் செலுத்த வேண்டியிருந்ததால் இந்திய விஷயங்களைத் தீவிரமாய்ப்பார்க்க முடியாமல் போயிற்று. இவற்றால் டூப்ளேயின் மனோராஜ்யமும், பிரெஞ்சு அதிகாரமும் இந்தியாவில் க்ஷீணித்தன.

---

## அத்தியாயம் 3

---

### ஆங்கிலேயர் வங்காளத்தைப் பெறுதல்

**ஸிராஜ் உத் தௌலாவும் ஆங்கிலேயர்களும் :**—வங்காளத்தில் முதன் முதல் எவ்வாறு ஆங்கிலேயர் தம்முடைய வியாபார ஸ்தலங்களை மொகலாய சக்கரவர்த்திகளின் அனுமதியின்பேரில் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று நீங்கள் வாசித்திருக்கக் கூடும். வங்காள நவாப்பான அலிவர்டிகான் 1756-ல் இறந்ததும், அவருடைய பேரப்பிள்ளையான ஸிராஜ் உத் தௌலா நவாப் ஆனார். இவர் மிகவும் கொடூர சிந்தையுள்ளவர்; அதனால் தாம் நவாப்பான

சில வருஷங்களில் அங்கே வர்த்தகம் செய்து வந்த ஆங்கிலேயர்களோடு சண்டையிடலானுர். இவர் ஆங்கிலேயரிடம் வெறுப்படைந்து அவர்களைக் கல்கத்தாவிலிருந்து துரத்த நிச்சயித்தார். ஆங்கிலேயரும், சந்திரநாகூரிலுள்ள பிரெஞ்சுக்காரருக்குப் பயந்துகொண்டு, நவாப்பின் அனுமதியின்றித் தம் பண்டகசாலைகளையும், வர்த்தகக் கோட்டைகளையும் பலப்படுத்திக் கொண்டனர். அதோடு நவாப்புக்கு விரோதியான கிருஷ்ணதாஸ் என்ற இந்துவுக்குத் தஞ்சமளித்தார்கள். இவற்ருல் நவாப் கம்பெனி உத்தியோகஸ்தர்மீது கோபம் கொண்டு, காஸிம்பஸார் பண்டகசாலையைத் தன் வசப்படுத்திக் கொண்டு, கல்கத்தாவையும் முற்றுகையிடும்படி ஒரு சேனையை அனுப்பினுர். அங்கிருந்த கவர்னரும், மற்றும் பலரும் படகுகளிலேறிச் சென்று தப்பித்தனர். எஞ்சியிருந்தவர்களை நவாப் மிகவும் கொடுமையாக நடத்தினுர்.

கிளைவும் வாட்ஸனும் வங்காளம் போதல் :—இச்செய்தி சென்னைக் கெட்டியதும், கிளைவ், வாட்ஸன் என்ற இருவரும் வங்காளத்திற்குத் தம் சேனையோடு சென்று, நவாப்பைத் தோற்கடித்து, திரும்பவும் கல்கத்தாவைப் பிடித்துக்கொண்டனர். ஸிராஜ் உத் தெளலாவும் அவர்களோடு சண்டையிடுவது கஷ்டமென்றறிந்து சமாதானமானுர். பிரெஞ்சுக்காரரோடு கூடிய சீக்கிரத்தில் சண்டை செய்ய வேண்டியிருக்கும் என்று எதிர்பார்த்து, ஆங்கிலேயரும் சமாதானத்திற் கிசைந்தார்கள். அதன்படி நவாப் முன்போலவே கம்பெனியின் உரிமைகளையும் சொத்துக்களையும் கொடுத்துவிட்டார். இதல்லாமல் இங்கிலிஷ்காரர் தம்முடைய கோட்டைகளை பலப்படுத்திக் கொள்ளவும், சொந்த நாணயம் உபயோகிக்கவும் அனுமதியளித்தார் (1757).

பிளாஸி சண்டை :—மேலே விவரித்தபடி சமாதானம் ஏற்பட்டும், நவாப் ஆங்கிலேயரைத் துரத்துவதற்கான ஏற்பாடுகளை பிரெஞ்சுக்காரரோடு ஆலோசித்து வந்தார். இதற்குள் இங்கிலாந்தில் ஏழு வருஷப் போர் தொடங்கவே, வங்காளத்திலும் பிரெஞ்சுக்காரரால் இடையூறுவருமோ என்றெண்ணி, கிளைவ் அவர்களுடைய வர்த்தக ஸ்தலமாகிய சந்திரநாகூரைக் கைப்பற்றினார். மேலும் ஸிராஜ் உத்தௌலாவைச் சிங்காதனத்திலிருந்து நீக்கிவிடுவதென்று நவாப்பின் சேனாதிபதியான மீர்ஜாபரோடு இரகசியமாய் ஆலோசித்து வந்தார். இதனைக் கூடவிருந்து செய்வித்தவர் ஓமிச்சந்து என்பவராவர்.

இப்படி நவாப்புக்கு விரோதமாய்ச் சதியாலோசனை செய்து கொண்டு, கிளைவ் சுமார் மூவாயிரம் பேரடங்கிய சேனையோடு நவாப்பின் தலைநகரான மூர்ஷிதாபாத்தை நோக்கிச் சென்றார். நவாப்பும் பெரிய சேனையோடு போருக்கு ஆயத்த மானார். 1757-ம் ஜூன் மாதம் 23-ம் தேதி கிளைவ் பிளாஸி என்ற தோப்புக்கருகில் தங்கியிருந்தார். நவாப் திடீரென்று போரை ஆரம்பித்தார். ஆனால் துரதிருஷ்டவசமாக அன்று மழை பெய்து, வெடிமருந்து ஈரமாய்ப் போனதால், நவாப்பின் சேனையால் ஒன்றும் செய்யமுடியவில்லை. எதிரிகளின் நிலையும் இப்படித்தானிருக்கு மென்றெண்ணிச் சென்ற நவாப்பின் தளகர்த்தன் இங்கிலிஷ் வீரர்களால் கொலையுண்டான். மீர் ஜாபர் முதலியோரும் கிளைவோடு செய்துகொண்ட ரகசிய ஏற்பாட்டின்படி சண்டையிடாமல் ஓடி விட்டனர். இவ்வாறு நவாப் கைவிடப் படவே, அவரும் உயிர்பிழைப்பதற்காக யுத்தகளத்திலிருந்து ஓட்டமெடுத்தார். இவ்வாறு எதிர்பாராத வெற்றி மிகவும் சுலபமாக ஆங்கிலேயருக்குப் பிளாஸி சண்டையில் கிடைத்தது.

உடனே கிளைவ் மூர்ஷிதாபாத்தைக் கைக்கொண்டு மீர் ஜாபரை நவாப் ஆக்கினார். இதுமுதல் வங்காளத்திலும் பிற விடங்களிலும் இங்கிலிஷ் ஆதிக்கம் வலுப்பதற்குரிய நன்மை இவ் வெற்றியாலுண்டாயிற்று.

மீர் ஜாபர் நவாபாதல் :—இங்கிலிஷ்காரரின் உதவியால் நவாப் ஆன மீர் ஜாபர், அவர்கள் செய்த உதவியைப் பாராட்டி அவர்களுக்கு ஏராளமான பொருளுதவி செய்ததுமல்லாமல் 24 பர்காணங்கள் என்ற நாடுகளின் ஜமீன் சுதந்தரத்தையும் கொடுத்தார். சில வருஷங்களுக்குப் பிறகு அதனையே கிளைவுக்கு ஜாகீராகக் கொடுத்தார் ; அதனால் இதுவரையிலும் கம்பெனியார் நவாப்புக்குச் செலுத்திவந்த வரிகளைக் கிளைவ் தம் ஜீவிய காலமட்டும் அடைந்துவந்தார். அவருக்குப் பிறகு அப் பிரதேசம் கம்பெனியாரின் வசத்தில் வந்தது. இவ்விதமாக இந்தியாவில் மிக்க செழிப்புள்ள ஓர் நாட்டின் ஆதிபத்தியத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

மீர்ஜாபரின் ஆட்சி :—தன் பணத்தை யெல்லாம் நவாப் பதவியைப் பெறுவதில் செலவழித்த மீர் ஜாபர், மிகுந்த கடனாளியாகிக் குடிகளைத் துன்புறுத்தி வரி தண்டலானார். அதனால் ராஜ்ய மெங்கும் அமைதி குன்றிக் கலகமேற்படும்போலிருந்தது. சுருங்கக் கூறுமிடத்து, ஆங்கிலேயரின் உதவி யின்றி ஆள முடியாதவரானார். இச்சமயத்தில்,மொகலாய சக்கரவர்த்தியின் பிள்ளையான ஷா ஆலம் அயோத்தி நவாப்பையும் சேர்த்துக்கொண்டு வங்காளத்தின்மேல் 1760-ல் படையெடுத்தார். மீர் ஜாபர் லஞ்சம் கொடுத்துவிட எண்ணியும், கிளைவ் அவர்களை முறியடித்து வங்காளத்தினின்றும் துரத்தினார். அப்படி யிருந்தும், ஆங்கிலேயர் இவ்வாறு பலாட்டியர்களா யிருப்பது தமக்கு அபாயம் விளைவிக்குமென் றெண்ணி, மீர்ஜாபர்

சின்ஸுராவிலிருந்த டச்சுக்காரரோடு ஆங்கிலேயரைத் துரத்துவதற்கான ஆலோசனை புரிந்துவந்தார். இதையறிந்த கிளைவ் டச்சுக்காரரை ஜயித்து, சின்ஸுராவையும் பிடித்துக்கொண்டார். இதோடு இந்தியாவில் டச்சு வியாபாரமே அற்றுவிட்டது.

மீர் காஸிம் நவாப்பாதல் :—மீர் ஜாபர் பலவீனமாயிருப்பதையும், வேறு ஒருவரை நவாப்பாக்கினால் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய லாபத்தையும் அறிந்த கம்பெனியார் மீர்ஜாபரைப் பட்டத்திலிருந்து நீக்கி, அவருடைய மருமகனான மீர்காஸிமை நவாப்பாக்கினர். இவரும் கம்பெனியார் தமக்குச் செய்த நன்மைக்குப் பதிலாக, பர்ட்வான், சிட்டகாங், மிதுனபுரி என்ற ஜில்லாக்களைக் கொடுத்தார். மீர் காஸிம் கூடிய மட்டில் கம்பெனி விஷயங்களில் தலையிடாமல், திறமையாக ஆட்சி செய்தார். ஆனாலும் கம்பெனியார் தம் இஷ்டம்போல் காரியங்களைச் செய்வதைப் பொறுக்காமல், விரோதம் கொள்ளலானார்.

கம்பெனியாரின் அநீதச் செயல்கள் :—கம்பெனி உத்தியோகஸ்தர்கள் நவாப்பிடமிருந்து பெற்ற வர்த்தக உரிமைகளைத் தகாத வழிகளில் உபயோகித்து வந்தனர். கம்பெனிச் சரக்குகளைச் சுங்கமின்றி வர்த்தகம் செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட அனுமதிச் சீட்டுகளைத் தம்சொந்த வியாபாரத்துக்கு உபயோகித்து வந்தனர். மேலும், அவற்றைச் சுதேசி வர்த்தகர்களுக்கும் கொடுத்துதவினார்கள். இச் செயல்களால் கம்பெனி வர்த்தகமே அன்றி, நவாப்பின் வருமானமும் குறைந்தது. மீர் காசிம் கம்பெனியாரின் நடத்தையைப்பற்றிக் கல்கத்தாவிலுள்ள நிர்வாக சபைக்குப் புகார் செய்தும் பயன்படவில்லை. அதனால் அவர் எல்லாரிடத்தும் தீர்வை வாங்காமல் விட்டுவிட்டார். இதனால் கம்பெனி வர்த்தகம் குறையவே, இந்திய வர்த்தகர்களிடம் வரி வாங்க


வேண்டுமென்று கம்பெனியார் வற்புறுத்தினார்கள். அதற்கு நவாப் இணங்காததால் சண்டை ஆரம்பித்தது.

மீர் காசிம் உடனே பாட்னாவிலுள்ள ஆங்கிலேயரை யெல்லாம் சிறைப்படுத்திக் காசிம் பஸாரிலுள்ள பண்டக சாலையைக் கைப்பற்றினார். உடனே ஓர் ஆங்கிலேயப் படை பாட்னாவுக்கு அனுப்பப்பட்டது. இப்படை வருமுன்னரே தம் வசத்திலிருந்த சிறையாளிகளை நவாப் படுகொலை செய்தார். அதன் பிறகு ஆங்கிலப்படை மீர் காசிமைத் தோற்கடித்துப் பாட்னாவை மீட்டுக்கொண்டது. மீர் காசிம் அயோத்தி நவாப்பான ஷுஜா உத் தௌலா விடம் சரண்புகுந்தார் (1763).

பக்ஸார் சண்டை :—உடனே அயோத்தி நவாபும், மொகலாய சக்கரவர்த்தியான ஷா ஆலமும் மீர்காசிமுக்கு உதவியாகக் கம்பெனியாரோடு போர் புரிந்தார்கள். 1764-ம் ஹூ இம்மூவரும் மிகுந்த ஊக்கங்கொண்டு ஆங்கிலேயரைப் பக்ஸார் என்னுமிடத்தில் தாக்கினார்கள். ஆங்கிலச் சேனை இவர்களை இலேசாக வென்றது. மீர் காசிம் யுத்தகளத்தினின்றோடிவிட்டார். ஷா ஆலம் ஆங்கிலேயரோடு சமாதானமானார். ஷுஜா உத் தௌலா மறுபடியும் ஒரு சேனையோடு வந்து, கோரா என்னுமிடத்தில் நடந்த சண்டையில் தோல்வியடைந்தார் (1765). வெற்றியடைந்த கம்பெனியார் மீர் ஜாபரை மறுபடியும் வங்காள நவாப் ஆக்கினார்கள். இவ்வாறு ஒரு நவாப்பை நீக்கவும், மற்றொருவரை நியமிக்கவும் கம்பெனியார் அதிகாரமுடையவரானார்கள்.

அலஹபாத் உடன்படிக்கை :—இதன் பிறகு ஷா ஆலமும், ஷுஜா உத் தௌலாவும் 1765-ல் ஆங்கிலேயரோடு அலஹபாத் உடன்படிக்கையைச் செய்துகொண்டார்கள். அதன்படி அயோத்தி நவாப் கம்பெனியாரின் செலவுக்காக 50 லக்ஷம் ரூபாய் கொடுப்பதாகவும், வரி

யின்றித் தம் ராஜ்யத்தில் ஆங்கிலேயரை வர்த்தகம் செய்ய அனுமதிப்பதாகவும் ஒப்புக்கொண்டு, அயோத்தியை மீட்




இந்தியா—1765.

டுக் கொண்டார். மேலும் இவர் கோரா, அலஹபாத் ஜில்லாக்களை மொகலாய சக்கரவர்த்தியான ஷா ஆலத்திற்குக் கொடுத்தார். பீஹார், ஒரிஸ்ஸா, வங்காளம் என்னுமிடங்



கிளைவ் திவானி பெறுதல்

களில் வரி வசூல் செய்யும் (திவானி) உரிமையை ஷா ஆலம் கம்பெனியாருக்குக் கொடுத்தார். மேலும் வட ஸர்க்காரை ஆங்கிலேயர் சாஸ்வதமாய் வைத்துக்கொள்ளுமாறு சாஸனம் செய்து கொடுத்தார். இவற்றிற்கு ஈடாகக் கம்பெனியாரும் ஷா ஆலத்திற்கு வருஷ வாரி 26-லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் தரவும், தங்கள் மேற்பார்வையில் கோரா, அலஹபாத் ஜில்லாக்களை ஷா ஆலம் வைத்து ஆளவும் இசைந்தார்கள். இந்தவிதமாக நவாப்புகளோடு செய்து கொண்ட ஏற்பாடுகளால் வங்காளத்தின் ஆட்சி, உள்ளபடி கம்பெனியாரின் கீழ் வந்ததென்றே கூறலாம். ஷாஆலமும், அவருடைய சந்ததியாரும் 1858 வரை பெயரளவில் மொகலாய சக்ரவர்த்திகளா யிருந்தார்களே ஒழிய, உண்மையில் அவர்கள் இங்கிலிஷ்காரரின் அபிவிருத்திக்குத் தடையா யில்லாமல், அவர்களுக்குட்பட்டு உபகாரச் சம்பளம் பெறுபவர்களாகவே இருந்தார்கள்.

வங்காளத்தில் இரட்டை ஆட்சி (1765—1767):— அலஹபாத் உடன்பாட்டின்படி பீஹார், ஓரிஸ்ஸா மாகாணங்களில் வரி வசூலிக்கும் உரிமை ஆங்கிலேயருக்குக் கிடைத்தது முதல் அவர்கள் வியாபாரமொன்றையே கவனிப்பதென்பதை விட்டு, இந்திய துரைத்தனக் காரியங்களையும் மேற்கொள்ளலானார்கள். இக்காரியங்களைச் சரிவர நடத்துவதற்காகக் கிளைவ், 'இரட்டை ஆட்சி' என்ற நூதனமான ஏற்பாட்டை உண்டுபண்ணினார். அதன்படி நவாப் நீதி பரிபாலனம் செய்து, குடிகளிடமிருந்து வரி வசூலிக்க வேண்டுமென்றும், அவ்வாறு வசூலிக்கப்பட்ட பணத்தைச் செலவு செய்வதும், ராணுவம் வைத்து நாட்டைப் பாதுகாப்பதும் ஆகிய வேலைகளைக் கம்பெனியார் கவனிக்க வேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று. இதனால் கம்பெனியார் ராணுவச் செலவு போக மிகுந்த

பணத்தைத் தாங்களே அடைந்து வந்தனர். மற்றும் வங்காள நவாப் பெயருக்கு மாத்திரம் நவாப்பாக இருந்தாரே ஒழிய, உண்மையில் கம்பெனிக்கடங்கிய வரி வசூலிக்கும் உத்யோகஸ்தர் போலானார்.

கிளைவ் செய்த சீர்திருத்தங்கள் :—கிளைவ் வங்காள கவர்னராக விருந்து ராஜீய ஏற்பாடுகளைச் செய்த பிறகு கம்பெனி விஷயங்களையும் கவனிக்கலானார். கம்பெனியின் நிர்வாஹத்தில் பல குறைகள் காணப்பட்டன. கம்பெனி உத்தியோகஸ்தர்கள், கம்பெனியின் லாபத்தைக் கவனிக்காமல் தம் சொந்த முறையில் வியாபாரம் செய்துவந்தார்கள் ; சுதேசி அரசர் முதலியோரிடத்தில் லஞ்சம் வாங்கி வந்தனர். இவற்றால் கம்பெனிக்குப் பெருத்த நஷ்டம் உண்டாயிற்று. இவ்வாறு சீர்கேடான நிலையில் இருக்கும் கம்பெனியைச் சீர்த்திருத்தம் செய்யக் கிளைவ் விரும்பினார். இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணம் உத்தியோகஸ்தர்களின் குறைந்த சம்பளமே என்றுணர்ந்த கிளைவ், அவர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்குரிய ஏற்பாடு செய்தார். பின்னும் கம்பெனி உத்தியோகஸ்தர் எவரும் லஞ்சம் அல்லது வெகுமானம் வாங்குவதும், சொந்த வர்த்தகம் செய்வதும் கூடாதென்றும் திட்டம் செய்தார். உப்பு வியாபாரம் செய்வதை ஒரு சங்கத்தாரிடம் விட்டு, அதில் வரும் லாபத்தை உத்தியோகஸ்தர்களுக்குப் பங்கிட்டுத் தர வேண்டுமென ஒழுங்கு செய்தார். இதற்கு முன் கம்பெனியார் உப்பு வியாபார உரிமையை வைத்துக்கொண்டு, உப்பின் விலையை உயர்த்தி வந்ததால் ஜனங்கள் மிகவும் கஷ்டத்திற் குள்ளானார்கள். கிளைவ் செய்த ஏற்பாட்டால் ஏழை ஜனங்கள் மிகவும் சவுக்கியமடைந்தார்கள். ராணுவ உத்தியோகஸ்தர்கள் பெற்று வந்த இரட்டைப் படியை நிறுத்தி, ஒற்றைப் படி (Single


batta)யே இனித் தரவேண்டுமென விதித்தார். கிளைவ் செய்த மாறுதல்கள், சில வருஷங்களாகச் சொந்த வியாபாரம் செய்தும், வெகுமானம் வாங்கியும் வந்த உத்தியோகஸ்தர்களுக்குள் மிகவும் பரபரப்பை யுண்டுபண்ணிற்று. ஆயினும் கம்பெனியின் நன்மைக்கு இவைகள் மிகவும் அவசியமாயிருந்தன. இத்தகைய சீர்திருத்தங்களைச் செய்துவிட்டு, கிளைவ் 1765-ல் கடைசியாக இங்கிலாந்து சென்றார்.

---

## அத்தியாயம் 4

### வாரன் ஹேஸ்டிங்க்ஸ்

ஹேஸ்டிங்க்ஸ் வங்காள கவர்னராதல் :—கிளைவ் ஏற்படுத்திய இரட்டை ஆட்சியால், கம்பெனிக்கு அதிக லாபம் கிடைத்த போதிலும் அதனால் குடிகள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளானார்கள்; தாங்க முடியாத வரிச்சுமை அவர்களுக் கேற்பட்டதுடன், அவ்வரிகளை வசூலிக்கும் விதங்களும் மிகவும் கடுமையாக விருந்தன. வருஷத்துக்கு வருஷம் விதிக்கப்படும் வரி வித்தியாசப்பட்டதால் குடிகளும் தாங்கள் செலுத்த வேண்டிய வரி இவ்வளவென்று தெரிந்துகொள்ள



வாரன் ஹேஸ்டிங்க்ஸ்

முடியவில்லை; கம்பெனியின் வருமானமும் அதற்கேற்றவாறு வித்தியாசப்பட்டதால், தங்களுக்கு இவ்வளவு வரும் என்று கம்பெனியாரும் அறிய முடியவில்லை. இதன் மத்தியில் 1770-ல் வங்காளத்தில் ஒரு கொடிய பஞ்ச முண்டாயிற்று.

அதனால் கம்பெனியின் நிலைமையைச் சீர்திருத்தும் பொருட்டு வாரன் ஹேஸ்டிங்க்ஸ் 1772-ல் ஸ்ரீ வங்காள கவர்னராக நியமிக்கப்பெற்றார். கிளைவைப் போலவே இவரும் இளம்பிராயத்திலேயே கம்பெனி உத்தியோகத்தில் அமர்ந்தவர். ஆதலால் இவருக்கு இந்திய விஷயங்களில் நிரம்பிய அனுபவமிருந்தது.

ஹேஸ்டிங்க்ஸ் செய்த சீர்திருத்தங்கள் :—கிளைவ் ஏற்படுத்திய இரட்டை ஆட்சி நன்றாக நடைபெறாததை நன்குணர்ந்தவராதலால், தாம் கவர்னராக வந்ததும், ஹேஸ்டிங்க்ஸ் அத்திட்டத்தை ஒழித்தார். நவாப்பின் உத்தியோகஸ்தர்களை வரிவசூலிப்பதிலிருந்து நீக்கி, அவ்வேலையைக் கவனிக்கும்படி ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு கலெக்டரை நியமித்தார். எல்லா ஜில்லாக்களின் வரிவசூல் விஷயங்களையும் மேற்பார்வையிட ரேவினியூ போர்டு (Board of Revenue) ஒன்றைக் கல்கத்தாவில் உண்டாக்கினார்.

ஒவ்வொரு ஜில்லா கலெக்டரும் நியாயாதிபதியாக விருந்து கிரிமினல், ஸிவில் வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பளிக்கும்படி ஏற்பாடு செய்தார். இவர்களுக்கு மேல் கிரிமினல் அப்பீல் கோர்ட்டும் (Sadr Nizamat Adalat), ஸிவில் அப்பீல் கோர்ட்டும் (Sadr Diwani Adalat) அமைக்கப்பட்டன. மேலும் நீதிபரிபாலனம் செவ்வையாக நடக்கும் பொருட்டு, பண்டிதர்களையும், மௌல்விகளையும் கொண்டு, இந்து மகமதிய சட்டங்

களை முறையே ஒழுங்குபடுத்திப் புத்தக ரூபமாக வெளியிடுமாறு செய்தார்.

கம்பேனி நிர்வாஹம் பார்லிமேண்டுக்கு வருதல்:— கம்பெனியார் செய்த பல போர்களாலும், அலஹபாத் உடன்படிக்கைக்குப் பிறகு துரைத்தனக் காரியங்களையும் நடத்தவேண்டி வந்ததாலும், அவர்களுக்கு வரவுக்கு மிஞ்சின செலவு ஏற்பட்டது. இதனால் கம்பெனி அதிகாரிகள் ஒரு கோடி ரூபாய் கடன் தரும்படி பிரிட்டிஷ் பார்லிமெண்டாரைக் கேட்டனர். கொஞ்சகாலமாகவே வர்த்தகக் கூட்டத்தினர் ராஜ்ய பரிபாலனம் செய்யத் தகுதியற்றவர்கள் என்று பலர் இங்கிலாந்தில் எண்ணி வந்தார்கள்; அதனால் பலருக்குக் கிழக்கு இந்தியக் கம்பெனி விஷயங்களைத் தணிக்கை செய்யவேண்டுமென்ற அபிப்பிராயம் இருந்து வந்தது. இத்தகைய நிலைமையில் கம்பெனியார் பார்லிமெண்டைக் கடன் கேட்டதானது பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கோர் அரிய சந்தர்ப்பமாயிற்று. ஆகையால் பார்லிமெண்டு சபையார் வர்த்தகக் கம்பெனிக்குப் பணம் கடன் கொடுத்ததோடு, அதுமுதல் தங்கள் நிர்வாஹத்தின் கீழ்க் கம்பெனி இருந்துவர வேண்டுமென்று சில திட்டங்களை ஏற்படுத்தினார்கள்.

ரேகுலேட்டிங் ஆக்டு:—இவ்வாறு பிரிட்டிஷ் பார்லிமெண்டு இயற்றிய சட்டமே 'ரேகுலேட்டிங் ஆக்ட்' என்ற ஒழுங்கு படைச் சட்டமாகும். அதன்படி வங்காள கவர்னர் இந்தியாவின் கவர்னர் ஜெனரலானார்; இவருக்கு உதவியாக நான்குபேர் கொண்ட ஒரு மந்திராலோசனை சபை ஏற்பட்டது. இச்சபையின் அங்கத்தினர்கள் ஐந்து வருஷம் உத்தியோகம் வஹிக்கலாம். ராஜாங்க காரியங்கள் யாவும், இவர்களில் பெருவாரி (Majority) யானபேர்களால் அங்கீகரிக்கப்படவேண்டும். சாமானியமாய் கவர்னர்-

ஜெனாலுக்கு வாக்குரிமை கிடையாது; ஆனால் இவர்கள் நால்வரில் இருவர் ஒருவிதமாகவும் மற்றிருவர் ஒருவித மாகவும் அபிப்பிராயங்கொண்டால், கவர்னர் ஜெனாலுக்கு வாக்குரிமை (Casting Vote) உண்டு. அதை அவர் யுக்த மானபடி உபயோகிக்கலாம். இதுமுதல் சென்னை, பம்பாய் மாகாண கவர்னர்கள் கவர்னர் ஜெனாலுக்கடங்கி நடக்க வேண்டியதாயிற்று. இதுவரையிலும் ஒரு மாகாணத்தில் கம்பெனியாருடைய விரோதிகளிடம், மற்ற மாகாணங் களில் உள்ள ஆங்கிலேயர் உறவாடியதும் உண்டு. அவ்வாறு செய்யாமல் எங்கும் ஒரே விதமான காரியங்களைச் செய் வதற்கு இது மிகவும் அவசியமாயிற்று.

இச்சட்டத்தின்படி ஆங்கில மன்னரால் நியமிக்கப் பட்ட ஜட்ஜுகள் அடங்கிய நீதிஸ்தலம் (Supreme Court) ஒன்று கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. மேலும் சுதேச ராஜ்யங்களோடு பார்லிமெண்டின் ஆலோசனையின்றிச் சண்டையாவது, சமாதானமாவது செய்யக்கூடாதென்று விதிக்கப்பட்டது. கம்பெனி சட்ட திட்டங்களை ரத்து செய்யவும், மந்திராலோசனை சபை அங்கத்தினர்களை நியமிக்கவும் பார்லிமெண்டே அதிகாரம் வகித்தது. இத்தகைய சட்டம் 1774-ல் அமுலுக்கு வந்தது. இதன் படி ஹேஸ்டிங்ஸே முதல் கவர்னர் ஜெனரலானார்.

முதல் மைசூர் யுத்தம் (1767-1769) :—கிளைவ் இந்தியா விலிருந்து திரும்பிப் போகும் சமயத்தில் (1767) மைசூரை ஆண்ட ஹைதர் அலியோடு சண்டை ஆரம்பமாகும்போல் இருந்தது. அதனால் சென்னையிலுள்ள ஆங்கிலேயர் ஹைதரால் தமக்குக் கெடுதி நேரக் கூடுமென்றெண்ணி, தக்ஷிணத்தையாண்ட நிஜாம் அலியோடும், பீஷ்வாவான முதல் மாதவராவோடும் ஹைதருக்கு விரோதமாக உடன் படிக்கை செய்துகொண்டார்கள். ஆனால் இம் மூவர்

சேர்க்கை நீடித்து நிற்கவில்லை. ஹைதர் மஹாராஷ்டிரரை லஞ்சம் கொடுத்துப் பிரித்தான்; பின் நிஜாம் அலியும் ஆங்கிலேயரைக் கைவிட்டு, ஹைதரோடு சேர்ந்துகொண்டான். தனித்து இருந்து ஆங்கிலேயர் ஹைதரோடு சண்டையிட வேண்டியதாயிற்று. ஆயினும் அவர்கள் கர்னல் ஸ்மித் தலைமையில் ஹைதரைச் செங்கம்மா, திருவண்ணாமலை என்றவிடங்களில் முறியடித்தனர். பின் கர்னல் ஸ்மித் சென்னைக்குத் திரும்பிவிடவே, 1769-ல் ஹைதர் திடீரென்று சென்னையைத் தாக்கினான்.



ஹைதர் அலி

ஆங்கிலேயர் செயலற்று அவனோடு சமாதானஞ் செய்துகொண்டனர். அப்போது அன்னியர் தங்களில் யாரையாவது எதிர்த்தால், பரஸ்பரம் ஒருவர்க்கொருவர் உதவி புரிவதாக இருவரும் ஒப்புக் கொண்டார்கள்.

ஹைதரும் மஹாராஷ்டிரரும் :—அடுத்த வருஷமே மஹாராஷ்டிரர்களால் தொந்தரவை யடைந்த ஹைதர் உடன்பாட்டின்படி ஆங்கிலேயரை உதவிபுரியுமாறு கேட்டான். உடன்பாட்டின்படி ஆங்கிலேயர் உதவி புரியாததால், ஹைதர் மேலக் கோட்டை என்னுமிடத்தில் தோல்வி யடைந்ததோடு, மஹாராஷ்டிராருக்கு மிகுந்த பணம் கொடுக்க வேண்டியதாயிற்று. இதுமுதல் ஹைதர் ஆங்கிலேயரிடம் விரோதங் கொள்ளலானான்.

சூரத் : புரந்தர் உடன்படிக்கைகள் :—பம்பாயிலிருந்த ஆங்கிலேயர் பல வருஷங்களாக ஸால்ஸெட் என்னுமிடத்தைக் கைப்பற்ற விரும்பினார்கள். இதனைப் போர்ச்சுகீசியரிடமிருந்து மஹாராஷ்டிரர் அபகரித்துக்கொண்டிருந்


தார்கள். அவர்களிடமிருந்து ஆங்கிலேயர் வலிந்து 1774-ல் ஸால்ஸேட், பாஸீன் என்னுமிடங்களைக் கைப்பற்றினார்கள். இது இப்படியிருக்க, 4-வது பீஷ்வா ஆன மாதவ ராவ் 1772-ல் இறக்கவே, அவருடைய சகோதரர் நாராயண ராவ் பீஷ்வா ஆனார். அவரும் கொஞ்ச நாளில் கொலைப்படவே அவருடைய சிற்றப்பனான ராகோபா (ரகுநாதராவ்) பீஷ்வா ஆனார். அப்போது நாட்டில் இவருக்கு விரோதமாக நானா பர்னவிஸ் தலைமையில் ஒரு கட்சி ஏற்பட்டது. அவர்கள் இறந்து போன நாராயண ராவின் பிள்ளையான 2-வது மாதவ ராவ் தான் பீஷ்வா பட்டத்திற் குரியவனென்று வாதித்தார்கள். இவர்களால் துரத்தப்பட்ட ரகுநாத ராவ் பம்பாய் கவர்ன்மெண்டாரிடம் தஞ்சம் புகுந்து, அவர்களோடு சூரத் உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அதன்படி அவர்களுக்கு ஸால்ஸெட், பாஸீன் என்ற நகரங்களைக் கோடுப்பதாகவும், ஆங்கிலேயர் தமக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் ஒப்புக்கொண்டார். இதுநிற்க நானா பர்னவிஸ் கட்சியார் 1776-ல் ஆங்கிலேயர் மஹாராஷ்டிர விஷயங்களில் தலையிடாதிருப்பின் ஸால்ஸெட்டைக் கொடுப்பதாகப் புரந்தர் என்னுமிடத்தில் கல்கத்தாவிலுள்ள ஸுப்ரீம் கௌன்ஸிலுடன் உடன்பாடு செய்து கொண்டனர். இதே சமயத்தில் தங்களோடு சேர்ந்து கொண்டால் மஹாராஷ்டிரர்களுக்குத் தம் சேனையை உதவுவதாகப் பிரெஞ்சுக்காரர் தெரிவித்தார்கள். இதனால், மிகவும் திகிலடைந்த பிரிட்டிஷ் துரைத்தனத்தார் சூரத் உடன்பாட்டை ஒப்புக்கோண்டு, மஹாராஷ்டிரரோடு போர் செய்யும்படி பம்பாய் கவர்ன்மெண்டிற்கு உத்தரவிட்டனர். இவ்வாறு முதல் மஹாராஷ்டிர யுத்தம் தொடங்கியது.

முதல் மஹாராஷ்டிர யுத்தம் (1778—1782):—பம்பாய் கவர்னர் புனுவைத் தாக்கும்படி ஒரு சேனையை அனுப்பினர். அப்படை தோல்வியுற்று மீண்டது (1779). மறுவருஷம் அவர்கள் பரோடா மன்னனுக விரும்பிய படேஸிங் (Fateh Singh) கோடு சேர்ந்தனர். பின் ஒரு இங்கிலிஷ் படை மஹாராஷ்டிரர்களைத் தோற்கடித்து, ஆமதாபாத்தையும், குவாலியர் கோட்டையையும் கைப்பற்றியது. இப்போது மஹாராஷ்டிரர்களில் முக்கிய தலைவர்களா யிருந்தவர்கள் நானுபர்னவிஸும், மாதவஜீ ஸிந்தியாவுமே. இவர்களில் ஸிந்தியா, தம் நாட்டை இழந்ததனுல், ஆங்கிலேயரோடு சமாதானம் செய்து யுத்தத்தை முடிக்க விரும்பினர்.

ஸால்பை உடன்படிக்கை :—இதற்குள் சென்னையில் ஆங்கிலேயர்கள் ஹைதரோடு யுத்தத்திற்கு ஆஸ்பதமான காரியங்களைச் செய்துவந்தார்கள். இச்சமயத்தில் ஐரோப்பாவிலும் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் போர் மூண்டதனுலும், அவர்கள் திகிலடைந்து சமாதானத்தில் விருப்பமுள்ளவர்களானுர்கள். 1782-ல் ஸால்பை என்ற விடத்தில் மஹாராஷ்டிரரும், ஆங்கிலேயரும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். ஆங்கிலேயர், அதன்படி ஸால்ஸெட் தவிர மற்ற விடங்களை மஹாராஷ்டிரருக்கே திரும்பக் கொடுத்துவிட்டனர். மஹாராஷ்டிரர்களின் பிரதேசங்களில் போர்ச்சுகீசியரையும், ஆங்கிலேயரையும்தவிர மற்ற ஐரோப்பியர்களை வர்த்தகம் செய்ய அனுமதிப்பதில்லையென்றும், ஆங்கிலேயரைத் தவிர மற்ற ஐரோப்பியர்களோடு சிநேகமா யிருப்பதில்லையென்றும், படே ஸிங்கை பரோடா மன்னராக ஏற்றுக்கொள்வதாகவும் ரகுநாதராவுக்கு வருஷம் 3 லக்ஷ ரூபாய் உபகாரச் சம்பளம் தருவதாகவும், மஹாராஷ்டிரர் ஒப்புக்கொண்டார்கள். யுத்தத்தில் சிறைப்பட்ட இங்கிலிஷ்காரரை மரியாதையாய்

நடத்துவதற்கு ஈடாக அவர்களிடம் ப்ரோச் என்ற விடத்தைக் கொடுத்தனர். இவ்வாறு இங்கிலிஷ்காரர் ஸால்ஸெட்டை அடைந்ததல்லாமல், பிரெஞ்சுக்காரரால் விளையக்கூடிய அபாயத்தையும் ஒருவாறு தடுத்துக் கொண்டனர்.

**இரண்டாவது மைசூர் யுத்தம் (1780—1784):**—1769-ல் ஏற்பட்ட உடன்பாட்டின்படி ஆங்கிலேயர் தனக்கு ஒத்தாசை செய்யாததால், விரோதங்கொண்ட ஹைதர் அவர்களோடு போர் செய்வதற்கு ஏற்ற சமயத்தை எதிர்பார்த்த வண்ணமாயிருந்தான். 1780-ல் அவனுக்கு அத்தகைய சமயம் வாய்த்தது. ஐரோப்பாவில் பிரெஞ்சுக்காரரோடு




மைசூர் யுத்தங்களை விளக்கும் படம்.

இங்கிலிஷ்காரர் போர் செய்யத் தொடங்கியதும், சென்னையிலுள்ள இங்கிலிஷ் கவர்ன்மெண்டார் புதுச்சேரியைக் கைவசப்படுத்திக்கொண்டு, மேற்குக் கரையிலுள்ள மாஹி என்ற விடத்தையும் பிடித்துக் கொள்ள முயன்றார்கள். அக்காலத்தில் அது மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்திருந்ததால், தன் ராஜ்யத்தின் பாகமாகிய மாஹியை இங்கிலிஷ்காரர் பிடித்தது தவறு என்று ஹைதர் அவர்களோடு சண்டையிடலானான். இதுவே இரண்டாவது மைசூர் யுத்த மெனப்படும். மேனாட்டு முறைகளில் தேர்ச்சி பெற்ற 90,000 வீரர்களுடன் ஹைதரும், அவன் மகன் திப்புவும் கர்னாடகத்தில் புகுந்து அட்டூழியங்களைச் செய்து பேய்லி (Baillie), ப்ரேத்வெய்ட் (Braith waite) என்ற இங்கிலிஷ் தளகர்த்தர்களின் கீழுள்ள படைகளை முறியடித்தார்கள். பக்ஸார் சண்டையில் (1764) பிரசித்தியடைந்த ஸர் ஹெக்டர் மன்ரோ தமது வயோதிக பருவத்தால் ஒன்றும் செய்யமுடியாமலிருந்தார்; வந்தவாசிச் சண்டையில் கீர்த்தியடைந்த ஸர் அயர் கூட் கல்கத்தாவிலிருந்து பெரிய சேனையோடு தெற்கே வந்து 1781-ல் ஹைதரைப் பரங்கிப்பேட்டை (Porto Novo), சோழலிங்கபுரம் (Sholingar) முதலிய இடங்களில் தோற்கடித்தார். 1782-ல் ஹைதர் இறந்தான்; உடனே திப்பு மைசூர் அரசனாகி, இங்கிலிஷ்காரரோடு சண்டையைத் தொடர்ந்து நடத்தினான். இவன் பிரெஞ்சுக்காரர்களின் உதவியை நாடினான்; ஆனால் இவன் எதிர்பார்த்தபடி



திப்பு சுல்தான்

உதவி கிடைக்கவில்லை. இதற்குள் 1783-ல் ஐரோப்பாவில் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை ஏற்பட்டது.

மங்களூர் உடன்படிக்கை :—திப்பு மங்களூரைக் கைப்பற்றினன். கடைசியாகத் திப்பு 1784-ல் ஆங்கிலேயரோடு மங்களூர் உடன்படிக்கையைச் செய்துகொண்டான். யுத்தகாலத்தில் அவரவர் பிடித்துக்கொண்ட இடங்களை திருப்பிக் கொடுத்துவிடுவதென்றும், தாம்தாம் கைது செய்தவர்களை விடுவித்து விடுவதென்றும் நிபந்தனைகள் ஏற்பட்டன.

ஹேஸ்டிங்க்ஸ் செய்த உபாயங்கள் :—வாரன் ஹேஸ்டிங்க்ஸ் மைசூர், மஹாராஷ்டிர யுத்தங்களால் தமக்குண்டான பொருள் முட்டுப்பாட்டினல் காசி நவாப்பான சைத் ஸிங் (Chait Singh) கினிடம் விரோதங்கொண்டு அவருடைய சொத்துக்களை அபகரித்தார். அயோத்தி நவாப்பான அஸபட் டௌலாவோடு சேர்ந்து கொண்டு அயோத்தி பீகம்மார்களுடைய பொருள்களைக் கைப்பற்றினர். இவ்வாறு ஹேஸ்டிங்க்ஸ் அநீதியான முறைகளில் திரவியம் சம்பாதிக்கிறார் என்ற அபக்யாதி இங்கிலாந்தில் பரவியது. இவருடைய விரோதிகள் கம்பெனி டைரக்டர்களிடம் பிராது செய்து, ஹேஸ்டிங்க்ஸை விசாரணைக்குக் கொண்டுவந்தனர். ஹேஸ்டிங்க்ஸ் 1785-ல் தம் உத்தியோகத்தை ராஜீநாமா செய்து இங்கிலாந்து சென்றார்.

பிட்டின் இந்திய சட்டம் :—ரெகுலேட்டிங் ஆக்ட்டில் உள்ள சில குறைகள் நன்கு புலப்பட்டன. உதாரணமாக, மந்திராலோசனை சபையில் மூவர் சேர்ந்து செய்யும் எந்தத் தீர்மானமும் அமுலுக்கு வர வேண்டியதாயிற்று. கவர்னர் ஜெனரல் அத்தீர்மானத்திற்கு விரோதமான அபிப்பிராய முடையவரா யிருந்தாலும், சட்டப்படி அவ்வாறு

நடக்க முடியாதவரா யிருந்தார். கம்பெனியின் ஆட்சியி லுள்ள குறைகளை நீக்கவும், கம்பெனியின் அதிகாரத்தைக் குறைத்து, டைரக்டர்களைப் பார்லிமெண்டு அதிகாரத்தின் கீழ்வருமாறு செய்யவும் 1784-ல் ஒரு சட்டம் பிறப்பிக்கப் பட்டது. இதனை இயற்றியவர் அப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக விருந்த இளைய பிட் (Pitt, the Younger) என்பவராவர். ஆதலால் இது பிட்டின் இந்திய சட்டம் எனப்படும். இச்சட்டத்தைப் பார்லிமெண்டு அங்கீ கரித்தது. இதன்படி இந்திய துரைத்தன விஷயங்களை மேல்விசாரணை செய்வதற்காக அறுவர் அடங்கிய ஓர் அதிகார சபை ஏற்பட்டது. அதற்கு போர்டு ஆவ் கண்ட் ரோல் (Board of Control) என்று பெயர். இச்சபை யின் அனுமதியின்றிக் கம்பெனியார் யாதொரு காரியமும் செய்யக்கூடாது. மேலும் கவர்னர்-ஜெனரலுடைய நிர்வாக சபை அங்கத்தினர்களின் தொகை நான்கிலிருந்து மூன்றாக்கப்பட்டது. சுதேச அரசர்களுடன் சண்டை யாவது, சமாதானமாவது டைரக்டர்களின் உத்தரவு பெறாமல் செய்யக்கூடாதென்றும், சட்டங்களைத் தாமே செய்யக்கூடாதென்றும் விதிக்கப்பட்டன. ஓயாத சண்டை களால் சலிப்படைந்த பிரிட்டிஷ் பார்லிமெண்டார் இனி இந்தியாவில் புதிய நாடுகளை ஜயிப்பது என்ற ராஜீயக் கொள்கையை ஒழித்துவிடும்படி உத்தரவிட்டார்கள்.

இந்திய சரித்திரத்தில் இச்சட்டம் மிகவும் முக்கிய மானது. அடிக்கடி சில மாறுதல் செய்யப்பட்டபோதிலும், அநேகமாய் இச்சட்டமே 1858 வரையில் அநுசரிக்கப் பட்டது என்னலாம். ஹேஸ்டிங்க்ஸ் நிர்வாக சபையாரால் பெருத்த கஷ்டங்களுக்குட்பட்டு, அவர்களை மீறி ஒன்றும் செய்யமுடியாதவரா யிருந்தார். இனி அத்தகைய நெருக் கடி வாராமல் இச் சட்டம் செய்தது. அவசியமான சமயங்

களில் நிர்வாக சபையாரின் அபிப்பிராயத்தை நிராகரிக்க வும், கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. கம்பெனியார் பார்லிமெண்டின் அதிகாரத்திற்குட்பட்டு நடக்கவேண்டிய தாயிற்று. நேரில் இந்திய ஆட்சியை ஏற்றுக்கொள்ளா விடினும், அதிகார சபை அமைப்ப தாலும், உத்தியோக நியமனங்களை ஒப்புக்கொள்வதாலும் உண்மையில், பார்லிமெண்டு கம்பெனியாரின் மேலதிகாரி யாக ஏற்பட்டது.

---

## அத்தியாயம் 5

---

### லார்டு கார்ன்வாலிஸ்: ஸர் ஜான் ஷோர் (1786—1798)

லார்டு கார்ன்வாலிஸ்:—வாரன் ஹேஸ்டிங்க்ஸ் ராஜீ னுமா செய்துவிட்டுச் சென்றபின், நிர்வாக சபைத் தலைவ ராக இருந்த மக்பர்ஸன் சுமார் ஒன்றரை வருஷம் கவர்னர் ஜெனரலாக இருந்தார். இந்திய அனுபவம் ஏற்கெனவே உள்ளவர்களைக் கவர்னர் ஜெனரல்களாக நியமிக்கக்கூடா தென்ற உணர்ச்சி யேற்பட்டதனால் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் கார்ன்வாலிஸை கவர்னர் ஜெனரலாக நியமித்தார்கள். இதற்கு முன் இவர் கம்பெனி ஸேவையில் இருந்ததே யில்லை; அமெரிக்காவிலும் ஐரோப் பாவிலும் சிறந்த வீரரென்றும், ராஜதந்திர நிபுணர் என்றும் பெயர் வாங்கினவர். இவரே பிட் இந்திய சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட முதல் கவர்னர் ஜெனரலாவர். இவர் புதிய இந்திய சட்டத்தை அனுசரித்து சுதேச விவஹாரங்களில் பிரவேசிப்பதில்லை (உதாஸீன நியாயம் Non-intervention policy) என்ற கொள்கையைப் பெருப்பாலும்

கையாண்டார். ஆயினும் சில சமயங்களில் தம் கொள்கைக்கு மாறாக இவர் நடக்க வேண்டியதாயிற்று.

திப்பு சுல்தான் :—ஹைதரின் பிள்ளையான திப்பு தனது ராஜ்யத்தை விஸ்தாரப்படுத்தக் கருதி, 1789-ல் திருவாங்கூர் ராஜ்யத்தின்மீது படையெடுத்தான். திருவாங்கூர் அரசன் இங்கிலிஷ் கம்பெனியாரோடு சிநேக உடன்பாடு செய்துகொண்டவனாதலின், அவன் கம்பெனியாரைத் தனக்கு உதவிசெய்யுமாறு வேண்டினான். அதனால் சமாதானத்தை விரும்பிய கார்ன்வாலிஸ் சண்டையிட வேண்டியவரானார். இதுவே ஆங்கிலேயர் மைசூரோடு செய்த மூன்றாவது யுத்தத்திற்குக் காரணமாகும்.

மூன்றாவது மைசூர் யுத்தம் (1790—1792) :— சென்னை கவர்ன்மெண்டார் யுத்தத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்யாமலிருந்தார்கள். ஆயினும் கார்ன்வாலிஸ் தாமே ஒரு படையைச் செலுத்திக்கொண்டு வந்து திப்புவோடு போர் புரியலானார். மஹாராஷ்டிரர்களாலும், நிஜாமினாலும் இடையூறு நேராவண்ணம், அவர்களோடு உடன்பாடு செய்துகொண்டு, திப்புவின் கோட்டைகளில் பலவற்றை வென்றார். 1791-ல் பெங்களூரைப் பிடித்துக்கொண்டு, திப்புவின் தலைநகரான ஸ்ரீரங்கபட்டணத்தையும் முற்றுகை போட்டார். அங்கே தோல்வியடைந்த திப்பு 1792-ல் சமாதானத்தில் நாட்டமுடையவனாய், ஸ்ரீரங்கபட்டணத்து உடன்படிக்கையைச் செய்துகொண்டான். அதன் பிரகாரம் ஆங்கிலேயருக்கும், அவர்களுடைய கட்சியினருக்குமாகத் தனது ராஜ்யத்தில் பாதியையும், 3 கோடி ரூபாயும் கொடுப்பதாகத் திப்பு ஒப்புக்கொண்டான். மேலும் இவற்றிற்கு ஈடாகத் தன் இரண்டு பிள்ளைகளையும் ஆங்கிலேயர் வசம் ஒப்புவித்தான். இவ்வாறு திப்புவிடமிருந்து பெற்ற பாதி ராஜ்யத்தைத் தமக்குள் பிரித்துக்

கொண்டதில், ஆங்கிலேயருக்குச் சேலம், மலையாளம், மதுரை, திண்டுக்கல் என்னும் இடங்கள் கிடைத்தன.

சாஸ்வத நிலவரி ஏற்பாடு:—கார்ன்வாலிஸ் அமைதியான முறைகளில் விருப்பமுள்ளவர் என்று முன்னமே கூறப்பட்டது. இவர் பல சீர்திருத்தங்களை உண்டுபண்ணினார். அவற்றில் முக்கியமானது சாஸ்வத நிலவரி ஏற்பாடு (Permanent Revenue Settlement) ஆகும். இதனால் இவர் பெயரை இந்தியர்கள் என்றும் மறக்கவொண்ணாது. மொகலாய சக்கரவர்த்திகள் காலத்தில் ஜமீன்தார்கள் குடிகளிடமிருந்து நிலத்தீர்வை வசூலித்துவந்தார்கள்; ஆனால் இவ்வுரிமை கம்பெனியாருக்கு வந்தது முதல், கம்பெனியார் தங்களுடைய வருமானத்தை அதிகப்படுத்தும் பொருட்டு ஜமீன்தார்களை யொழித்து, வரி தண்டும் உரிமையை ஏலம் போட்டு வந்தார்கள்; அதிக தொகைக்கு ஏலம் கோரியவர்கள் இவ் வுரிமை பெற்றுக் குடிகளைத் துன்புறுத்தி வந்தார்கள். இதனால் குடிகளுக்குத் தாங்கள் எவ்வளவு வரி கொடுக்க வேண்டுமென்று தெரியாமற் போனதோடு, கம்பெனியாருக்கும் வருமானத்திற் கேற்பச் செலவு திட்டம் தயாரிக்க முடியவில்லை. இத்தீங்குகளை ஒழிக்க, கார்ன்வாலிஸ் சாஸ்வத நிலவரித் திட்டத்தை ஏற்படுத்தினார்.

சாஸ்வத வரித் திட்டத்தின் நன்மைகள்:—இத்திட்டத்தின்படி ஜமீன்தார்களே நிலத்திற்குச் சொந்தக்காராயினர். அவர்களே குடிகளிடமிருந்து வரி வசூலித்து ஒரு பகுதியைக் கவர்ன்மெண்டிற்குச் செலுத்தினார்கள். குடிகளுக்கும் இவ்வளவுதான் வரி தரவேண்டுமென்ற நியதி ஏற்பட்டதோடு, அதற்குமேல் நிலத்தில் வரும் வருவாயைத் தாங்களே அனுபவிக்க முடிந்தது. ஆகையால் அவர்கள் முன்னினும் பன்மடங்கு ஊக்கத்தோடு நிலத்தைப் பண்படுத்தி வேளாண்மை செய்யத் தொடங்கினார்கள். இவற்றால் குடி-

யானவர்கள் சௌக்கியமாக வாழ முடிந்தது. அவர்களுக்கு நிலத்திலுள்ள குடிவார பாத்தியமும் ஸ்திரப்பட்டது. இதனால் ஜமீன்தார்கள் நிலச்சுவான்தாரர் போலவும், குடிகள் அவர்களுடைய குத்தகைதாரர் போலவும் ஆயினர்.

கார்ன்வாலிஸ் செய்த இதர சீர்திருத்தங்கள்:—தாம் கவர்னர் ஜெனரலான மூன்று வருஷங்களுக்குள் ஸிவில் உத்தியோகஸ்தர்களின் நிலையை மேம்படுத்தினர். மேல்வருமானங்களை நிறுத்தி, கம்பெனி உத்தியோகஸ்தர்களுக்குப் போதிய சம்பளம் தரும்படி ஏற்பாடு செய்தார். மற்றும், இதுவரையிலும், வரி வசூல் செய்வதையும் நியாய விசாரணை செய்வதையும் ஜில்லா கலெக்டர் ஒருவரே பார்த்துவந்தார். கார்ன்வாலிஸ் இவைகளுக்குத் தனித்தனி உத்தியோகஸ்தர்களை நியமித்தார். இதுமுதல் கலெக்டர்கள் வரி வசூலையும், ஜில்லா ஜட்ஜுகள் நியாய விசாரணையையும் கவனித்துவந்தனர். இவர்களின் அதிகாரத்திற்குட்பட்டு கல்கத்தா, டாக்கா, பாட்ன, மூர்ஷிதாபாத் என்றவிடங்களில் நீதிஸ்தலங்கள் ஏற்பட்டன. இவற்றில் மகமதிய சட்டங்களைப்பற்றிய ஆலோசனைகளைச் சொல்ல காஜிகளும், இந்து சட்டங்களை எடுத்துரைக்க இந்து சட்ட நிபுணர்களும் கோர்ட்டுகளில் நியமிக்கப்பட்டனர். மாகாண கோர்ட்டுகளின் நீதிபதிகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் சுற்றுப் பிரயாணம் செய்து, கிரிமினல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டுமென்று விதி ஏற்பட்டது. மேலும் ஊர்க்காவல் முறையைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்தார்.

ஸர் ஜான் ஷோர்:—கார்ன்வாலிஸுக்குப் பின் ஸர் ஜான் ஷோர் 1793-ம் ௵ கவர்னர் ஜெனரலாக நியமிக்கப் பெற்றார். இவர் இதற்கு முன்பே கம்பெனி சேவகத்தில் பல வருஷங்கள் இருந்தவர்; இவரும் கார்ன்வாலிஸைப்

போல, சுதேச விஷயங்களில் தலையிடக் கூடாதென்ற கொள்கை யுடையவர். கம்பெனியின் அதிகார எல்லைக்குப்




புறம்பாக என்ன நடந்தாலும், அதில் கலந்துகொள்ளாமலே

யிருந்தார். அதனுல் இவர் கவர்னர் ஜெனரலா யிருந்த வரையில், இந்தியாவில் அமைதி நிலைத்திருந்தது.

இவ்வாறு கம்பெனியார் தங்கள் ராஜ்யத்தை பெருக்கிக்கொள்ளவாவது, அன்னிய நாட்டு விஷயங்களிற் கலந்து கொள்ளவாவது விரும்பாமல் துரைத்தனம் நடத்தி வந்ததனுல், மஹாராஷ்டிரர் பலாட்டியர்களாகி, நிஜாம் ராஜ்யத்தின்மீது படையெடுக்கலாயினர். உடனே நிஜாம் ஸர் ஜான் ஷோரை உதவி செய்யும்படி வேண்டினுர். ஷோர் தமது கொள்கையை மாற்றிக்கொள்ள விரும்பாததால், உதவி யொன்றும் செய்யவில்லை. அதனுல் நிஜாம் 1795-ல் தோல்வியடைய நேர்ந்தது.

---

## அத்தியாயம் 6

---

### லார்டு வேல்லஸ்லி (1798—1805).

பிரிட்டிஷ் அதிகாரத்தின் நிலைமை :—ஆங்கிலேய அதிகாரத்தை ஸ்திரமாக இந்தியாவில் நிலை நாட்டி, அவர்களுடைய ராஜ்யத்தைப் பரவச் செய்த கவர்னர் ஜெனரல்களில் லார்டு வெல்லஸ்லியும் ஒருவர். ஸர் ஜான் ஷோர் காலத்தில் கம்பெனியார் சுதேச விவஹாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி யிருந்தமையால், கம்பெனியாரின் பலமும் பெருமையும் குறையலாயின. அவர்களுடைய சிநேகிதனுன நிஜாம் மஹாராஷ்டிரர்களிடம் தோல்வியடைந்து, ஆங்கிலேயரிடம் வெறுப்புக்கொண்டு, பிரெஞ்சுக்காரர்களைத் தன்னுடைய சேனைகளைப் பழக்குவதற்காகத் தருவித்தான். 1792-ல் சண்டையில் தோல்வியுற்று, தன் ராஜ்யத்தில் பெரும் பாகத்தை யிழந்த திப்புவும் ஆங்கிலேயர்மீது விரோதங் கொண்டு, அவர்களுடைய விரோதிகளான பிரெஞ்சுக்

காரரை நாடினன். மஹாராஷ்டிரர்களும் பிரெஞ்சு உத்தியோகஸ்தர்களைக் கொண்டு, தங்கள் சைன்யங்களைப் பழக்கலானார்கள். ஆகையால் பிரெஞ்சுக்காரரின் கௌரவமும், அதிகாரமும் இந்தியாவில் அதிகரித்து ஆங்கிலேய அரசாட்சியைப் பயமுறுத்தின. மேலும் ஐரோப்பாவில் நெப்போலியன் வலிமையும், புகழும் பெற்று இங்கிலிஷ்காரரின் அதிகாரத்தையும், தேசத்தையும் எதிர்க்க முயன்றதால், தற்காப்பு நிமித்தமாக ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரருடன் சண்டை யிட்டு வந்தனர்.



லார்டு வெல்லஸ்லி

இந்திய சிற்றரசர்களில் சிலரும் நெப்போலியனுடன் கடிதங்கள் மூலமாக உறவாடினதாகத் தெரியவந்தது. அவனும் இந்தியாவின்மேற் படையெடுத்து பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஒழிக்க ஏற்ற சமயம் பார்த்திருந்தான். இத்தகைய காலத்தில்தான் வெல்லஸ்லி உத்தியோகம் ஏற்றுக்கொண்டார்.

ஸப்ஸிடியரி ஏற்பாடு :—இந்தியா முழுவதையும் ஆங்கிலேய அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவர வேண்டும் என்பதும், பிரெஞ்சுக்காரரின் அதிகாரத்தையும்,செல்வாக்கையும் ஒழிப்பது அவசியம் என்பதும் அவர் கொள்கை. இதற்காக அவர் "ஸப்ஸிடியரி ஸிஸ்டம்" (உபகிரஹ சமாதானம், உபகார நியமன உடன்பாடு) என்ற ஏற்பாட்டைச் செய்தார். அதன்படி இந்திய ராஜ்யங்கள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்

குட்பட்டு சிற்றரச ஸ்தானம் வகிக்கவேண்டும். ஆங்கிலேயர் இவர்களை இதர விரோதிகள் எதிர்க்காமல் காப்பதுமன்றி, இவர்களுக்கு ராஜீய விஷயங்களில் ஆலோசனையும் கூற வேண்டும். தங்களை மேற்பார்வையிட ஒவ்வொரு சுதேச அரசனும் ஒரு ஆங்கிலேய ரெஸிடெண்டை ஏற்றுக்கொள்வதுடன், தனது ராஜ்யப் பாதுகாப்புக்காக ஒரு பிரிட்டிஷ் சேனையை வைத்துக்கொண்டு அதன் செலவிற்காக ஆங்கிலேயருக்குப் பணம் வருஷா வருஷம் கொடுக்கவேண்டும். மேலும் இவ்வுடன்பாட்டை ஏற்றுக்கொண்ட சிற்றரசர்கள் ஆங்கிலேயர் உத்தரவின்றி தங்களுக்குள்ளாவது, ஐரோப்பியர்களுடனாவது யாதொரு வித உடன்படிக்கையும் செய்யக்கூடாது. பிரிட்டிஷாரும் காரணமின்றி இவ் வரசர்களின் உள்நாட்டு விஷயங்களில் பிரவேசிப்பதில்லை யென்று உடன்பட்டனர். இவ்வேற்பாடு ஆங்கிலேயருக்குப் பலவிதங்களில் நன்மையளித்தது. தங்களுடைய அதிகாரத்தில் அதிகப் பணச் செலவின்றி சேனைகளை வைத்திருக்கவும், தங்களுடைய விரோதிகளைக் கண்டிக்கவும் முடிந்தது. இத் திட்டம், உண்மையில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு, பலமான அஸ்திவாரமானதோடு ஏகாதிபத்தியத்தின் கொள்கையை நிலைநிறுத்தினதாகும்.

ஏகாதிபத்தியத்தின் கீழ் வந்த நாடுகள் :—மேற்படி உடன்படிக்கையை முதன் முதலில் அங்கீகரித்தவர் ஹைதராபாத் நிஜாம் ஆவர். திப்பு இதற்கு சம்மதிக்கவில்லை. இவன் தனது சைன்யங்களைப் பிரெஞ்சுக்காரர்களின் உதவியைக்கொண்டு பழக்கி வந்தானென்று முன்னமேயே சொன்னோமல்லவா ? மற்றும் இவன் பிரெஞ்சு சிப்பாய்களை மங்களூரில் வரவேற்று, நெப்போலியனுக்கும் தனது நாட்டிற்கு வரும்படி கடிதம் எழுதி, அவரது வரவை எதிர்பார்த்

திருந்தான். இதைக்கண்ட வெல்லஸ்லி தமது படை களை அனுப்பித் திப்புவை மலவல்லி என்னுமிடத்தில் தோற் கடித்து ஸ்ரீரங்கபட்டணத்தையும் முற்றுகை போட்டார். திப்பு சண்டையில் மரணமடைந்தான். ஜெயித்த நாடு களில் பழைய மைசூர் ராஜ்யத்தை, ஹைதருக்கு முன் னிருந்த வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ணராஜ உடையாருக் குத் தந்து, அவரை ஏகாதிபத்திய உடன்படிக்கையை ஏற் றுக்கொள்ளும்படி செய்தார். மைசூரில் ஓர் பிரிட்டிஷ் ரெசிடெண்டையும், பட்டாளத்தையும் ஏற்படுத்தினர். மீதி நாடுகளில் கம்பெனியார் கன்னடம், கோயம்புத்தூர், வைநாடு என்பவைகளை வைத்துக்கொண்டு, 'சீடேட் டிஸ்டிரிக்ட்ஸ்' (Ceded Districts) என்று வழங்கும் கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களை நிஜாமுக்குத் தந்தனர்.

தஞ்சாவூர் அரசன் கம்பெனியாரிடம் வருஷம் ஆறு லக்ஷம் ரூபாய் பெற்றுக்கொண்டு, தனது ராஜ்யத்தை அவர்களிடம் ஒப்புவித்தான். கர்நாடகத்தில் இரட்டை ஆட்சியின் கெடுதல்களால், நவாப் அதிகாரத்தினின்றும் நீக்கப்பட்டு, உபகாரச் சம்பளம் பெறலானர். இவ்வித மாக 1801 முதல் கர்நாடகம் முழுமையும் ஆங்கில அதி காரத்தின் கீழ் வந்தது. உபகார நியமன உடன்படிக்கை யின்படி தரவேண்டிய 'ஸப்ஸிடி' தொகைக்குப் பதிலாக நிஜாம், முன் ஆங்கிலேயரிடம் பெற்ற கர்நூல், கடப்பை, பல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களை (Ceded Districts) அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டான்.


அயோத்தி நவாப்பையும் வெல்லஸ்லி தமது ஏகாதி பத்திய உடன்படிக்கையை அங்கீகரிக்கும்படி செய்தார். அவ்வுடன்படிக்கையின்படி சைன்யப் பாதுகாப்புக்காக அவன் ஆங்கிலேயருக்கு ஐக்ய மாகாணங்கள் என்று

வழங்கும் கங்கா யமுனு நதிக்கிடையே உள்ள டோவாப் என்ற நாடுகளைத் தந்தான்.

வெல்லஸ்லியும் மஹாராஷ்டிரர்களும் :—1800-ம் வருஷம் நானு பர்னவிஸ் இறந்ததும், மஹாராஷ்டிரர்களுக்குள் குழப்பம் ஏற்பட்டது. இவர்களுள் முக்கியமான ஜஸவந்த ராவ் ஹோல்கரும், தௌலத் ராவ் ஸிந்தியாவும் தங்களுள் சண்டையிட்டுப் பேஷ்வாவைத் தத்தம் வசப்படுத்த யத்தனித்தனர். பேஷ்வா பாஜீராவ், ஹோல்கருக்குப் பயந்து பம்பாய்க்கு ஓடி, அங்கு கம்பெனியாரின் உதவியை நாடினுர். எப்பொழுது மஹாராஷ்டிரர்களை வசப்படுத்த ஏற்ற சமயம் வாய்க்கும் என்று ஆவலுடன் இருந்த வெல்லஸ்லி, பேஷ்வாவை வரவேற்று, அவருடன் பஸ்ஸீன் என்னும் இடத்தில் உடன்படிக்கை செய்துகொண்டார். இவ்வுடன்படிக்கையின்படி பேஷ்வா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அங்கீகரித்து, ஓர் பிரிட்டிஷ் படையையும் ஏற்றுக்கொண்டார்.

முன்னமேயே இவ்வுடன்படிக்கையை வெறுத்த மஹாராஷ்டிரர்களுக்குள் இப்போது மனக் கலக்கம் ஏற்பட்டது. அவர்கள் தங்கள் கௌரவத்திற்கும், அதிகாரத்திற்கும் நாசம் வந்துவிட்டது என்று எப்படியும் பேஷ்வாவை மீட்க எண்ணினர் ; இவர்களுள் முக்கியமானவர்கள் ஸிந்தியாவும், பான்ஸ்லேயும். உடனே யுத்தம் தொடங்கியது. நமது சரித்திரத்தில் இதைப்போன்ற கடுமையான போர் வேறு எதுவும் இல்லையெனக் கூறலாம். 1803-ல் கவர்னர் ஜெனரலின் சகோதரரான ஸர் ஆர்தர் வெல்லஸ்லி, மஹாராஷ்டிர சைன்யங்களுடன் போர்செய்து ஸிந்தியாவையும், பான்ஸ்லேயையும் அஸ்ஸே என்னும் இடத்தில் தோற்கடித்தார். பின்பு ஸிந்தியா தனிமையாக ஆர்கானில் தோல்வியுற்றுர். ஜெனரல் லேக் மஹாராஷ்டிரசேனைகளைத்

தோற்கடித்து டில்லியையும், ஆக்ராவையும் கைப்பற்றிக்




கொண்டார். இதுவுமன்றி ப்ரோச்சும், கட்டாக்கும் ஆங்கில சேனைகளால் கைக்கொள்ளப்பட்டன.

பான்ஸ்லேயும், ஸிந்தியாவும் முறையே தேவகான் (Deogaon), ஸுர்ஜிஅர்ஜன்கான் (Surji-arjangaon) என்னும்இடங்களில் சமாதானம் செய்துகொண்டனர். ஸிந்தியா ஆங்கிலேயருக்கு யமுனுவுக்கு வடக்கேயுள்ள நாடுகளையும், டில்லி, ஆக்ரா முதலிய நாடுகளையும் தந்தான். சக்கரவர்த்தியான ஷா ஆலம் ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்தார். ஓரிஸ்ஸாவும் கம்பெனியார் கைக்கு வரவே, வங்காளமும், மதராசும் இத்துடன் சேர்க்கப்பட்டன. பிரார் நிஜாமுக்குத் தரப்பட்டது. ஸிந்தியாவும், பான்ஸ்லேயும் பஸ்ஸீன் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டனர்.

ஹோல்கர் பிரிட்டிஷ்காரருக்கு விரோதமாகவே யிருந்தான். இவன் ஆங்கில ஆதிக்கத்திலிருந்த இராஜபுத்திரர்களிடம் ‘ சவுத்து ’ என்னும் வரியை வசூலிக்க முயன்றுன். பின்பு இவன் டில்லியையும் முற்றுகை போட்டான். ஆனல் பிரிட்டிஷ் ஜெனரலான ஆக்டர்லோனி அவனை விரட்டி டெல்லியைக் காப்பாற்றினர்.

இது நிற்க, ஜெனரல் லேக் பரத்துப்பூர் கோட்டையைக் கைப்பற்ற முயன்றுர். ஆனல் அவரால் இது முடியவில்லை. டிக், பருக்கபாத் என்னும் இடங்களில் ஆங்கில சேனைகள் வெற்றியடைந்தன. இத்தருணத்தில் சண்டையை நிறுத்தும்படி இங்கிலாந்தில் கோர்ட் ஆவ் டைரக்டர்கள் கவர்னர் ஜெனரலுக்கு உத்தரவு அனுப்பி, அவரையும் இங்கிலாந்துக்கு வரவழைத்தனர்.

மதிப்புரை :—வெல்லஸ்லி இந்தியாவில் செய்த வேலை என்னவென்று சற்றுக் கவனிப்போம். இவரை ஆங்கில ஆட்சியை அபிவிருத்திசெய்த வாரன் ஹேஸ்டிங்க்ஸ், டல்ஹௌசி முதலியவர்களுடன் ஒப்பிடலாம். இவர் மிகவும்

பலம்பெருமல் இருந்த கம்பெனியாரின் அதிகாரத்தை ஸ்திரப்படுத்தியதுமன்றி அவர்களின் ராஜ்யத்தையும் விருத்தியாக்கினுர். இவர் காலத்தில் முதன்முதலாக ஸ்தாபனம் செய்யப்பட்ட பிரிட்டிஷ் 'ஏகாதிபத்தியம்' பிற்காலத்தில் மேன் மேலும் விருத்தியடையலாயிற்று. இவர் மொகலாய ராஜ்யத்தைப் போலவே பழைய அஸ்திவாரத்தின்மீது ஓர் பெரிய பிரிட்டிஷ் ராஜ்யமாகிய கட்டடத்தை ஏற்படுத்தியவராவர். இவர்தான் முதன் முதலில் கம்பெனியார் முன்னேற்றமடைய வியாபாரம் ஒன்று மட்டும் பிரயோஜனப்படாது என்றும், ராஜ்ய அதிகாரத்தையும் அதிகரிக்கவேண்டும் என்றும் உணர்ந்து அதற்கு வேண்டிய ஊக்கம் கொண்டார். இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜ்யத்தை ஸ்தாபனம் செய்தவர்களுள் வெல்லஸ்லி ஓர் முக்கிய ஸ்தானத்திற்கு உரியவராவர்.

## அத்தியாயம் 7

### 1858-வரை ஆங்கிலேயர்களின் அதிகார வளர்ச்சி

உதாஸீன நியாயம்:— லார்டு வெல்லஸ்லிக்குப் பிறகு, லார்டு காரன்வாலிஸ் இரண்டா முறையாகக் கவர்னர்ஜெனரலானுர்; இவருக்குப்பின் ஸர் ஜார்ஜ் பார்லோ கவர்னர் ஜெனரலாக வந்தார். இந்திய சமஸ்தான விஷயங்களில் கம்பெனியார் பிரவேசித்தல் கூடாது என்ற கொள்கை அனுசரிக்கப்பட்டதால், இவர்கள் காலத்தில் சண்டையின்றி, ஒய்வு ஏற்பட்டது.

லார்டு மிண்டோ:—பார்லோவுக்குப் பிறகு லார்டு மிண்டோ கவர்னர் ஜெனரலானுர். இவர் 1807 முதல் 1813 வரையிலும் இந்திய துரைத்தனத்தை நடத்தினுர்.

இவர் அவசியமான விஷயங்களில் இங்கிலாந்திலுள்ள நிர்வாகிகளின் ஆலோசனையைக்கலந்து கொண்டதோடு சுதேச விஷயங்களில் தலையிடுவது அவசிய மென்று அவர்கள் உணருமாறு செய்தார். இவர் காலத்தில் பிரெஞ்சுக்காரர் வடமேற்கிலிருந்து படையெடுத்து வருவார்களோ என்ற பீதி யிருந்தது. அதனால் மிக்க வல்லமை வாய்ந்த உத்தியோகஸ்தர்களான எல்பின்ஸ்டன், மேட்காஃப், மன்ரோ, முதலானவர்களை அன்னிய நாடுகளுக்கு அனுப்பி, அவர்கள் பிரெஞ்சுக்காரரைத் தம் தேசத்து வழியே வர இடங் கொடாதபடி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். இவர் காலத்தில் தான் இவ்வாறு கம்பெனியார் அண்டையிலுள்ள நாடுகளுடன் சிநேக உடன்பாடு செய்துகொண்டன ரென்னலாம்.

மிண்டோவும் ரஞ்சிட்சிங்கும் :—இக்காலத்தில் சீக்கர் என்ற ஜாதியார் பஞ்சாபில் தலையெடுக்கலானார்கள். இவர்களுக்குத் தலைவன் ரஞ்சிட் சிங் என்பவன். இவன் மிகுந்த பராக்ரமசாலி ; இவனைச் சிவாஜி, ஹைதர் முதலிய சிறந்த வீரர்களுக் கொப்பிடலாம். இவன் சிறிது சிறிதாகத் தனது ராஜ்யத்தைப் பஞ்சாபில் அதிகரிக்கச் செய்தான் ; லாகூரை ஆப்கன் அரசனிடமிருந்து கைப்பற்றி, அதைத் தன் தலைநகராக்கிக் கொண்டான். பிறகு ஸட்லெட்ஜுக்குக் கிழக்கில் உள்ள நாடுகளின்மீது தனது கவனத்தைச் செலுத்தினான். இந்நாடுகள் ஸிந்தியா விடமிருந்து கம்பெனியாரால் கைக்கொள்ளப் பெற்றவை. இதைக்கண்ட கவர்னர் ஜெனரல் கலக்கமடைந்து, ரஞ்சிட் சிங் பிரிட்டிஷ் நாடுகளைக் கைக்கொள்ளாமலும், பிரெஞ்சுக்காரர்களுடன் சிநேகம் செய்துகொள்ளாமலும் இருக்க, மெட்காஃப் என்பவரை அவரிடம் சமாதான ஏற்பாடுகள் செய்யுமாறு அனுப்பினார். 1809-ல் அமிருதசரஸில் இவ்விருவருக்கும்

நடந்த உடன்படிக்கையின்படி ஆங்கிலேயரும் ரஞ்சிட் சிங்கும் சிநேகமாயினர். இதனால் தரை மார்க்கமாய்ப் பிரெஞ்சுக்காரர்களின் பயம் ஒழிந்தது. இவ்வாறு பிரெஞ் சுக்காரர்கள் ருஷியர்களுடன் சேர்ந்துகொண்டு ஆப்கானிஸ்



ரஞ்சிட் சிங்

தானத்தின்வழியாக இந்தியாவின்மீது படையெடுக்கவொட் டாமல், வடமேற்கில் ஓர் வலுத்த நண்பன் இருக்கவேண்டு மென்பதை முதன் முதலில் உணர்ந்தவர் லார்டு மிண்டோ

தான். லூடியானுவில் ஒரு சைன்யத்தையும் காவல் வைத்து வடமேற்கெல்லையில் நடக்கும் விஷயங்களைக் கவனிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.


மார்க்விஸ் ஆவ் ஹேஸ்டிங்க்ஸ் (1813—1823):— மிண்டோவுக்குப் பிறகு மார்க்விஸ் ஆவ் ஹேஸ்டிங்க்ஸ் கவர்னர்-ஜெனரலானுர். தாம் இப்பதவிக்கு வருமுன் இந்திய விவஹாரங்களில் பிரவேசித்து அதிகாரத்தை அபி விருத்திசெய்வதைக்கண்டனம் செய்தவர்களில் இவரும் ஒருவர். ஆனல் இவர் இந்தியாவுக்கு வந்ததும், தம் முடைய கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டியவரானுர். பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தை மேல் அதிகரிக்கு மாறு ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமாயிருந்தது. இந்திய அரசர்கள் ராஜீய விஷயங்களைக் கவனிக்காமலும் பிரஜைகளின் நன்மையை மறந்துவிட்டு அடிக்கடி சுய நலங்கருதி சச்சரவு செய்தனர். அது தேச நன்மைக்கும் அமைதிக்கும் விரோதமாக யிருந்தபடியாலும் இந்தியர்களின் விஷயங்களில் பிரவேசம் செய்து அநீதியைக் கண்டிப்பது முக்கியமானதாயிற்று.



லார்டு ஹேஸ்டிங்க்ஸ்

பீஷ்வா பட்டமிழந்தது:—ஆங்கிலேயர்கள் நேபாளத்திலும், பிண்டாரி என்ற கொள்ளைக்கூட்டத்தார்களுடனும்,

சண்டையிட நேர்ந்தது. அப்போது (1815) பீஷ்வா 2-வது பாஜிராவும் அவனுடைய மந்திரியான திரிம்பக்ஜீயும் ஆங்கிலப் பாதுகாப்பில் புனவுக்கு வந்த கெயிக்வாரின்




மந்திரியைக் கொன்றனர். இதுவிஷயமாகக் கம்பெனியார் பீஷ்வாவை விசாரணை செய்தனர். பூனவில் மந்திரியாக விருந்த எல்பின்ஸ்டன் பீஷ்வாவின் மந்திரியைக் கைது

செய்து பீஷ்வாவைக் கடினமான ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி நிர்ப்பந்தம் செய்தார். இதன்படி பீஷ்வா அதிகமான இங்கிலிஷ் சேனையைப் புனவில் வைத்துக்கொள்ளவும், அதன் சம்ரக்ஷணைக்காக ராஜ்யத்தில் ஒரு பகுதியைப் பம்பாய் கவர்னரிடம் விட்டுவிடவும் வேண்டும். இதனுல் பீஷ்வா தனது அரசியல் சுதந்தரத்தை இழக்கவேண்டியதாயிற்று.

**கடைசி மஹாராஷ்டிர யுத்தம்:**—இவ்வாறு தன் பட்டத்தை இழந்த பீஷ்வா, ஆங்கிலேயரை எதிர்க்கச் சமயம் பார்த்திருந்தான். மற்ற மஹாராஷ்டிரர்கள் எல்லாரும் தனக்கு உதவியா யிருப்பார்களென்று பீஷ்வா நினைத்தான். ஆனுல் ஸிந்தியாவும், கேய்க்வாரும் ஏற்கெனவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஏற்றுக் கொண்டு விட்டனர்; அதனுல் அவர்கள் பீஷ்வாவுடன் சேரவில்லை. ஹோல்காரும், பான்ஸ்லேயும் அதேசமயத்தில் இங்கிலிஷ்காரரோடு போர் தொடங்கினர். 1817-ல் பீஷ்வாவின் சேனை புனவிலுள்ள இங்கிலிஷ் ரெசிடெண்டைத் தாக்கிற்று. பிரிட்டிஷ் சேனை பீஷ்வாவைக் கர்க்கீ முதலான இடங்களில் தோற்கடிக்கவே, அவன் தன் பட்டத்தையும் நாட்டையுமிழந்து ஆங்கிலேயரிடம் உபகாரச் சம்பளம் பெற்றுன். கம்பெனியார் இவனிடமிருந்து பெற்ற நாட்டில் ஒருபாகத்தை பம்பாய் மாகாணத்துடன் சேர்த்தார்கள். மற்றெரு சிறியபாகத்திற்கு சிவாஜியின் பரம்பரையைச் சேர்ந்தவனும் சடாரா அரசனுமாகிய ஒருவனை அரசனுக்கினுர். நாகப்பூரில் உள்ள அப்பாசாஹிப் சித்தபால்டியில் தோல்வியுற்று, நாட்டைவிட்டோடினுன். நாகப்பூரினும் பெரும்பாகத்தைக் கம்பெனியார் கைக் கொண்டு, எஞ்சியதைச் சிறிய ராஜ்யமாக்கி பான்ஸ்லே வம்சத்தைச்சேர்ந்த ஒரு சிறுவனை அரசனுக்கினர்.

ஹோல்காரும் மேகிட்பூரில் தோல்வியடைந்து, இங்கிலிஷ் ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டு, நர்மதைக்குத் தெற்கிலுள்ள தன் நாட்டைக் கம்பெனியாருக்குக் கொடுத்து, ஒரு பிரிட்டிஷ் ரெசிடெண்டையும் ஏற்றுக்கொண்டான். ராஜபுதனத்திலுள்ள அரசர்களும் இங்கிலிஷ் ஏகாதிபத்தியத்தை ஏற்றுக்கொண்டனர். இவ்வாறு மஹாராஷ்டிர ராஜ்யம் பெரும்பாலும் ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் வந்தது.

**குடகு நாடு கிடைத்தல் :**—1828-ம் ஆல் லார்டு வில்லியம் பெண்டிங்க் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பெற்றார். ஏற்கெனவே இவர் வேலூர்க் கலகம் நடந்தபொழுது சென்னை கவர்னராக இருந்தவர்; இவர் காலத்தில் குடகு ராஜ்யத்தை யாண்ட அரசன் மிகவும் கொடியவனாயிருந்தான். அவன் அக்கிரமமான காரியங்களைச் செய்து குடிகளைத் துன்புறுத்தினன். கம்பெனியார் பன்முறை எச்சரிக்கை செய்தும் அதை அவன் கவனிக்கவில்லை. ஆதலின் பெண்டிங்க் இங்கிலிஷ் சைன்யத்தை அனுப்பி மேர்க்காராவையும், குடகு ராஜ்யத்தையும் கைப்பற்றிக் கொண்டனர். குடகு மன்னன் காசிக்கு அனுப்பப்பட்டான். இவ்வாறு பெண்டிங்க் காலத்தில் குடகு ராஜ்யமும் கம்பெனியின் ஆளுகையில் வந்தது.



லார்டு வில்லியம் பெண்டிங்க்

**முதல் சீக் யுத்தம் :**—'பஞ்சாப் சிங்க'மான ரஞ்சிட் சிங் உயிரோடு இருந்தவரையில் அமிருத ஸரஸ் உடன்

படிக்கைப்படி ஆங்கிலேயரோடு நட்புப் பாராட்டியே வந்தான். ஆனால் 1839-ல் அவன் மரணமடைந்ததும், அவனுடைய ராஜ்யத்தில் கலகம் ஏற்படத் தலைப்பட்டது. பலர்




சிம்மாஸனத்தைக் கைப்பற்ற முயன்றனர்; உண்மையில் யோக்கியதைவாய்ந்தவர் எவரும் இல்லை. ஐந்து வருஷத்திற்குள் மூவர் சிம்மாசன மேறி மாண்டனர். ரஞ்சித் சிங்கின் சைன்யமாகிய 'கல்சா' மிக்க பராக்கிரம முடையதாய் விளங்கிற்று. இதன் உதவியால் அவன் தன் இளங்குமாரனை டலீப் சிங்கை ராஜாவாக்கினான். இந்தக் கல்சா பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு மிகவும் தொந்தரவு கொடுத்தது. இது வரையிலும் எல்லைப்புறத்தைப் பாதுகாக்கும் ஒரு சிறந்த துணையாக இருந்த சீக்கர்கள் இவ்வாறு கிளம்பியதானது ஆங்கிலேயருக்கு மனக்கலக்கத்தை யுண்டுபண்ணிற்று.

மேலும், கல்சா ஸட்லெஜ் நதியைக்கடந்து பிரிட்டிஷ் சேனையுடன் சண்டையிட வாரம்பித்தது. அப்போது

கவர்னர் ஜெனரலாக விருந்தவர் லார்டு ஹார்டிஞ்ச் என்ப வராவர். இங்கிலிஷ் சேனை சீக்கர்களை முட்கீ, பிரோஜ் ஷாஹர், அலிவால், சோப்ராயன் என்ற இடங்களில் தோற் கடித்தார்கள் (1845-1846).

லாகூர் உடன்படிக்கை :—பின்பு சீக்கர்கள் லாகூரில் சமாதானம் செய்துகொண்டார்கள் (1846). அதன்படி பிரிட்டிஷாருக்கு ஸட்லெஜுக்கும், பீயஸ் நதிக்கும் இடையேயுள்ள ஜலந்தர் என்ற பிரதேசம் கிடைத்தது. சண்டைச் செலவிற்காகச் சீக்கர்கள் பெருந்தொகை கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். டேலிப் ஸிங் அரச னாகவும், அவனுடைய தாயார் பிரதிநிதி (Regent) யாகவும் ஏற்படுத்தப்பட்டனர். பஞ்சாப்பில் ஒரு ஆங்கிலேய சேனை யும், லாகூரில் ஒரு இங்கிலிஷ் ரெஸிடெண்டும் இருக்கு மாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆங்கிலேயர்கள் சீக்க ரிடமிருந்து பெற்ற காஸ்மீரத்தை, குலாப்சிங் என்பவருக்கு விற்றுவிட்டனர்.

லார்டு டல்ஹௌஸி :—இதுகாறும் பிரிட்டிஷ் ராஜ் யம், இந்தியாவில் லார்டு மிண்டோ காலமுதல் எவ்வாறு பெருகிற்று என்றறிந்தோம். இத்தகைய முயற்சியில் மிக வும் ஊக்கங்கொண்டு உழைத்தவர் லார்டு டல்ஹௌஸி யாவர் (1845-1856). இவரைத் தற்கால இந்தியாவை உண் டாக்கியவர் (The maker of the Modern India) என்ன லாம். இவர் காலத்தில் பஞ்சாப்புடனும், பர்மாவுடனும் யுத்தம் நடந்து, அவ்விரண்டும் ஆங்கில ஆட்சிக்குட்பட்டன. இதுவுமன்றி இன்னும் பல சுதேச ராஜ்யங்கள் நேராக இங்கிலிஷ் ஆதிக்கத்தின் கீழோ, அவர்களின் மேற்பார்வைக் குட்பட்டோ வந்தன.

வார்ஸு இல்லாத ராஜ்யங்கள் :—தம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சுதேச ராஜ்யங்களைப் பிரிட்டி

ஷாருக்குச் சேர்த்துவிட வேண்டுமென்பது டல்ஹௌசி யின் மனப்பூர்வமான எண்ணம். அநேக சமஸ்தானங் கள் இதற்கு முன்னமேயே பிரிட்டிஷ் ஏகாதிபத்திய உடன்பாட்டை ஏற்றுக்கொண்டிருந்தன அல்லவா? ஆயினும் இவற்றின் ராஜாங்க நிர்வாகத்தில் பல ஊழல் கள் இருந்தன. பல சுதேச மன்னர்கள் குடிநலங் கருதாமல் சுயநலங் கருதுவாராயினர். இவற்றை எப்படியாவது கைக் கொள்ள வேண்டுமென்றெண்ணி, டல்ஹௌஸி வார்ஸு இல்லாத ராஜாங்கங்களைப்பற்றிய (Doctrine of Lapse) ஓர் புதிய கொள்கையை ஸ்தாபித்தார். இதுவரையிலும் புத்தி ரப் பேறில்லாத இந்து அரசர்களும், பிறரும் தம் ஆஸ்தி யைப் பெறுதற்குரியவர்களாக வேறு யாரையாவது ஸ்வீகா ரம் செய்துகொள்வது வழக்கமாக இருந்தது. இவ் வழக்கத்தை நிராகரித்து, பிரிட்டிஷ் ஆதிபத்தியத்தின் கீழ் வந்த சுதேச ராஜாக்கள் தங்கள் அனுமதி யின்றிச் செய்து கொண்ட ஸ்வீகாரங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா என் றும், அப்படிச் சந்ததியின்றி இறந்த அரசர்களின் நாடுகள் உடனே பிரிட்டிஷாருக்குத் திரும்பி (Lapse)ச் சென்று விடவேண்டுமென்றும் விதியுண்டாயிற்று. இதுவே டல் ஹௌசியுண்டாக்கிய நூதன கொள்கையாகும். இவ்வித மாக இவர் வார்ஸு இல்லாத ராஜ்யங்களுக்குப் பிரிட்டி ஷாரே மேலதிகாரிகள் என்பதை ஸ்திரமாகக் கொண்டார்.

ஆங்கிலேயர் வசம் வந்தநாடுகள்:—டல்ஹௌஸிக்கு முன் இருந்தவர்கள் பெரும்பாலும் இயன்றமட்டும் இங்கி லிஷ் ராஜ்யத்தைப் பெருக்க வொட்டாமலிருந்தனர். ஆனால் இவர் தம்மாலான வரை அதைப் பெருக்க முயன்றார். இவ ருடைய அதிருஷ்டத்திற் கேற்பப் பல ராஜாக்களுக்குச் சந்ததி இல்லாமலிருந்தது. மார்க்விஸ் ஆவ் ஹேஸ்டிங்க்ஸ் காலத்தில் சடாராவில் சிவாஜியின் பரம்பரையைச் சேர்ந்த

வன் ஒருவன் அரசனுக்கப்பட்டானல்லவா? அவ்வம்சத்தில் வந்த ஒருவன் 1848-ல் சந்ததியின்றி இறக்கவே, டல்ஹௌஸி சடாராவைத் தம் ராஜ்யத்தோடு சேர்த்தார். நாகப்பூரை ஆண்டு வந்த பான்ஸ்லே மன்னன் 1853-ல் சந்ததியின்றி இறந்தான். உடனே அவனுடைய ராஜ்யமும் பிரிட்டிஷார் வசம் வந்தது. அதுவே இப்பொழுது மத்திய மாகாணங்கள் (Central Provinces) என வழங்குகிறது. அதே வருஷத்தில் ஜான்ஸி அரசர் தாம் இறப்பதற்கு முன் ஒருவனை ஸ்வீகாரம் செய்துகொண்டார். டல்ஹௌஸி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் ஜான்ஸியும் இங்கிலிஷ்காரருக்கே திரும்பி வந்தது. இவ்வரசர் ஆங்கிலேயருக்குச் சிறந்த நண்பராயிருந்தும், டல்ஹௌஸி இவ்வாறு செய்ததைக் கண்டு ஜான்ஸி ராணி 1858-ல் நேர்ந்த சிப்பாய்க் கலகத்தில் சேர்ந்துகொண்டாள்.

அயோத்தி :—இது நிற்க, 1801 முதற்கொண்டு அயோத்தி பிரிட்டிஷ் பாதுகாப்புக்குள் வந்திருந்தது. அந்நாட்டின் அரசாட்சி சீர் குலைந்து எவ்வளவு கடுமையான உத்தர வளித்தபோதிலும், சீர்திருத்தம் செய்யாமல் நவாப் ஆண்டு வந்தார். பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் ஸ்லீமன், ஒளட்ரும் என்பவர்கள் ஜனங்களின் நிலைமை மிகவும் கேவலமாக இருந்ததென்றும் அரசாங்கம் மிகவும் கெடுதலென்றும் அறிக்கை செய்யவே, அந்த ராஜ்யத்தைச சேர்க்க வேண்டியது அவசியமாயிற்று. டல்ஹௌசி அயோத்தி நவாப்புக்கு உபகாரச் சம்பளம் தந்து கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டு, அயோத்தி ராஜ்யத்தையும் கைக்கொண்டார்.

பஞ்சாப்:—இவர் காலத்தில் பஞ்சாபின் ஆட்சி முறை சரியாக நடைபெறவில்லை. மூல்டானிலிருந்த கவர்னர் மூல்ராஜ்

என்பவர் இங்கிலிஷ் அதிகாரத்தை நிராகரித்ததோடு, டல்ஹௌஸியாலனுப்பப்பட்ட புதிய கவர்னரையும் கொன்




றார். இதனால் அங்கு பெருங்கலகம் விளையும்போலிருந்

தது. அதே சமயத்தில் ஆங்கிலேயர் டேலிப் ஸிங்கின் தாயைப் பஞ்சாபிலிருந்து தூரத்தியும், டேலிப் ஸிங்குக்கு விவாக மாகாதவாறு தடுத்தும் வந்தனர். இதனால் அங்கும் சண்டை ஏற்பட்டது. ராம் நகர், ஸாதுல பூர், சிலியன்வாலா என்ற விடங்களில் ஆங்கிலேயர் அதிக வெற்றி யடையவில்லை. 1849-ல் கூர்ஜரத்தில் ஆங்கிலேயர் வெற்றி யடைந் தார்கள்; சீக்கர்களும் வேறு வகையின்றிச் சரண மடைந்தனர். உடனே டல்ஹௌஸி பஞ்சாப்பைத் தம் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டு, பரிபாலனத்திற்குத் தகுந்த ஏற்பாடு செய்தார். டேலிப் ஸிங்குக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டது. நாட்டில் அமைதி யுண் டாக்க மூன்று கமிஷனர்கள் நியமிக்கப்பட்டனர். பிரக் யாதிபெற்ற லாரேன்ஸ் சகோதரர்கள், சீக் வீரர்களை அடக்கி, தொழிலில் ஊக்கம் உண்டாக்கி, சட்டங்களின் மூலமாய் நியாய விசாரணை முறைகளை ஒழுங்குபடுத்தி, வியாபாரத்திற்கும் பிரயாணத்திற்கும் வசதியாகக் கல்விச் சாலைகளையும், பாசனத்துக்குக் கால்வாய்களையும் பொது ஜனங்களின் நன்மைக்காக ஏற்படுத்தினார்கள். சீக் சேனை களும் பிரிட்டிஷாருக்கு உதவியாக இருந்தன். இவ்வாறு இவர் காலத்தில் பிரிட்டிஷ் ராஜ்யம் மேலான நிலைமையை யடைந்தது; பிரிட்டிஷ் ஆதிபத்தியம் அதிகரித்தது.

---

# அத்தியாயம் 8

## பேண்டிங், டல்ஹௌஸி காலத்திய சீர்திருத்தங்கள்

பிரிட்டிஷ் ஆதிபத்தியம் பலமடைந்தது :—இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிபத்தியம் ஏற்படுத்தின பிறகு ஜன சமூக நன்மைக்கும், ஆதிபத்தியம் பலமடைவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன 1805-முதல் 1858-ம் வருஷத்திற்குள்ளாக தேசத்தில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டன. அமைதியும் ஒழுங்கும் விளங்கின. ராஜ்ய பரிபாலன முறைகள் சரிவரக் கையாளப்பட்டன. ஜனங்களின் முன்னேற்றத்தின் பொருட்டு, கல்வி, சமூக சீர்திருத்தம், விவசாய வியாபார சாதனங்கள், போக்கு வரவுக்குள்ள கஷ்டங்களை நிவர்த்தி செய்வது, இவைகளெல்லாம் அவசியம். இல்லாவிடில் ராஜ்யத்தைப் பலப்படுத்தி நிலைநிறுத்தமுடியாது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நம்முடைய தேசத்தில் சட்டங்களை ஏற்படுத்தி மக்களின் நன்மைக்குப் பாடுபட்டு, தேசத்தின் அமைதிக்கு விரோதமான கொடிய ஜாதியார்களையும், தேசமுன்னேற்றத்திற்கு இடையூறான கொடிய வழக்கங்களையும் கண்டித்து ஜனங்களுக்குக் கல்வியை விருத்தி செய்து வந்திருக்கிறார்கள். அப்படி நன்மை செய்து ராஜ்யத்தைப் பலப்படுத்தி, சீர்திருத்தம் செய்தவர்களில் பெண்டிங்கும், டல்ஹௌஸியும் பிரபலமானவர்கள்.

பெண்டிங்க் செய்த சீர்திருத்தங்கள் :—ராஜாங்க விஷயத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்ததல்லாமல், சமூக முன்னேற்றத்தில் பெண்டிங்க் செய்த நன்மைகள் மறக்க முடியாதனவாகும். அக்காலத்தில் ரஜபுத்திரர் முதலியோர் வீரமுள்ள ஆண் குழந்தைகளைப் பெறுவதே முக்கிய

நோக்கமாகக் கருதி, பெண் சிசுக்களைக் கொன்று வந்தார்கள். இத்தகைய கொடிய வழக்கத்தை சட்டத்தின் மூலமாகத் தடுத்தது மல்லாமல் சிசுஹத்தி செய்தவர்களைத் தண்டனைக் குள்ளாக்கினர்.

'சத்தி'யை ஒழித்தது:—மேலும் அந்நாளில் கையாளப் பட்ட உடன்கட்டை யேறுதல் என்ற கொடிய பழக்கத்தையும் அறவே ஒழித்தார். அதாவது, கணவன் இறந்தால் கற்புள்ள அவன் மனைவியும் அத்துயராற்ருது உடனே உயிர் விடுவது புராதன கால வழக்கமாகும். அவ்வாறு பிராணத்தியாகம் செய்பவர்களுக்குச் 'சத்தி' யென்று பெயர். ஆனல் நாளடைவில் இது மிகவும் கொடுமையான வழக்கமாயிற்று. 'கணவனை இழந்த துயராற்ருது தீக்குளித்தாள்,' என்று உலகத்தாரால் புகழப்படுதலைக் கருதிச் சிலரும், அவ்வாறு உயிர் இழக்காவிடில், ஜனங்கள் கூறும் பழிமொழிகளுக் கஞ்சிப் பலரும் கணவனுடைய காஷ்டத்தில் ஏறி இறந்தார்கள். இவ்வாறு செய்ய விரும்பாதவர்களைச் சுற்றத்தார் முதலியோர் கட்டாயப் படுத்துவதும் உண்டு. ஒருத்தி தானே தற்கொலை செய்துகொள்வதும், பிறர் அத்தகைய செயலுக்கு ஆதரவளிப்பதும் எவ்வளவு அநாகரீகமானது! ஆதலின் பெண்டிங்க் பொது ஜனங்களின் நன்மைக்காக, இதனை யொழிக்குமாறு கடுமையான விதி 1819-ல் செய்தார். அதனுல் அவருடைய ஆட்சிக் காலத்திற்குள்ளாகவே இவ்வழக்கம் முற்றிலும் நின்றுபோயிற்று.

தக்கர்களை அழித்தல் :—பெண்டிங்க் செய்த சீர்திருத்தங்களில் இதுவும் முக்கியமானதாகும். அக்காலத்தில் **தக்கர்** (Thugs) என்ற ஆறலை கள்வர் (வழிப்பறிக் கொள்ளைக்காரர்) சந்நியாசிகளைப்போலவும் சாமானியர்களைப் போலவும் உடைதரித்து, ஏமாந்த வழிப்போக்கர்களைக்

கொள்ளையடித்து வந்தனர். இவர்கள் காளி தேவியைத் தொழுது வந்ததோடும், உயிர்க்கொலை செய்வதும், நரபலி கொடுப்பதும் அத்தெய்வத்திற்குப் பிரீதி யென்றெண்ணி அவ்வாறே செய்துவந்தனர். இக்கஷ்டத்தை ஒழிப்பதற் கான ஏற்பாடுகளைப் பெண்டிங்க் செய்யலானார். காப்டன் ஸ்லீமன் என்பவர் பல ஆண்டுகள் மிகக் கஷ்டப்பட்டு (1829—1837)ச் சுமார் மூவாயிரம் பேர்களைப் பிடித்தார். அவர்களில் பலர் நாடு கடத்தப்பட்டும், எஞ்சினவர்கள் கொல்லப்பட்டும் ஒழிந்துபோனார்கள். இதனால் வழிப்போக் கர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் பெரிய நன்மை யுண்டாயிற்று.

கல்விமுறை ஏற்பாடு: சீர்திருத்தம்:—கம்பெனியாரின் ஆளுகையால் அநேக பாடசாலைகள் ஏற்பட்டன. 1781-ல் வாரன்ஹேஸ் டிங்க்ஸ் கல்கத்தாவில் மகமதிய கலா சாலையை ஸ்தாபனம் செய்தார். 1791-ல் காசியில் ஸம்ஸ்கிருத பாடசாலை ஏற்படுத்தப்பட்டது. 1813-ல் ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து அநேக பள்ளிக்கூடங் களும் கலாசாலைகளும் ஏற்படுத் தினார்கள். வைத்திய சாஸ்திரங்கள் பயிலுவதற்கும், தேசீயக் கல்வி கற் பிப்பதற்கும் கலாசாலைகளும் ஏற் பட்டுள்ளன. பெண்டிங்க் காலத்தில் மந்திராலோசனை சபையில் சட்ட மெம்பராக இருந்த மேகாலே (Macaulay) என்பவரின் கருத்தின்படி, ஆங்கிலமே ராஜாங் கத்தில் பாஷையா யிருக்க வேண்டுமென்றும், இந்தியர் களுக்கு ஆங்கிலேய இலக்கிய இலக்கணங்களிலும், சாஸ்



ராஜாராம் மோஹனராய்

திரங்களிலும் பயிற்சி ஏற்பட வேண்டியது அவசிய மென்றும் திட்டம் ஏற்பட்டது. மேனாட்டுக் கல்வியும், கலைகளும் இந்தியாவில் பரவ ஆரம்பித்தன. இவ்வாறு இங்கிலிஷ் கல்வியைப் பரப்புவதிலும், சத்தியென்ற கொடிய வழக்கத்தை ஒழிப்பதிலும் ராஜா ராம் மோஹன ராய் என்ற இந்து கனவான் பெண்டிங்குக்கு மிகவும் உபகாரமாயிருந்தார்.

சாஸனம் புதுப்பிக்கப் படுதல்:—ரெகுலேட்டிங் ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி கம்பெனியாரின் சாஸனம் 20 ஆண்டுகளுக் கோர்முறை புதுபிக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் 1833-ல் அச் சாஸனம் புதுப்பிக்கப்பட வேண்டியதாயிற்று. அப்போது அதில் செய்யப்பட்ட மாறுதல்களின்படி மெகாலே என்பவர் கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையில் சட்ட இலாகாவின் தலைவராக நியமிக்கப்பட்டார். கம்பெனியார் இனி வியாபாரம் செய்வதை நிறுத்திவிட்டு, அரசாட்சி புரிவ தொன்றையே கவனிக்க வேண்டு மென்றாயிற்று. அதை அனுசரித்துக் கம்பெனியாரும், தாங்கள் செய்து வந்த வியாபாரத்தை ஒழித்து, பார்லிமெண்டின் மேற்பார்வைக்குட்பட்டு அரசாளலானார்கள். இந்தியா முழுவதையும் கட்டுப்படுத்தும் சட்டங்களை நிரூபணம் செய்ய கவர்னர் ஜெனரலுடைய சபைக்கு அதிகாரம் உண்டாயிற்று. மேலும் ஜாதி, மத பேதமின்றி அவரவரின் யோக்யதைக் கேற்ப இந்தியர்களை அரசாங்க உத்தியோகங்களுக்கு நியமிக்கலாம் என்றேற்பட்டது.

தந்தி தபால்கள்:—இவ்விதமாகவே, 1848 முதல் 1856 வரையிலும் கவர்னர் ஜெனரலாக விருந்த லார்டு டல்ஹௌஸி இந்தியர்களின் முன்னேற்றத்தின் பொருட்டுப் பல நன்மைகளைச் செய்தார். தற்காலத்தில் நாம் நிரம்பவும் சகஜமாக ரெயில்வே, தந்தி, தபால் முதலிய

வைகளை வர்த்தகம், போக்குவரத்து முதலிய பல விஷயங்களுக்கும் உபயோகிக்கிறோம். இவற்றால்குறைந்த காலத்திலும், குறைந்த செலவிலும் வெகு தூரத்திலுள்ள இடங்களுக்கும் சமாச்சாரங்களைக் கடித மூலமாகவும், மின் சாரசக்தியின் உதவியாலும் அனுப்புகிறோம். இருப்புப்பாதையும் அவ்வாறேஉபயோகமாகிறது. இவர் அரையணா முத்திரைச் சீட்டைத் தபால் இலாகாவில் ஏற்படுத்தி ஒழுங்கு படுத்தினார். தந்தியும் முதன் முதல் டல்ஹௌஸியாலேயே, இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டது.



லார்டு டல்ஹௌஸி

1853-ல் பம்பாயிலிருந்து தானாவுக்கு முதன் முதலாக இருப்புப் பாதை போடப்பட்டது. நீர்ப் பாசன வசதிக்காகப் பல கால்வாய்களை வெட்டுவித்ததோடு, மராமத்து இலாகா (Public Works Department)வையும் உண்டு பண்ணினார். டல்ஹௌஸி கல்விக்காகவும் பாடுபட்டார். தற்காலத்துக் கல்வி முறையிலுள்ள ஏற்பாடுகள் அவரால்தான் உண்டாயின என்னலாம்; கல்வி இலாகாவைச் சீர் திருத்தம் செய்வதற்கு உத்தரவளித்தார்கள். 1854-ல் கம்பெனியின் அதிகாரிகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் அதனதன் சுதேச பாஷையின் மூலமாகக் கல்வி கற்பிக்கும்படி பல ஆரம்ப பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டன.

ஆங்கிலமும் மற்றுள்ள பாடங்களும் பயிலுவதற்கு, உயர்தரப் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தினர். கல்விச் சாலைகளை மேற் பார்வையிட மாகாணங்கள் தோறும் ஒரு கல்வி இலாகா (D. P. I.) ஏற்படுத்தப்பட்டது. அதன் அதிகாரி டைரக்டர் ஆவ் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் ('Director of Public Instruction'—பொதுஜனக் கல்வியை நடத்தும் சர்வாதிகாரி). அதுவுமன்றிக் கல்கத்தா, பம்பாய், சென்னை இம்மூன்றிடங்களிலும் சர்வகலாசாலைகள் (Universities) உண்டாயின. இவ்விதமாக நம்மவர்களின் மேம்பாட்டைக் கருதிப் பல சீர்திருத்தங்கள் செய்யப்பெற்றன.

சாஸனம் புதுப்பிக்கப்படுதல் :—20 வருஷமான அளவில் 1853-ல் ஓர் முறை கம்பெனியாரின் சாஸனம் புதுப்பிக்கப்பெற்றது. அதன்படி முன்போல இவ்வளவு காலம் கம்பெனியார் ஆட்சி புரிவதென்பதின்றிப் பார்லிமெண்டார் இஷ்டப்பட்டவரை கம்பெனியார் ஆண்டு வரலாமென விதிக்கப்பட்டது. இதனால் எப்போது வேண்டுமானாலும், பார்லிமெண்டார் நேரிலேயே இந்திய ஆட்சியை வகிக்க வசதியுண்டாயிற்று. சிவில் உத்தியோகஸ்தர்களை டைரக்டர்கள் தம் இஷ்டம்போல் நியமிக்கக் கூடாதென்றும், அவ்வுத்தியோகஸ்தர்கள் அதற்குரிய பரீக்ஷையில் தேர்ச்சிபெற வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. வங்காளம், பீஹார் என்பவற்றிற்கு ஒரு தனி கவர்னர் நியமிக்கப்பட்டார்.

# அத்தியாயம் 9

## கம்பெனி ஆட்சியின் முடிவு

சிப்பாய்க் கலகம் :—1856-ல் டல்ஹௌஸிப் பிரபு இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றதும், கானிங் பிரபு கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்றார். இவர் காலத்தில் பூகம்பம்போன்ற ஒரு ராஜீய அதிர்ச்சி ஏற்பட்டு, இந்தியாவில் வேரூன்றியிருந்த இங்கிலிஷ் ராஜ்ய அமைப்பில் பெரியதொரு மாறுதலைச் செய்தது. 1600-ல் எலிஜபெத் மஹாராணியிடம் சாஸனம் பெற்று இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேய வியாபாரிகள் படிப்படியாகத் தங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்துகொண்டதுடன், இந்தியாவை ஆளும் பெருமையையும் பெற்றனர்.



கானிங் பிரபு

கிளைவ், வாரென் ஹேஸ்டிங்க்ஸ் முதலியவர்களுடைய முயற்சியினுல் ஆங்கிலேய ராஜ்யம் இந்தியாவில் மேலோங்கி வளர்ந்தது; 1757-ல் பிளாஸி யுத்தத்தில் வேரூன்றப் பெற்ற அந்த ராஜ்யமானது, சரியாக நூறு வருஷங்களுக்குள் உன்னத பதவிக்கு வந்தது. அதனுல் ஆங்கிலேயரின் நேரான ஆட்சிக்குட்பட்டோ, அல்லது அவர்களுடைய மேற்பார்வைக் குட்பட்டோ இந்தியா முழுவதும் அமைதியுற்றிருந்ததாகத் தோன்றியது. ஆனுல் 1857-ல் ஒரு பெரிய சிப்பாய்க் கலகம் ஏற்பட்டு, ஆங்கிலேயரின் அதிகாரத்தையே குலைத்துவிடும்போலிருந்தது.

காரணங்கள் :—இக் கலகம் தோன்றியதற்குப் பல விஷயங்கள் காரணமா யிருந்தன. டல்ஹௌஸிப் பிரபு

வெகு வேகமாகச் சுதேச ராஜ்யங்களை ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்த்தது ஒரு முக்கிய காரணமாகும். அயோத்தியை அவ்வாறு அவர் சேர்த்தது ஜனங்களிடையே ஒரு பரபரப்பை உண்டுபண்ணிற்று; அயோத்தியில் நவாப்பினிடம் வேலையாயிருந்தவர்கள் தமது வேலையை இழந்தனர். அயோத்தியின் மக்களுக்காக எத்தனையோ நன்மைகளைச் செய்ய ஆங்கிலேய அரசாங்கத்தார் எண்ணியிருந்தும், ஜனங்களுக்கு உடனேயே புதியமுறையில் நம்பிக்கை பிறக்கவில்லை. ஜான்ஸி என்ற நாட்டையும் டல்ஹௌஸிப் பிரபு சேர்த்துக்கொண்டதால், அந் நாட்டின் இராணியான இலக்ஷ்மிபாய் ஆங்கிலேயர்மீது பகை கொண்டிருந்தார். கடைசிப் பீஷ்வாவும், பீஷ்வாப் பதவியிலிருந்து விலக்கப்பட்டவருமான 2-வது பாஜி ராவுக்குக் கொடுத்து வந்த உபகாரச் சம்பளத்தை அவரது தத்துப்புத்திரரான நானா சாகேப்புக்குக் கொடுக்க மறுத்ததால், அவரும் ஆங்கிலேய ஆட்சிக்கு விரோதியானார். டில்லி நகரில் ஆங்கிலேயருக்குத் திவானியை யளித்த ஷா ஆலத்தின் பேரப்பிள்ளையான 2-வது பகதூர்ஷா பெயருக்கு மட்டில் மொகலாய சக்கரவர்த்தியாக விளங்கிவந்தார்.

இந்தியர்கள் தீவிரமான மதப்பற்றுள்ளவராதலால் மதசம்பந்தமாக ஏற்பட்ட பல மாறுதல்கள் அவர்களுடைய மனதைக் கலக்கியிருந்தன. உடன்கட்டையேறுதலை பெண்டிங்க் பிரபு நிறுத்தியது பொதுஜன சம்மதத்தைப் பெற்றேயிருந்தது. ஆனால் விதவைகள் மறு விவாகம் செய்து கொள்ளலாம் என்றும், கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தாலும் ஒரு வார்ஸுதாரர் தனது வார்சுரிமைகளை இழக்கமாட்டார் என்றும் சட்டங்கள் இயற்றினது ஆங்கிலேயர் இந்தியாவில் கிறிஸ்துவ மதத்தைப் பரவச் செய்ய முயற்சிக்கின்றனர் என்ற எண்ணத்திற்கு இடமளித்தது. புதிதாக

வந்த புகைவண்டிகளும், தந்தி, தபால்களும் பெருத்த மாறுதல்களாகத் தோன்றின.

இக்கலகம் நடந்ததற்குச் சிப்பாய்களே முக்கிய காரணமாவர். அவர்களுக்குள்ளும் மன அதிருப்திக்கு இடமிருந்து வந்தது. சிப்பாய்களுள் பலர் தீவிர மதப்பற்றுடைய ஹிந்துக்களாவர். கடலைத் தாண்டுவது பாவச் செய்கை என்று அவர்கள் கருதினர். இனிமேல் சிப்பாயாகச் சேர விரும்புபவர்கள் எவ்விடத்திலும் சென்று சண்டை செய்யத் தயாராக இருப்பதாக உறுதிகூறவேண்டுமென்ற உத்தரவு பிறந்ததும், சிப்பாய்களுள் கலவாமுண்டாயிற்று. மேலும் சண்டையில் மாடு, பன்றி இவற்றின் கொழுப்பைத் தடவிய தோட்டாக்களை உபயோகிக்க வேண்டுமென்ற விதி பிறந்ததும், சிப்பாய்கள் ஏற்கெனவே தங்களது மதத்தைப்பற்றிக் கொண்டிருந்த பயம் ஊர்ஜிதப்பட்டது. ஏனெனில் ஹிந்துக்களுக்குப் பசு புண்ணிய மிருகம்; மகமதியர்களுக்குப் பன்றி வெகு அசுத்தமான பிராணி. அத்துடன் சேனையில் இங்கிலிஷ் சிப்பாய்களின் எண்ணிக்கை குறைவா யிருந்தது சுதேச சிப்பாய்களுக்குத் தைரியத்தை யளித்தது. பல விடங்களில் யுத்த சாதனங்கள் முழுவதும் சுதேச சிப்பாய்கள் வசமே இருந்தன. இவ்வாறு இராஜீயம், மதம், சேனை சம்பந்தமான காரணங்களால் திடீரென்று பெரிய சிப்பாய்க் கலகமொன்று தோன்றிற்று.

கலகம் பரவுதல் :—முதன் முதலாக பாரக்பூர் என்றவிடத்தில் கலகம் தோன்றியது. பிறகு மீரட் நகரத்துச் சிப்பாய்கள் அங்கிருந்த ஐரோப்பியர்களைக் கொன்றுவிட்டு டில்லி நகரை நோக்கிச் சென்று, அங்கே பஹதூர்ஷாவை இந்திய சக்கரவர்த்தியெனப் பட்டம் சூட்டினர். ஐரோப்பியர்களை அங்கும் வதை செய்தனர். இவ்வாறு மீரட்டில்

துவக்கிய கலகம் கான்பூர், லக்னௌ, ஜான்ஸி முதலான இடங்களுக்குப் பரவியது. கான்பூரில் நானசாகேப் கலகத் தலைவராக இருந்தார். அங்கிருந்த ஐரோப்பியர்களை அலஹபாத்துக்குச் செல்லுவதற்கு அனுமதி யளித்த பின்பு, அவர் ஐரோப்பியர் யாவரையும் குரூரமாகக் கொன்றுவிட்டார். லக்னௌவில் ஏற்பட்ட கலகத்தில் அவ்விடத்தில் முக்கிய அதிகாரியா யிருந்த ஸர் ஹென்றி லாரேன்ஸ் கொல்லப்பட்டார். நானசாகேப்பின் தளகர்த்தரான டாண்டிய டோபி என்பவனும் ஜான்ஸி ராணியும் கலகத்தில் சேர்ந்துகொண்டனர்.

கலகத்தை அடக்குதல்:—கலகம் காட்டுத்தீ போலப் பரவினும் சீக்கிரத்தில் ஆங்கிலேய தளகர்த்தர்கள் அதை அடக்கி விட்டனர். ஹேவ்லக் என்பவர் நானசாகேப்பைத் தோற்கடித்துக் கான்பூரைப் பிடித்துக் கொண்டார். நான சாகேப் இமயமலைக் காடுகளில் ஓடி ஒளிந்து மறைந்தார். டில்லியில்இருந்த பஹதூர்ஷாவையும் வேறொரு தளகர்த்தர் சிறைப்பிடித்தார்; பஹதூர்ஷாவை ரங்கூனுக்கு அனுப்பி விட்டனர். பாபரினால் ஏற்படுத்தப்பட்டு, அக்பரினால் ஒளிபெற்ற மொகலாய வம்சம் இவ்வாறு முடிவடைந்தது. டாண்டிய டோபியும் தோல்வியடைந்து ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டு மரண தண்டனை யடைந்தான். மத்திய இந்தியாவில் ரோஸ் என்ற தளகர்த்தர் கலகத்தை அடக்கினர். ஜான்ஸி ராணி ஆண் உடை தரித்துப் போர் புரிந்து போர்க்களத்திலேயே உயிர் நீத்தார். கலகத் தலைவர்களுள் இவ் வம்மணியே மிகுந்த தைரியமும் சிறந்த குணமும் பெற்றிருந்தார். காம்பேல் என்பவர் லக்னௌவை மீட்டுவிட்டார். 1859-ல் கலகம் முற்றிலும் அடக்கப்பட்டது. கலகத்தில் ஏராளமான கொலைகள் இருதிறத்தாராலும் செய்யப்பட்டபோதிலும், எத்தனையோ இந்தியர்கள்

தமது உயிரையும் லக்ஷியம் செய்யாமல் ஐரோப்பிய ஸ்திரீகளையும், குழந்தைகளையும் காப்பாற்றி வந்தனர்.

சிப்பாய்க் கலகம் இவ்வளவு சுலபமாக அடக்கப்பட்டதற்குப் பல காரணங்கள் உண்டு. கலகம் ஏதோ சிற்சில இடங்களிலேயே நடைபெற்றதேயன்றி ஒரு தேசிய இயக்கமாக நடைபெறவில்லை. சென்னை, பம்பாய்த் துருப்புகள் கலகத்திற்கு ஆதரவளிக்கவே யில்லை. சுதேச சமஸ்தானங்களில் பல ஆங்கிலேயருக்கு உதவின. சீக்கியர்கள் ஆங்கிலேயருக்கே உதவிபுரிந்தனர். கலகத் தலைவருக்குள் ஒற்றுமையும் இல்லை. பஹதூர் ஷாவும், நானாசாகேப்பும், ஜான்ஸி ராணியும் தம் தம் சுயநலத்தை மட்டும் நாடினரே யன்றிப் பொதுவான நோக்கத்துடன் சண்டையிடவில்லை. சிப்பாய்க் கலகம் பெருவெள்ளம்போலின்றி அலை எழுந்து தாழ்வதுபோல் ஒவ்வோரிடத்தில் மும்முரமடைந்து ஓய்ந்துவிட்டது.

ராஜாங்க மாறுபாடு :—சிப்பாய்க் கலகம் ஒருவிதத்தில் அதிருஷ்ட சம்பவமென்றே கூறவேண்டும். கலகம் முடிந்தவுடன் கம்பெனியின் ஆட்சியை முடிவு பெறச் செய்து, இங்கிலாந்தின் அரசியான விக்டோரியா மகாராணியார் தாமே இந்திய துரைத்தனத்தை ஏற்றுக்கொண்டார். 1858-ல் நவம்பர் மாதத்தில் மகாராணியாருடைய சாஸனமொன்று முக்கிய நகரங்களிலெல்லாம் படிக்கப்பட்டது. அலஹாபாத்தில் கவர்னர் ஜெனரலான கானிங் பிரபு தர்பார் ஒன்று நடத்தி இந்தியாவின் மன்னர்களுக்கும் மக்களுக்கும் மகா சாஸனத்தை விளம்பரப் படுத்தினர்.

மஹா சாஸனம் :—விக்டோரியாவின் மகா சாஸனம் இந்தியர்களுடைய உரிமைகளுக்கு ஆதாரமானபத்திரமாகப் பெயர்பெற்றுள்ளது. பத்திரத்தில் அரசியார் அதுகாறும் கம்பெனியாரால் நடத்தப்பெற்ற இந்திய துரைத்தனத்தைத்

தாமே எடுத்துக்கொள்வதாக அறிக்கை செய்தார். கம்பெனியாருடைய ஆட்சியில் கடைசி கவர்னர் ஜெனரலாக இருந்த கானிங் பிரபுவை முதல் இராஜப்பிரதிநிதி (வைஸ்ராய்)யாக நியமித்தார். கம்பெனியாருடன் செய்து



விக்டோரியா மகாராணி

கொண்ட உடன்படிக்கைகளையும் ஏற்பாடுகளையும் தாமும் ஏற்பதாக உறுதி கூறினர். இந்தியாவில் ஏற்கனவே இருந்த பிரிட்டிஷ் இராஜ்யத்தின் விஸ்தீரணத்தை அதிகப்படுத்தத் தமக்கு ஆசையில்லை என்றும் கூறினர்.

மன்னர்களின் உரிமை :—சுதேச மன்னர்களுடைய உரிமைகளையும், மரியாதைகளையும் பாதுகாப்பதாகவும், நல்ல அரசினாலும் உள் நாட்டின் அமைதியாலும் மன்னரும் மக்களும் முன்னேற்றமடைய வேண்டுமென்றும் தாம் விரும்புவதாகவும் அரசியார் தெரியப்படுத்தினர்.

மத உரிமைகள் :—தாம் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்திருந்தபோதிலும் இந்திய மக்களினிடத்தில் தமது மதக் கொள்கைகளை பரவச் செய்யத் தமக்கு ஆசையும், உரிமையும் இல்லை யெனவும், மதக் கொள்கை காரணமாக ஒரு பிரஜைக்கும் விசேஷ உரிமையோ கஷ்டமோ ஏற்படாதென்றும் , யாவரும் பக்ஷபாதமின்றிச் சமத்துவத்துடன் சட்டத்தினால் பாதுகாக்கக் படுவாரென்றும், அரசாங்க அதிகாரிகள் பிரஜைகளுடைய மத நம்பிக்கை, மதச் சடங்குகள் விஷயத்தில் தலையிடக் கூடாதென்றும் அப் பத்திரத்தில் கண்டிருந்தது. அதேமாதிரி, எந்த ஜாதி மதத்தைச் சேர்ந்திருந்த போதிலும், கல்வி, திறமை, நல்லொழுக்கம் இவற்றால் உரிய யோக்கியதையைப் பெற்றுள்ள பிரஜைகள் பக்ஷபாதமின்றி அரசாங்க சேவைக்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டுமென்றும் நிர்ணயம் செய்யப்பட்டது. சட்டங்களை இயற்றி நிர்வாகம் செய்யுங் காலத்தில் இந்தியாவின் புராதன உரிமைகளையும், பழக்க வழக்கங்களையும் அனுதாவு செய்வதில்லை எனவும் கண்டிருந்தது.

மன்னிப்பு :—தவறான செய்திகளைப் பரப்பி ஜனங்களை ஏமாற்றிக் கலகம் உண்டுபண்ணியதைப்பற்றி தாம் பெரிதும் வருந்துவதாகவும், அக்கலகத்தை யடக்கித் தமது சக்தியைக் காண்பித்ததுபோலவே, தவறாகக் கலகத்தில் கலந்ததற்கு வருந்தி, நல்லொழுக்க முறையில் ஈடுபடுவோர்களை மன்னித்துத் தமது கருணையையும் காண்பிக்க விரும்புவதாகவும், விக்டோரியா மகாராணியார் கூறினர். பிரிட்டிஷ்

பிரஜைகளைக் கொல்லுவதில் நேராகக் கலந்துகொண்டவரைத் தவிர மற்ற கலகத் தலைவர்களுக்குத் தண்டனையளிப்பதில் அவர்கள் கலகத்தில் கலந்துகொண்ட சந்தர்ப்பங்களை ஆராய்ந்து பார்ப்பதாகவும், தவருன செய்திகளை நம்பிக் கலகம் செய்திருந்தால் அவர்களுக்கு அதிகமான தயவு காட்டுவதாகவும், மற்றபடி கலகத்தில் சம்பந்தப்பட்டு அரசாங்கத்தை எதிர்த்தவர்களுக்கு பூர்ண மன்னிப்பு அளிப்பதாகவும் அரசியார் உறுதி கூறினர்.

தேச க்ஷேமம் :—கடவுள் கிருபையினல் இந்தியாவில் அமைதி நிலை பெற்றவுடன் இந்தியாவின் க்ஷேம லாபத்தையும் பொது மக்களுக்கு உபயோகமான சாதனங்களையும் அபிவிருத்தி செய்யத்தாம் விரும்புவதாகவும் இத்தேசத்தில் வாழும் எல்லாப்பிரஜைகளின் நன்மைக்காகவும் தாம் அரசு இயற்ற விரும்புவதாகவும், இந்தியரின் க்ஷேமத்திலேயே தமது பலமும், அவர்களுடைய திருப்தியிலேயே தமது உறுதிநிலையும், அவர்களுடைய நன்றி யறிவிலேயே தமது மேலான வெகுமதியும் இருப்பதாகவும், தமக்கும் தம் கீழ் இருப்பவருக்கும் இந்தியப் பிரஜைகளின் நன்மையின் பொருட்டுத் தாம் கொண்டுள்ள ஆசைகளைப் பூர்த்தி செய்ய எல்லாம் வல்ல இறைவன் கருணை செய்யவேண்டுமெனவும் மகாராணியார் அறிவித்தார்.

இவ்வாறு கம்பெனியாரின் ஆட்சி முடிவுற்று இந்திய நாடு பிரிட்டிஷ் இராணியினுடையவும், பார்லிமெண்டினுடையவுமான அதிகாரத்திற்கு உட்பட்டது. பிரிட்டிஷ் மந்திரி சபையில் ஒருவர் இந்தியா மந்திரியானர். அவருக்கு ஆலோசனை கூறப் பதினைந்து அங்கத்தினரடங்கிய ஒரு சபையும் ஏற்பட்டது. இராஜப்பிரதிநிதி தனது சபையுடன் இந்திய விவகாரங்களை நேரில் கவனித்து வந்தார்.

மகா சாஸனத்தின் மூலம் மன்னர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டன. பொதுவான சட்டம் யாவருக்கும் வழங்கப்படலாயிற்று. மத விஷயத்தில் அரசாங்கத்தார் பிரவேசிப்பதில்லை என்ற உறுதி தரப்பட்டது. அரசாங்க சேவை செய்வதில் ஜாதிமத பேதங்கள் கவனிக்கப்பட மாட்டா என்ற விதியும் ஏற்பட்டது. அத்துடன் சிப்பாய்க் கலகத்திற்கு முக்கிய காரணமாயிருந்த ராஜ்யப் பெருக்க இயக்கமும் முடிவுற்றது. சுதேச மன்னர்கள் புத்திரர்கள் இல்லாமற்போனால் சுவீகாரம் செய்து கொள்ளலாம் என்ற உரிமையும் மீண்டும் அளிக்கப்பட்டது. 1858-ல் இந்திய சரித்திரத்தின் நவீன சகாப்தம் ஆரம்பமாயிற்று. புராதன முறைகள் மாறிப் புதிய முறைகள் முன்னுக்கு வந்தன.

---

## அத்தியாயம் 10

---

### கானிங் பிரபு (1858—1862)

அமைதியை நிலைநிறுத்தல் :—முதல் வைஸ்ராயாகிய கானிங் பிரபுவின் முக்கிய வேலை தேசத்தில் அமைதியை நிலை நிறுத்துவதாயிற்று. அக் கடினமான வேலையைச் செய்ய அவர் மிகவும் தகுதியுடையவராக இருந்தார். பல ஆங்கிலேயர்கள் சிப்பாய்க் கலகத்திற்குக் காரணமாயிருந்த அனைவர்மீதும் பழிதீர்க்க வேண்டுமென்று கூக்குரலிட்டனர். ஆனால் பழிக்குப் பழி வாங்குவதால் தேசத்தின் நிலைமை கேடுறுமென்று அறிந்த கானிங் அவர்களது புத்திமதியை ஏற்க மறுத்துவிட்டார். அவர்கள் கானிங் பிரபுவை ஏளனமாகக் 'கருணை நிறைந்த கானிங்' என்று அழைத்தனர். அப் பட்டம் பிற்காலத்தில் அவருக்குச் சிறப்பூட்டுவதாயிற்று. அவருடைய சமாதான முறையி

ளுல், இந்தியர்களுக்கு ஆங்கிலேய அரசியிடம் மிகுந்த நம்பிக்கை ஏற்பட இடமுண்டாயிற்று. அவர் பல தர்பார்கள் நடத்தி, அவற்றிற்கு வந்த மன்னர்களுக் கெல்லாம் ஆங்கிலேய அரசுக்குட்பட்டு அவர்கள் பயமின்றி வாழலாம் என்று உறுதி கூறினர்.

சீர்திருத்தங்கள் :—நாடு நலம் பெறும் பொருட்டுக் கானிங் பிரபு பல சீர்திருத்தங்களைச் செய்தார். சிப்பாய்க் கலகத்தின் காரணமாக அரசாங்கத்தின் பொக்கிஷம் வெகுவாக மலினமடைந் திருந்தது. இங்கிலாந்திலிருந்து வந்த இரு பிரபலஸ்தர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்து நாணய சம்பந்தமான சில ஏற்பாடுகளை அமுலுக்குக் கொண்டு வந்து அரசாங்க வருமானத்தை ஒழுங்குபடுத்தினர். வருமான வரியும், காகித நாணயமும், பலதுறைகளிலும் சிக்கனமும், வரவு செலவு திட்டத்தை ஒருவாறு ஒழுங்குபடுத்தின.

சேனையும் ஒழுங்குபடுத்தப்பெற்றது. இதுகாறும் தனியாக இருந்துவந்த கம்பெனியின் துருப்புகளையும் இராணியின் துருப்புகளையும் ஒன்ருக்கினர். இராணுவ முறையும் பலவாறு சீர்திருத்தப்பட்டது.

கல்வியிலும் பெரியதொரு முன்னேற்றம் உண்டாயிற்று. டல்ஹௌஸிப் பிரபு 1845-ல் சர் சார்ல்ஸ் வுட் என்பவர் தயாரித்த கல்வி யாதாஸ்தை அனுசரித்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு சர்வகலாசாலை அமைப்பதைப்பற்றி ஆலோசனை செய்திருந்தார். கானிங் பிரபு அவ்வாலோசனையை யொட்டி 1857-ல் சிப்பாய்க் கலகத்தைக் கண்டும் கலவரமுருமல் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று நகரங்களிலும் லண்டன் சர்வகலாசாலையின் அமைப்பை யொட்டி மூன்று சர்வகலாசாலைகள்

அமைத்தார். இச்சர்வகலாசாலைகளில் மேனாட்டுக் கல்வி போதிக்கப்பட்டதால், இந்தியர்கள் மேனாட்டுக் கலைகளையும், சாஸ்திரங்களையும் பயிலவும், கீழ்நாடும் மேனாடும் நெருங்கிப் பழகவும் இடமுண்டாயிற்று. பிற்காலத்தில் மற்ற தலைமை நகரங்களிலும், சுதேச சமஸ்தானங்கள் சிலவற்றிலும் சர்வகலாசாலைகள் ஏற்பட்டன. இச் சர்வகலாசாலைகளின் அமைப்பில் சில குறைகள் இருந்தபோதிலும் இந்தியாவின் தற்கால நிலைமை ஏற்படுவதற்கு அவைகளே முக்கியமான காரணமெனக் கொள்ளலாம்.

சட்ட இலாகா:—நியாயம் வழங்கும் இலாகாவிலும் அபிவிருத்திகள் செய்யப்பட்டன. 1858 வரை நியாயம் வழங்குவதற்குக் கம்பெனிக் கோர்ட்டுகளும் பார்லிமெண்டாரால் ஏற்படுத்தப்பெற்ற மேலான நியாயஸ்தலம் ஒன்றும் இருந்து வந்தன. அவற்றை அழித்துவிட்டு ஒவ்வொரு இராஜதானியின் தலைநகரிலும் ஒரு ஹைகோர்ட் ஏற்படுத்தப்பட்டது. பெண்டிங் பிரபுவின் காலத்தில் சட்ட மெம்பராயிருந்த மெகாலே என்பவர் பீனல் கோட் என்ற குற்றச் சட்டம், ஸிவில், கிரிமினல் நடவடிக்கைச் சட்டங்கள் இவற்றை ஒருவாறு தயாரித்து வைத்திருந்தார். 1860-ல் பீனல் கோட் (Penal Code) சட்டமாயிற்று. 1861-ல் கிரிமினல் நடவடிக்கைச் சட்டமும் வெளியிடப்பட்டது. இச்சட்டங்கள் நியாய இலாகாவைச் சிறந்த வழியில் ஒழுங்குபடுத்தின. சாதாரண மக்களுக்கு அவற்றைப் படிப்பதால் இன்னின்ன காரியங்கள் செய்தால் குற்றமாகக் கருதப்படுமென்றும், அக்குற்றத்திற்கு இன்ன தண்டனை கிடைக்குமென்றும் தெரியலாயிற்று. நியாயாதிபதிகளின் தீர்ப்புகளும் பக்ஷபாதமின்றி நாடெங்கும் ஒரே மாதிரியாக வழங்கப்படலாயின. ஒழுங்குபடுத்தித் தொகுக்கப் பெற்ற நியாயசட்டங்களே தேசமக்களின் சுதந்தரத்திற்

குப் பெரும் பாதுகாப்பாகும். இந்திய வக்கீல்களும் நியாயாதிபதிகளாக இருக்கலாமென்ற உரிமையும் அளிக்கப்பட்டது.

கௌன்ஸில் ஆக்ட் :—1773-ல் ரெகுலேடிங் ஆக்டின்படி கவர்னர் ஜெனாலுக்கு ஆலோசனை கூற நான்கு அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம். 1784-ல் இந்தியா சட்டத்தின்படி அங்கத்தினர்களின் எண்ணிக்கை மூன்றாகக் குறைக்கப்பட்டது. 1833-ல் கம்பெனியாரின் சாஸனம் புதுப்பிக்கப்பட்ட பொழுது கவர்னர் ஜெனரல் சபைக்கு ஒரு சட்ட மெம்பரும் நியமிக்கப்பட்டார். சட்டங்கள் இயற்றுவதற்கு அவருடைய உதவி வேண்டியிருந்தது. டல்ஹௌஸிப் பிரபு காலத்தில் 1853-ல் கம்பெனியின் சாஸனம் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட பொழுது அவர் இந்தியாவிற்கு ஒரு சிறு சட்ட சபை ஏற்படுத்த நிச்சயித்தார். 1833-ல் சென்னை, பம்பாய் கவர்னர்கள் அதுவரையில் பெற்றிருந்த சட்டமியற்றும் உரிமையை இழந்து விட்டனர். அப்பொழுது 'வங்காள கவர்னர் ஜெனரல்' என்ற பெயர் 'இந்திய கவர்னர் ஜெனரல்' என்று மாறிற்று. டல்ஹௌஸிப் பிரபு சென்னை, பம்பாய் மாகாண அரசாங்கங்களின் உதவியைப் பெற்றே சட்ட மியற்றவேண்டுமென்ற நோக்கத்துடன் தமது சபைக்கு ஆறு விசேஷ மெம்பர்களேயும் சேர்த்துக் கொண்டார். கானிங் பிரபுவின் காலத்தில் 1861-ல் 'இந்திய சபைகள் சட்டம்' ஏற்பட்டது. சென்னை, பம்பாய் மாகாண சட்ட சபையார் வைஸ்ராயின் அங்கீகாரத்திற்குட்பட்டுச் சட்டமியற்றும் உரிமையை மீண்டும் பெற்றனர். மாகாணங்களிலும் சிறு சட்ட சபை ஏற்பட வசதியளிக்கப்பட்டது. இந்தியா முழுவதற்குமாய் வேலை செய்த கவர்னர் ஜெனரலின் சட்ட சபையும் சீர்திருத்தப்

பெற்று, உத்தியோகஸ்தரல்லாதாரும் அதில் இடம் பெற்றனர். இவ்வாறு இந்தியாவுக்கென்று ஒரு தனிச் சட்ட சபை சிறிய அளவில் ஏற்படுத்தப் பட்டது.

இதர சீர்திருத்தங்கள் :—மேலும் கவர்னர் ஜெனரலு டைய நிர்வாகசபை யங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் சிற் சில இலாகாக்களைப் பிரித்துக் கொடுத்துவிடும் வழக்கமும் இப்பொழுது ஆரம்பமாயிற்று. இந்தியன் ஸிவில் ஸெர்விஸ் காரர்களுக்குச் சில குறிப்பான உத்தியோகங்களை அளிப்ப தென்றும், அவர்களுடைய வேலை இத்தகைய தென்றும் நிச்சயிக்கப்பட்டது. கானிங் பிரபு சில மாகாணங்களில் இருந்த குடியானவர்களுக்குச் சௌகரிய மளிக்கும் பொருட்டும் ஒரு சட்டமியற்றினர். அதனல் நிலச்சுவான் தாரர்கள் குடியானவர்களைத் துன்புறுத்துவது குறைவு பட்டது. இவ்வாறு கானிங் பிரபு அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் பல சீர்த்திருத்தங்களைச் செய்து விட்டு 1862-ல் தம் நாடு திரும்பினர்.

---

## அத்தியாயம் 11


---

### இந்தியாவில் ஆங்கிலேய அரசியல்
### பர்மா : ஆப்கானிஸ்தானம்

பர்மா:—1823 முதல் 1828 வரை கவர்னர் ஜெனரலாக இருந்த ஆமெர்ஸ்ட் பிரபுவின் காலத்தில் முதன் முதலாக பர்மாவுடன் கம்பெனி அரசாங்கத்தார் போர் புரிந்தனர். பர்மா அரசன் பல மாகாணங்களைப் பிடித் துக்கொண்டு வங்காளத்திலுள்ள சில இடங்களையும் கவர ஆசைகொண்டான். ஆகவே இங்கிலிஷ்காரர் பர்மியருடன் போர் புரிய வேண்டியதாயிற்று. பர்மியர் தோற்றுப் போய் 1826-ல் யாண்டபூ என்ற இடத்தில் சமாதான உடன்

படிக்கை செய்துகொண்டனர். அதன்படி ஆங்கிலேய ருக்கு அஸ்ஸாம், அரக்கான், டெனஸரீம் என்ற நாடுகள் வசமாயின.

டல்ஹௌஸிப் பிரபுவின் காலத்தில் மீண்டும் பர்மாவுடன் இரண்டாவது யுத்தம் நடைபெற்றது (1852). யாண்டபூ உடன்படிக்கையின்படி பிரிட்டிஷ் ரெஸிரெண்ட் ஒருவர் பர்மியத் தலை நகரான ஆவாவில் இருக்கவேண்டியதாயிற்று. ஆனால் பர்மா அரசன் பிரிட்டிஷ் அதிகாரியை அவமதித்து வந்ததுடன் பர்மாவில் வியாபாரம் செய்து வந்த இங்கிலிஷ் வர்த்தகர்களை வெகுவாகத் துன்புறுத்தி வந்தான். அவ் வர்த்தகர்கள் கவர்னர் ஜெனரலின் உதவியைக் கோரினதால் போர் துவக்கமாயிற்று.




முதல் பர்மா யுத்தத்தின்பொழுது சரியான ஏற்பாடுகள் செய்யாத காரணத்தால் ஆங்கிலேய சேனை கஷ்டப் படவேண்டியிருந்தது. ஆனால் டல்ஹௌஸியோ படையெடுப்புக்குத் தேவையான ஏற்பாடுகள் யாவையும் தாமே செய்துமுடித்தார். ஆகவே வெகு சுலபமாக ஆங்கிலேய ருக்கு வெற்றியும் கிடைத்தது. ஆங்கிலேயர் ரங்கூனைத் தாக்கினர். பர்மியர் எவ்வளவு கஷ்டப்பட்டு எதிர்த்தும் கடைசியில் தோல்வியுற்றனர். பிறகு ஐராவதியின் வழியே

சென்று ப்ரோம் என்ற இடத்தை ஆங்கிலேயர் முற்றுகை யிட்டுக் கைப்பற்றினர். பிறகு செழிப்பான பேகு என்ற மாகாணம் முழுவதும் ஆங்கிலேயர் வசமாகவே, பெகுவை ஆங்கிலேயருக்குச் சொந்தமான மாகாணமென்று டல் ஹௌஸிப் பிரபு விளம்பரப்படுத்திவிட்டார். ஆங்கிலேய ருடைய ஆட்சியில் பெகு மாகாணம் வெகுவாக முன் னேற்றமடைந்தது. இவ்வாறு கீழ்பர்மா (Lower Burma) ஆங்கிலேயருக்குக் கிடைத்தது.

டப்ரின் பிரபு (1884-1888) வைஸ்ராயாயிருந்த காலத் தில் மூன்றுவது பர்மா யுத்தம் நடைபெற்றது. மேல் பர்மா வின் மன்னனுன தீபா பிரெஞ்சுக்காரர்களுக்குச் சில விசேஷ வியாபார உரிமைகளைக் கொடுத்தும், பிரிட்டிஷ் வியாபாரிகளைப் பலவாறு கஷ்டத்திற் குள்ளாக்கியும் வந்த தால் டப்ரின் பிரபு யுக்தம் செய்ய வேண்டியதாயிற்று (1885). இரு வாரங்களில் சண்டை முடிந்துவிட்டது. மாண்டலேயை ஆங்கிலேயர் வெகு சுலபமாகப் பிடித்துக் கொள்ளவும் தீபா கீழ்ப்படிந்துவிட்டார். அவரை ராஜாங் கக் கைதியாக இந்தியாவுக்கு அனுப்பிவிட்டு மேல் பர்மா வையும் இங்கிலிஷ்காரர் தமது ராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டனர். இவ்வாறு 1826-லிருந்து 1885-க்குள் பர்மா முழுவதும் ஆங்கிலேயர் வசமாய்விட்டது. இப்பொழுது பர்மா இந்திய ராஜ்யத்தில் ஒரு மாகாணமாக வைஸ்ராயின் ஆட்சியில் இருந்து வருகிறது. ஆனல் சமீபத்தில் அது இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டுத் தனி அரசாகச் செய் யப்படும்.

ஆப்கானிஸ்தானம் :—இந்தியாவிற்குள் வருவதற்குச் சுலபமான நிலமார்க்கமாகிய வடமேற்குக் கணவாய்களுக்கு அப்பால் உள்ள ஆப்கானிஸ்தானம் நம் தேசத்தினுடைய ஒரு புற எல்லையைக் காத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே


ஆங்கிலேயர்கள் ஆப்கானிஸ்தானத்தினுடைய விஷயங்களில் அடிக்கடி தலையிடுவது அவசியமாயிற்று. ஆப்கானிஸ்தானத்தில் அமைதிக் குறைவு ஏற்பட்டால் அது இந்தியாவின் பாதுகாப்பையும் பாதிக்கும்.

1836-1844ல் கவர்னர் ஜெனரல்களா யிருந்த ஆக்லண்டு, எல்லென்பரோ பிரபுக்கள் காலத்தில் முதல் ஆப்கானிய யுத்தம் நடைபெற்றது. அப்பொழுது இங்கிலாந்தில் அன்னிய நாட்டு மந்திரியா யிருந்த பாமர்ஸ்டன் என்பவர் ருஷ்ய அரசாங்கத்தாரின் பலம் ஆசியாவில் அதிகரிப்பதைக் கண்டு ஐயமுற்றதால் அவர்கள் இந்தியாவில் இருந்த ஆங்கில ஆட்சிக்குத் தீங்கிழைக்கக் கூடுமென்று அஞ்சி ஆப்கானிஸ்தானத்தில் ருஷியர்கள் செல்வாக்குப் பெருமல் தடுக்கவேண்டுமென்று முயன்ருர். ஆப்கானிஸ்தானத்தில் அப்பொழுது டாஸ்ட் மகமது என்பவர் அரசு புரிந்துவந்தார். ஆனுல் பழைய ஆப்கன் மன்னர் குலத்தைச் சேர்ந்த ஷாஷுஜா என்பவர் சிம்மாசன மேற முயன்று வெற்றி பெருமல் பஞ்சாப் மாகாணத்தில் தங்கியிருந்தார். அப்பொழுது பெஷாவர் என்ற இடம் சீக்கிய மன்னரான ரஞ்சிட் சிங் வசம் இருந்தது. அதைத் தனக்குமீட்டுத் தரும்படி ஆங்கிலேயரை டாஸ்ட் மகமது வேண்டினுர். ஆனுல் ஆக்லண்ட் பிரபு ரஞ்சிட் சிங்கை அவ்வாறு தூண்ட மறுத்து விட்டார். அதனுல் ஆங்கிலேயரிடம் வெறுப்புக் கொண்ட டாஸ்ட் மகமது ருஷ்ய இராஜாங்க தூதரிடம் வெகு பிரியமாக நடந்துகொண்டார். எனவே ஆக்லண்ட் பிரபு ஷா ஷுஜாவை ஆப்கானிஸ்தான மன்னராக்குவதென்று நிச்சயித்து அவருடனும் ரஞ்சிட் சிங்குடனும் உடன்படிக்கை செய்துகொண்டார் (1838).

மறு வருஷம் போலன் கணவாயின் மூலம் இந்திய சேனை ஆப்கானிஸ்தானத்தின்மீது படை யெடுத்துச்

சென்றது. காண்டஹார் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டு கஜ்னியை முற்றுகை யிட்டனர். டாஸ்ட் மகமது நாட்டை விட்டோடியதால் ஷா ஷுஜா ஆப்கானிய அரசராக முடி சூடினர். ஆனல் பிற்பாடு டாஸ்ட் மகமது ஆங்கிலேயரிடமே சரண் புகுந்தார்.

இவ்வளவு சுலபமாக ஷா ஷுஜாவைப் பட்டம் சூட்டிய ஆங்கிலேயருக்கு உடனே பல கஷ்டங்கள் சம்பவித்தன. ஷாஷுஜாவை ஆப்கானியர் சிறிதும் விரும்பவில்லை. ஆங்கிலேய சேனையின் உதவியைக்கொண்டு ஷா ஷுஜா அரசியற்றியது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஷாஷுஜாவுக்கு




விரோதமாக ஒரு கட்சி தோன்றியது. அதற்கு டாஸ்ட் மகமதுவின் புத்திரரான அக்பர்கான் தலைவரானர். ஆங்கிலேய அதிகாரிகள் இருவர் கொலையுண்டனர். பிறகு ஆங்கில தளகர்த்தர் அக்பர்கானுடன் சமாதானம் செய்து

கொண்டு இந்திய சேனை திரும்பிச் செல்லுவதற்கு அனுமதிபெற்றார். ஆனால் ஆப்கானியர் அச் சேனையை நாசம் செய்துவிட்டனர் (1842). இவ்வாறு ஆப்கானிய யுத்தம் பெரும் அவமான விஷயமாக முடிந்ததால் ஆக்லண்ட் பிரபு திருப்பி யழைக்கப்பட்டார்.

அவருக்குப் பிறகு எல்லென்பரோ கவர்னர் ஜெனரலாக வந்தார். அவர் ஆப்கானியரைத் தண்டிக்கும்பொருட்டு ஜெனரல் போலக் என்பவரைத் தளகர்த்தராக நியமித்தார். கைபர் கணவாயின் மூலம் போலக் படை யெடுத்துச் சென்று காபூலைக் கைப்பற்றினார். ஆனால் ஷா ஷூஜா ஏற்கெனவே கொலையுண்டுபோனார். 1843-ல் ஆப்கானியரைத் தக்கவாறு தண்டித்துவிட்டு இந்திய சேனை திரும்பி வந்தது. டாஸ்ட் மகமது மீண்டும் ஆப்கானிய அரசரானார். அவர் பிரிட்டிஷாருக்குச் சிநேகமாகவே இருந்தார். முதல் ஆப்கானிய யுத்தம் முற்றிலும் அனாவசியமான யுத்தமாகும். ஆனால் அந்தச் சம்பவம் ஏராளமான பணத்தையும், அனேக உயிர்களையும் கொள்ளைகொண்டது.

1863-ல் டாஸ்ட் மகமது இறக்கவே, அவருடைய புத்திரர்களுக்குள் சிம்மாசன மேறும் விஷயமாகச் சண்டையுண்டாயிற்று. கடைசியில் ஷெர் ஆலி என்பவர் பட்டத்துக்கு வந்தார். ஆனால் தமது நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ள ஷெர் ஆலி வெகு பாடுபட்டார். கவர்னர் ஜெனரலான லாரேன்ஸ் பிரபுவை உதவும்படி கேட்டார். அவ்வுதவி மறுக்கப்படவே அவர் தாமாகப் போர்புரிந்து தமது நிலைமையைக் காப்பாற்றிக் கொண்டார். லாரென்ஸ் பிரபுவின் கொள்கை என்னவென்றால் ஆப்கானிஸ்தானத்தின் உள் நாட்டு விவகாரங்களில் பிரிட்டிஷார் பிரவேசிக்கக் கூடா தென்பதும், ஆனால் ஆப்கானியர் எந்த அரசனை ஏற்கின்றனரோ அவரைத் தாமும் ஏற்று அவருடன் நட்புக்

கொண்டாடி ருஷ்யர்கள் அந்நாட்டில் செல்வாக்குப் பெருமல் தடுக்க வேண்டு மென்பது மாகும். இதை 'முயற்சி செய்யா விடினும் அதிகாரத்தை நிலை நிறுத்தல்' என்று கூறுவதுண்டு. ஆனல் ஷெர் ஆலிக்கு இக் கொள்கை பிடிக்கவில்லை.

மேயோ பிரபு என்பவர் வைஸ்ராயா யிருந்தபொழுது ஆப்கானிய மன்னருடன் அதிக நேசம் கொண்டாடினர்.

லிட்டன் பிரபு வைஸ்ராயாக இருந்தபொழுது இரண்டாவது ஆப்கானிய யுத்தம் நடந்தது. ருஷியர்கள் ஆப்கானிஸ்தானத்தை நோக்கி வந்துகொண்டிருந்த தாலும், ஷெர் ஆலி ஆங்கிலேயரிடத்தில் காட்டிய நேசத்தைக் காட்டிலும் ருஷியர்களிடம் அதிக நட்புக் கொண்டாடிய தாலும் போர் ஆரம்பித்தது. வைஸ்ராய் அனுப்பிய தூதனைக் கூட ஷெர் ஆலி சந்தித்துப் பேச மறுத்து விட்டார். இந்திய சேனை கைபர், போலன் கணவாய்களின் மூலம் படை யெடுத்துச் சென்று ஜலாலாபாத், காண்டஹார் முதலான இடங்களைப் பிடித்தது. ஷெர் ஆலி நாட்டை விட்டு ஓடிச் சீக்கிரத்திலேயே இறந்தார். அவருடைய புத்திரரான யாகுப் கான் 1879-ல் கண்டமாக் என்ற இடத்தில் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு சிம்மாசன மேறினர். அதன்படி காபூலில் பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் இருப்பதென்றும் ஆப்கன் அரசர் அந்நிய நாட்டு விவகாரங்களில் பிரிட்டிஷாருடைய சொற்படியே நடப்பதென்றும் ஏற்பாடாயிற்று. இவ்வாறு ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகரித்தது.

ஆனல் உடன்படிக்கை ஏற்பட்டு ஒரு மாதம் ஆனவுடன் காபூலில் பிரிட்டிஷ் அதிகாரியாயிருந்தவர் கொலையுண்டு போனர்; எனவே மீண்டும் போர் தொடங்கிற்று. இது மூன்ருவது ஆப்கானிய யுத்தம். ஜெனரல் ராபர்ட்ஸ்

என்பவர் காபூலைப் பிடித்துக்கொண்டார். யாகுப் கான் இந்தியாவிற்கு அனுப்பப்பெற்றூர். ஆனல் அவருடைய தம்பியான அயுப்கான் காண்டகாரைப் பிடித்துக்கொண்டார். ஜெனரல் ராபர்ட்ஸ் காபூலிலிருந்து காண்டஹாருக்குச் சென்று காண்டஹாரையாகுப்கானிடமிருந்து விடுவித்தார். பிறகு ரிப்பன் பிரபு (1880—'84) வைஸ்ராயாக வந்ததும் அப்துர் ரஹ்மான் என்றவரை ஆப்கானிய மன்னராக அங்கீகரித்தார். அப்துர் ரஹ்மான் 1901-வரையில் அமைதியாக ஆண்டுவந்தார்.

லான்ஸ்டௌன் பிரபு (1888—1894) வைஸ்ராயாயிருந்த பொழுது இந்திய ராஜ்யத்தின் எல்லைப்புறங்களை பத்திரப் படுத்தப் பெரு முயற்சிகள் செய்யப்பட்டதன் காரணமாக ஆப்கானிய அரசருக்குப் பிரிட்டிஷார் மீண்டும் தம் நாட்டின்மீது போர் புரிவாரோ என்ற பயம் உண்டாயிற்று. ஆனல் லான்ஸ்டௌனுக்குச் சண்டை யிடும் எண்ணம் சிறிதும் இல்லை. ஆகவே அவர் அப்துர் ரஹ்மானிடம் ஸர் மார்ட்டிமர் டூரண்ட் என்பவரைத் தூதனுப்பி ஆப்கன் மன்னருக்கு நம்பிக்கையுண்டாக்கினர். எல்லைப்புற சம்பந்தமான தகராறுகள் பல அமைதியாக ஒழுங்கு பெற்றன. ஆப்கானிஸ்தானத்தின் தெற்கு, கிழக்கு எல்லைகளும் நிர்ணயிக்கப்பட்டு 'டூரண்டு எல்லை' என்று பெயர் பெற்றன.

அப்துர் ரஹ்மான் 1901-ல் இறக்கவும், ஹபிபுல்லா சிம்மாதன மேறினர். 1919-ல் அவர் கொல்லப்படவும் அமனுல்லா என்பவர் முடிசூடினர். அவர் இந்திய அரசாங்கத்துடன் சண்டையிட ஆரம்பித்துச் சீக்கிரத்தில் சமாதானமும் செய்துகொண்டார். 1927-ல் அமனுல்லாவும் அவரது இராணியும் இந்தியாவின் மூலம் ஐரோப்பாவில் சஞ்சாரம் செய்யச் சென்றனர். மறு வருஷம் அவர் தமது தேசத்திற்குத் திரும்பி வந்து மேனட்டு முறைகளைப்

புகுத்த நிச்சயித்ததால் பாசா இஸாகோ என்பவனுடைய தலைமையின்கீழ்க் கலகம் தோன்றவும் அவர் நாட்டை விட்டு ஓடிவிட்டார். பாசா இஸாகோ, நாதர்கான் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். இப்பொழுது நாதர்கான் ஆப்கானிஸ்தானத்தின் மன்னராக விளங்குகிறார்.

பலுசிஸ்தானம்:—வடமேற்கு எல்லைப்புறப் பாதுகாப்பு இந்தியாவின் அமைதிக்கு முக்கியமான காரணமாதலால் பல வைஸ்ராய்கள் அவ்விஷயத்தில் கவனம் செலுத்தினர். ஆப்கானிஸ்தானத்தின் எல்லைக்கும், பிரிட்டிஷ் இந்திய எல்லைக்கும் நடுவில் பட்டாணியர்கள் வசித்து வந்த இடமொன்று இருந்தது. பட்டாணியர்கள் பெயரளவில் மட்டும் ஆப்கன் மன்னருக்குக் கீழ்ப்படிந்திருந்தனர். சண்டையிடும் குணமுடைய அவர்கள் இந்திய அரசாங்கத்தாருக்குப் பெரும் கவலையைத் தந்துவந்தனர். பலர் இப்பட்டாணியர் வாழ்ந்த நாட்டை வென்று வடமேற்கு எல்லையை ஆப்கானிஸ்தானத்தை ஒட்டியதாகச் செய்ய வேண்டுமென்று கூறினர். 1875-ல் லிட்டன் பிரபு போலன் கணவாயின் ஆரம்பத்திலுள்ள குவெட்டாவைப் பிடித்துக் கொண்டார். லான்ஸ்டௌன் காலத்தில் டூரண்டு எல்லை ஏற்பட்டதும், பட்டாணியர்கள் வாழ்ந்து வந்த நடு இடம் இந்திய துரைத்தனத்தார் வசமாயிற்று. அதுவரையில் பயங்கரமாயிருந்த போலன் கணவாய் பத்திரமும், அமைதியும் நிறைந்த மார்க்கமாயிற்று. மிகவும் திறமை வாய்ந்த ஸர் ராபர்ட் ஸாண்டிமன் என்பவர் பலுசிஸ்தானத்திற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து முடித்தார். பலுசிஸ்தானம் மலைநாடு. வட பலுசிஸ்தானம் பிரிட்டிஷாரால் நேரில் ஆளப்படுகிறது. தென் பலுசிஸ்தானத்தில் காலட் முதலான சுதேச சமஸ்தானங்கள் இருக்கின்றன. குவெட்டா இராணுவ ஸ்தலமாயுள்ளது.

## அத்தியாயம் 12

### உள்நாட்டு துரைத்தனம்
### (எல்ஜின்—டப்ரின்)

1862-ல் முதல் வைஸ்ராயான கானிங் பிரபு இங்கிலாந்து திரும்பினதும் எல்ஜின் பிரபு வைஸ்ராயானார். ஆனால் 1863-ல் அவர் மடிந்தார்.

அவருக்குப் பிறகு ஸர் ஜான் லாரென்ஸ் வைஸ்ராயானார். (பின்னால் லாரென்ஸ் பிரபு வானார்) (1864-1869) இவர் ஏற்கெனவே பஞ்சாப்பின் துரைத்தனத்தை மேற்பார்வை செய்து கீர்த்திபெற்றவர். பூடான் என்ற மலைநாட்டாருடன் இவர்காலத்தில் ஒரு சண்டை நடந்தது. ஆங்கிலேயர் வெற்றிபெற்றனர். இவர் இந்தியர்களின் க்ஷேமத்தில் கண்ணும் கருத்துமாயிருந்தார். 1865-1866-ல் ஓரிஸ்ஸாவிலும், அயோத்தியிலும் பெரும் பஞ்சம் உண்டாயிற்று.

அவருக்குப் பிறகு மேயோ பிரபு (1869—'72). வைஸ்ராயானார். இவர் சுதேச மன்னர்களுடன் வெகு நேசமாக இருந்து, அவர்களுக்குப் பிரிட்டிஷ் துரைத்தனத்தாரிடம் அன்பு அதிகரிக்குமாறு செய்தார். சுதேச மன்னர்களுக்கென்று அவர் ஆஜ்மீரில் மேயோ கலாசாலை என்ற கல்லூரி ஒன்று ஏற்படுத்தினார். மேயோ செய்த சீர்திருத்தங்களுள் முக்கியமானது மாகாணங்களுடைய வரவு செலவைக் குறித்ததாகும். அதுவரை மாகாண துரைத்தனத்தின் மூலம் வசூல் செய்யப்பட்ட வரிகள் யாவும் மத்திய துரைத்தனத்தாருக்கே உரித்தா யிருந்தன. ஒவ்வொரு வருஷமும் மாகாண துரைத்தனத்தார் தமக்கு வேண்டிய தொகையை மத்திய அரசாங்கத்தி

னிடமிருந்து பெற்றுக்கொள்வது வழக்கம். வருஷ முடிவில் பாக்கியிருந்த தொகையை மீண்டும் மத்திய அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுத்து விடவேண்டும். இதனால் சிக்கனத்திற்குச் சிறிதும் ஏதுவில்லாமற் போயிற்று. மாகாணங்கள் அதிகமாகக் கேட்டால் அதிகமாகப் பெறலாமென்ற நம்பிக்கை கொண்டிருந்தன. வரவுக்குத் தக்க செலவு செய்யவேண்டு மென்ற பொறுப்பு அவர்களுக்கில்லை. மேயோ பிரபு இதை மாற்றிவிட்டார். ஒவ்வொரு மாகாணத்திற்கும் வருஷந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை யளிக்கப்படுமென்றும், அத்தொகையில் ஏற்படும் மிச்சத்தைத் திருப்பித் தர வேண்டாமென்றும் செலவுதிட்டத்தைத் தயார் செய்யும் உரிமை மாகாண துரைத்தனத்தையே சேர்ந்ததென்றும் ஏற்பாடு செய்தார். மாகாண துரைத்தனத்தாருக்குச் சில பொறுப்புகளும் சுதந்தரமும் அளிக்கப்பட்ட வுடனே வீண் செலவு, முன் யோசனையற்ற செலவு திட்டம் முதலியன மறைந்தன.

மேயோ பிரபு விவசாய இலாகா ஒன்றை ஏற்படுத்தினர். இந்தியாவில் பெரும்பாலோர் விவசாயிக ளாதலால் இந்த இலாகாவை ஏற்படுத்தியது மிகவும் பொருத்தமான காரியமாகும். ரெயில், சாலை, கால்வாய் முதலான போக்குவரத்து சௌகரியங்களையும் அபிவிருத்தி செய்தார். அவர் காலத்தில் முதன் முதலாக இந்தியாவின் ஸேன்ஸஸ் (Census) கணக்கு எடுக்கப்பட்டது. துரைத்தனத்திற்கு அவசியமான புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும் அவர் ஏற்பாடு செய்தார்.

மேயோ பிரபு அந்தமான் தீவுகளுக்குச் சென்றிருந்தபொழுது ஒரு கைதியால் கொல்லப்பட்டார். நார்த்ப்ரூக் பிரபு (1872—1876) வைஸ்ராயா யிருந்தபொழுது 1873—1874-ல் வங்காளத்தில் மகத்தான பஞ்சம் உண்டா


யிற்று. துரைத்தனத்தார் பஞ்சத்தாலடிபட்டவருக்குக் கூலி கிடைக்குமாறு வேலைகளை ஆரம்பித்து மக்களின் குறையை நிவர்த்தித்தனர். இவர் காலத்தில் சரியான முறையில் ராஜ்யம் நடத்தி வராத பரோடாவின் கெயிக்வாரை அகற்றிவிட்டு, வேறு ஒரு சிறுவனுக்குப் பட்டம் சூட்டினார். ஆகவே சுதேச சமஸ்தானாதிபதிகள் நல்ல முறையில் ஆளாவிட்டால் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் அவர்களை அரசினின்றும் நீக்கத்தயங்கார் என்பது யாவருக்கும் தெரிந்தது. இவர்காலத்தில் (1875) பின்னால் மன்னர் பிரானாகிய எட்வர்ட் (ஏழாவது) வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். மன்னரும், மக்களும் அவரை வரவேற்றுத் தம் இராஜபக்தியை வெளியிட்டனர்.

லிட்டன் பிரபு (1876—1880) அடுத்த வைஸ்ராயானார். 1877-ல் விக்டோரியா மஹாராணியார் இந்திய சக்கரவர்த்தினி என்ற பட்டத்தை ஏற்றார். இந்தியாவில் அது சம்பந்தமாக டில்லியில் பெரியதொரு தர்பார் நடந்தது. லிட்டன் காலத்தில் தென்னிந்தியாவில் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. சர்க்கார் எவ்வளவோ உதவி செய்தும் ஜனங்கள் மிகவும் வருந்தினர். 50 லக்ஷத்திற்கு அதிகமான ஜனங்கள் மடிந்தனர். இந்தியாவில் விவசாயமே முக்கிய தொழிலாதலாலும் மழை தவறினால் பஞ்சம் ஏற்படுவது நிச்சயமாதலாலும், பஞ்சத்தை எதிர்த்துப் போராடவேண்டிய முறைகளைச் சர்க்கார் நிர்ணயித்தனர்.

லிட்டன் 1878-ல் ஒரு சட்டமியற்றித் தேசீய பாஷைகளில் நடத்தப்பெற்ற பத்திரிகைகளின் சுதந்தரத்தை வெகுவாகக் கட்டுப்படுத்தினார். இச் சட்டத்தைக் 'கறுப்புச் சட்டம்' என்று கூறுவார்கள். சர்க்காரிடமிருந்து அனுமதி

பெறுமல் யுத்தக் கருவிகளை இந்தியர்கள் வைத்திருக்கக் கூடாது என்றும் அவர் சட்டமியற்றினர்.

ரிப்பன் பிரபு (1880—1884) இந்தியர்களால் மிகவும் போற்றப்பட்ட வைஸ்ராய் ஆவார். அவர் இந்தியர்களுக்குத்



ரிப்பன் பிரபு

துரைத்தனத்தில் பங்கு கொடுக்கவேண்டுமென்று எண்ணி நடந்த உத்தமர். இந்தியர்கள் அவரை இன்றளவும் போற்றிவருகின்றனர். இவர் செய்த முக்கிய சீர்திருத்தம் இந்தியாவில் ஸ்தல சுய ஆட்சியை அபிவிருத்தி செய்த தாகும். இங்கிலாந்தில் ஒரு நகரத்தின் பரிபாலனத்தைக்

கவனித்துக்கொள்ளும் பொருட்டு நகர பரிபாலன சபைகள் இருந்துவந்தன. இந்தியாவிலும் பழைய காலம் முதற் கொண்டு கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் என்ற சபைகள் இருந்து வந்துள்ளன. சென்னை முதலான சில பெரிய நகரங்களில் நகர பரிபாலன சபைகளும் இருந்துவந்தன. ரிப்பன் பிரபு இன்னும் அதிகமான நகர பரிபாலன சபைகளையும் (முனிசிபாலிடிகள்), தாலூக்காபோர்டு, ஜில்லா போர்டுகளையும் ஏற்படுத்தினர். முனிசிபாலிடிகள் நகரத்தின் பரிபாலனத்தைக் கவனித்து வந்ததைப்போலவே கிராமத்தொகுதிகளின் பரிபாலனத்தைக் கவனிக்கத்தாலூக்கா, ஜில்லா போர்டுகள் ஏற்பட்டன. வரி கொடுப்பவர்கள் இச் சபைகளுக்குச் சில அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தனர். துரைத்தனத்தார் சிலரை நியமித்தனர். இச் சபையினர்களுக்குச் சில வரிகளை வசூல் செய்யவும் அத்தொகையைச் செலவு செய்யவும் அதிகாரம்உண்டு. ஜில்லா கலெக்டர் இச்சபைகளின் நடவடிக்கைகளை மேற்பார்வை பார்த்து வரவேண்டும். இவ்வாறு இந்தியர்களுக்குத் தம் தம் நகரங்களிலும், ஜில்லாக்களிலும் துரைத்தனப் பொறுப்பும் துரைத்தனப் பயிற்சியும் ஏற்பட்டன. இச் சபைகளில் வேலைசெய்து ராஜாங்க முறைகளில் அப்பியாசமடைந்தால், பின்னல் தேசீய சபைகளில் திறமையாக வேலைசெய்ய வசதி ஏற்படும். ஆகவே இச் சபைகள் ராஜாங்க வேலைக்குப் பயிற்சி தரும் ஸ்தாபனங்களாகும். நமது இராஜதானியில் சமீபத்தில் தாலூக்கா போர்டுகள் எடுபட்டுப் போயின. முனிசிபாலிடிகளும், ஜில்லா போர்டுகளும், பஞ்சாயத்து போர்டுகளும் பிரஜைகளுடைய தினசரி வாழ்வுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கின்றன. பெரிய நகரங்களில் உள்ள முனிசிபாலிடிகளுக்குக் கார்ப்பொரேஷன்கள் என்று பெயர். தன்னலமற்று வேலை செய்யும்

முனிஸிபாலிடி அங்கத்தினரை 'நகரின் தந்தைகள்' என்று அழைப்பது வழக்கம். ஸ்தல சுய ஆட்சியை நகரங்களிலிருந்து நாட்டுப்புறத்திற்குப் பரப்பி அதன் பிற்கால அபிவிருத்திக்கும், பெரும் உபயோகத்திற்கும் முக்கிய காரணமா யிருந்தவர் ரிப்பன் பிரபு ஆவார்.

இந்தியர்மீது ரிப்பனுக்கு இருந்த அன்பு வேறொரு வழியிலும் தெரிய வந்தது. அவர் காலத்தில் நியாய விசாரணை விஷயத்தில் ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் சம உரிமைகள் அளிக்கப்படாமல் ஐரோப்பியருக்குச் சில விசேஷ உரிமைகள் அளிக்கப்பட்டிருந்தன. ஐரோப்பியக் குற்றவாளிகள் ஐரோப்பிய மாஜிஸ்திரேட்டே தமது வழக்கை விசாரிக்கவேண்டுமென்று கோருவதற்கு உரிமை பெற்றிருந்தனர். அதாவது நியாய இலாகாவில் நிற வேற்றுமைகள் கவனிக்கப்பட்டு வந்தன. இது சுத்தத் தவறான கொள்கை என்று யாவரும் ஒப்புக்கொள்வர். ரிப்பன், நிற வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டுள்ள விதிகளை மாற்றுவதற்காக இல்பர்ட் என்பவரை ஒரு மசோதா தயாரிக்கச் செய்தார். ஆனால், ரிப்பன் கொஞ்சமும் எதிர்பாராதபடி, இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர் இம் மசோதாவைத் தீவிரமாக எதிர்த்தபடியால் அவர் மசோதாவைச் சட்டமாகச் செய்ய முடியவில்லை. இந்தியரையும் ஐரோப்பியரையும் சமமாகப் பாவிக்கவேண்டுமென்று அவர் விரும்பியது அவருடைய சிறந்த குணத்தைக் காண்பிக்கிறது.

ரிப்பன் தமக்குக் கீர்த்திவருமாறு, மற்றும் பல காரியங்களையும் செய்தார். 1831-ல் மைசூரின் அரசர் வெகு கொடூரமாக ஆண்டதால் பொது ஜனங்கள் அவரை எதிர்க்கவும் பிரிட்டிஷார் அவரை நீக்கிவிட்டு மைசூரைத் தாமே நேராக ஆண்டுவந்தனர். 1881-ல் நீக்கப்பட்ட இராஜா

வின் தத்துப் புத்திரருக்கு மைசூரை ரிப்பன் திருப்பிக் கொடுத்துவிட்டார். மைசூர் இப்பொழுது மிகவும் திறமையாக ஆளப்பட்டுப் பல துறைகளிலும் முன்னணியில் நிற்கிறது.

ரிப்பன் உப்பு வரியைக் குறைத்து ஏழை மக்களுக்கு உதவினர். லிட்டன் பிரபுவினல் எடுக்கப்பட்ட சுதந்தரத்தை இவர் மீண்டும் சுதேச பத்திரிகைகளுக்கு அளித்தார். பாடசாலைகளை அதிகப்படுத்தினர். தொழிலாளிகளின் நன்மையிலும் அவர் கருத்துக் கொண்டிருந்தார். இந்தியர்களுக்கு அரசாங்கத்தில் உயரிய உத்தியோகங்களை யளித்தார். வியாபார அபிவிருத்திக்கும் வழி தேடினர்.

ரிப்பனுக்குப் பிறகு வந்தவர் டப்ரின் பிரபு (1884—1888). இவர் காலத்தில்தான் இந்தியாவில் இப்பொழுது பெரிய ராஜீய ஸ்தாபனமாக உள்ள இந்தியன் நேஷனல் காங்கிரஸ் என்ற 'பாரத தேசீய சபை' உண்டாயிற்று. இந்தியர்களுக்கு நாளடைவில் இராஜீய உணர்ச்சி அதிகரித்துக் கொண்டு வந்தது; அவர்கள் துரைத்தன விஷயங்களில் சிரத்தை கொள்ளலானர்கள். லிட்டன் பிரபுவினல் இயற்றப்பட்ட சுதேச பாஷைப் பத்திரிகைகளைப்பற்றிய சட்டம் ஜனங்களுக்குள் அப்பொழுது பரபரப்பை உண்டுபண்ணியது. இல்பர்ட் மசோதா மிகவும் நியாயமாக இருந்த போதிலும், அதைப் பிரிட்டிஷார் அனைவரும் ஒற்றுமையாக இருந்து தோற்கடித்ததும் இந்தியர்களுக்கு ஒரு படிப்பினையாயிற்று. ஆகவே இந்தியர்களுக்குள் ஒற்றுமையையுண்டுபண்ணவும், தேசத்தைப் பல துறைகளிலும் முன்னேற்ற மடையச் செய்யவும், இந்தியாவிற்குத் தீங்கிழைக்கக் கூடிய விஷயங்களை யகற்றி இந்தியாவிற்கும் இங்கிலாந்

திற்குமிடையே அன்பு அதிகரிக்குமாறு செய்யவும் அகில இந்திய ஸ்தாபனம் ஒன்று அவசியமென யாவரும் உணர்ந்தனர். 1885-ல் ஏ. ஓ. ஹ்யூம் என்பவருடைய முயற்சியினுல் இந்தியன் நாஷனல் காங்கிரஸ் அமைக்கப்பெற்று பம்பாயில் அதன் முதற் கூட்டம் நடை பெற்றது. முதலில் காங்கிரஸ் மகாசபைச் சர்க்காருக்குத் தேசத்தினுடைய குறைகளை எடுத்துச் சொல்லுவதற்கு வருஷா வருஷம் கூடி வந்தது. ஆனுல் சென்ற சில வருடங்களாகக் காங்கிரஸ் மகா சபை தேச ஸ்வதந்தரத்தின் பொருட்டு தீவிரமான முறைகளில் போராடி வருகிறது. அதனுல் சர்க்கார் பல தடவைகளில் காங்கிரஸின் கொள்கைகளை அங்கீகரிக்க முடியாமல் அதை அடக்கவும் முயல வேண்டி வந்தது.

1887-ல் விக்டோரியா மகாராணியார் பட்டம் சூடி ஐம்பது வருஷங்களா யிருந்ததால் அச் சமபவம் இந்தியா வெங்கும் கொண்டாடப்பட்டது.

டப்ரின் பிரபுவினுடைய மனைவியார் இந்திய மாதருக்கு வைத்திய வசதி யளிக்கும் பொருட்டு ஒரு நிதி சேகரித்தார். அந் நிதியைக்கொண்டு பல விடங்களில் பெண்களுக்குச் சௌகரியமளிக்கும் பொருட்டு வைத்திய சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

---

## அத்தியாயம் 13

### உள்நாட்டு துரைத்தனம் (தொடர்ச்சி)
### (லான்ஸ்டௌன்—கர்ஸன்)

இந்திய சபைகளின் சட்டம்:--1888 முதல் 1894 வரை லான்ஸ்டௌன் பிரபு வைஸ்ராயாக இருந்து ஆட்சி புரிந்தார். இவர் காலத்தில் துரைத்தன சம்பந்தமான அபிவிருத்தி ஏற்பட்டது. இந்தியன் நேஷனல் காங்கிரஸ் சபை இந்தியர்களுக்கு துரைத்தனத்தில் அதிகப் பங்கு கிடைக்க வேண்டுமென்று போராடி வந்தது; ஆகவே 1892-ல் கிராஸ் பிரபு (Lord Cross) இந்திய சபைகளின் சட்டம் (Indian Councils Act) ஒன்றைப் பார்லிமெண்டில் நிறைவேற்றினர். 1861ல் ஏற்பட்ட சட்டத்தை விட, இச் சட்டம் இந்தியர்களுக்கு அதிக உரிமைகளைக் கொடுத்தது. இந்திய சட்ட சபைகளிலும், மாகாண சட்ட சபைகளிலும் உள்ள அங்கத்தினர்களின் தொகை அதிகரிக்கப் பட்டது; இந்திய சபையில் பதின்மருக்குக் குறையாமலும், பதினறு பேருக்கு மிகாமலும் இருக்கவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. இத்திட்டத்தின்படி உத்தியோகஸ்தரல்லாத இந்தியப் பிரதிநிதிகள் (Non-officials) முன்னைவிட அதிகமாக அவற்றில் இடம் பெற்றனர். மேலும் சர்க்காரே பிரதிநிதிகளை நியமிப்பதென்று 1861-ல் செய்த ஏற்பாடு இதனல் சிறிது மாற்றப்பட்டது. உத்தியோகஸ்தரல்லாத பத்து அங்கத்தினர்களில் ஐவரைக் கவர்னர் ஜெனரல் நியமிப்ப தென்றும், நால்வரை மாகாண சட்ட சபைகளும், மிகுந்த ஒருவரைக் கல்கத்தா வர்த்தகச் சங்கமும் தேர்ந்தெடுப்பதென்றும் ஏற்பாடாயிற்று. ஆகவே இந்தியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சட்ட சபைகளில் அதிகமாக இடம் பெற்றனர். சர்வ கலாசாலைகள் ' முனிசி

பாலிடிகள்' வர்த்தக சங்கங்கள் முதலியனவும் மாகாண சட்ட சபைகளுக்கு அங்கத்தினரை நியமிக்கும் உரிமை பெற்றன. இச்சபைகளுக்கு இருந்த அதிகாரமும் 1892 முதல் அதிகரித்தது. சட்ட சபையின் வரவு செலவு திட்டத்தைப்பற்றி ஆலோசிக்கவும், நிர்வாக உத்தியோகஸ்தர்களைக் கேள்விகள் கேட்கவும் சட்ட சபை அங்கத்தினர்களுக்கு உரிமை கிடைத்தது. எனவே இந்த சட்டத்தால் பிரதிநிதிகளை நியமிக்கும் முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதுடன் சட்ட சபைகளுக்கு துரைத்தன நிர்வாகத்தில் முன்னைவிட அதிகமான பொறுப்புத் தரப்பட்டது. ஆனால் உத்தியோகஸ்தர்களுடைய எண்ணிக்கையே இச்சபைகளில் அதிகமாக இருந்து வந்தது.

எல்ஜின் பிரபு (1894-1899):—இவர் காலத்தில் வடமேற்கு எல்லைப் புற சம்பந்தமான சில தகராறுகள் நிகழ்ந்தன.

அவருக்குப் பின் வந்த கர்ஸன் பிரபு (1899-1905) பிரபலமான வைஸ்ராய்களுள் ஒருவர். பேச்சு வன்மையும், ராஜரீக தந்திரமும், பல நாடுகளில் பிரயாணம் செய்ததாலுண்டான விசால அறிவும், தன் மதிப்பும் அவருக்குக் கீர்த்தி யளித்தன. அவர் காலத்தில் முக்கியமான பல மாறுதல்கள் ஏற்பட்டன.

டில்லி தர்பார்:—1901-ல் விக்டோரியா மகாராணியார் உயிர் நீத்தார். ஏழாவது எட்வர்ட் அரசரானார். 1903-ல் டில்லியில் ஒரு பெரிய தர்பார் நடத்திக் கர்ஸன் பிரபு ஏழாவது எட்வர்டை இந்தியச் சக்கரவர்த்தி என்று விளம்பரப்படுத்தினார். விக்டோரியாவின் ஞாபகார்த்தமாக கல்கத்தாவில் விக்டோரியா மெமோரியல் ஹால் என்ற கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

வட மேற்கு எல்லைப்புற விஷயம் :—ஏற்கெனவே விளக்கியபடி வடமேற்கு எல்லை அடிக்கடி துரைத்தனத்தாருக்குத் தொந்தரவு அளித்து வந்தது. எல்லைப்புற சம்பந்தமாக யாவரும் ஒரே மாதிரியான அபிப்பிராயம் கொண்டிருக்கவில்லை. சிலர் வட மேற்கிலுள்ள மலைப்பிரதேசங்களை ஆக்கிரமித்து மலைநாட்டாரை அடக்கி யாண்டால் தான் வட மேற்கு எல்லை பத்திரப்படுமென்று எண்ணினர். வேறு சிலர் மலைப்பிரதேசத்தை ஆளுவது கஷ்டமான காரியமாதலால் சிந்து நதிக்கப்பாலுள்ள பிரதேசத்தைப் பற்றிக் கவலையுற வேண்டாமென்று கூறினர். கர்ஸன் பிரபு இவ்விஷயத்தை முடிவாகத் தீர்த்து வைத்தார். வடமேற்கே வெகு தூரம் வரையில் பிரிட்டிஷ் சேனை காவல் புரிய வேண்டாமென்றும், பிரிட்டிஷாரால் பயிற்சி செய்விக்கப்பட்டு, பிரிட்டிஷ் அதிகாரிகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட மலைக் கூட்டத்தாராலான சிறு சேனைகளே மலைப் பிரதேசத்தை பாதுகாக்கட்டு மென்றும், ஆனால் அப்பிரதேசத்திற்கும் இப்பால் பிரிட்டிஷ் சேனை தயாராகக் காத்திருக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்தார். இதனால் செலவு குறைந்தது; அமைதியும் குலையவில்லை. ஆனால் எல்லைக் கூட்டத்தாரின் நடவடிக்கைகளைச் சரிவரக் கவனிக்கவும், எல்லைப்புறத்தைப் பத்திரப்படுத்தவும், எல்லைப்புற நாடுகளைப் பஞ்சாப் மாகாணத்தினின்றும் பிரித்து அவற்றை வடமேற்கு எல்லைப்புற மாகாணம் என்று தனியாகச் செய்து ஒரு கமிஷனரின் ஆளுகைக்குட்படுத்தினர். இப்பொழுது அம்மாகாணம் கவர்னரொருவரால் ஆளப்படுகிறது.

சர்வகலாசாலைச் சீர்திருத்தம் :—உயர் தரக் கல்வியைச் சிறப்புப்பெறச் செய்யும் நோக்கத்துடன் கர்ஸன் ஒரு கமிஷனை நியமித்து அதன் யோசனைப் படி சட்டம் இயற்றினர் (1904). கலாசாலைகளை அடிக்கடி அதிகாரிகள்

பார்வையிட வேண்டுமென்று விதித்தும், சர்வகலாசாலைச் சபைகளைத் திருத்தி யமைத்தும், பரீக்ஷை நடத்துவதுடன் நல்ல முறையைக் கையாடி போதனை செய்ய வேண்டிய வேலையும் அவைகள் செய்ய வேண்டுமென்று கூறியும் அவர் கல்வி யபிவிருத்தியில் தமக்கிருந்த ஊக்கத்தைக் காட்டினார். ஆனால் இச் சட்டத்தின்படி சர்வ கலாசாலைகளின் மீது துரைத்தனத்தாரின் அதிகாரம் அதிகரிக்க இடமிருந்ததால், இந்தியர்களில் சிலர் இச் சட்டத்தைக் குதூகலமாக வரவேற்கவில்லை. தவிர, சிறுவர் களின் கல்வியில் நவீன போதனாமுறை ('கிண்டர் கார்டன்') யும், இயற்கை, சமூக சாஸ்திர முதலியனவும் நன்கு பயில திட்டமிட்டார்.

புராதனக் கட்டடங்களின் பாதுகாப்பு:—புராதனக் கட்டடங்களைப் பாதுகாக்கும் சட்டமொன்றும் (1904) கர்ஸன் பிரபு இயற்றினார். இது அவர் இந்தியாவுக்குச் செய்தநிரந்தரமான நன்மையாகும். இந்திய தேசம் மிகவும் பழமையானது. பல அரசர்கள் பழைய காலங்களில் மகத்தான கட்டடங்களையும், கோயில்களையும், ஸ்தூபிகளையும், ஞாபகச் சின்னங்களையும் நிர்மாணித்து வைத்தனர். இவை யாவும் தேசத்திற்கு மதிப்பைத் தரும் பொக்கிஷங்களாகக் கருதப்பட வேண்டும். மேலும் புராதன இந்திய சரித்திர ஆராய்ச்சிக்கு இவை பெரும் உதவியளிக்கும். ஆனால் இப்பழைய கட்டடங்களை எவரும் சரிவரக் கவனிக்காத படியால் காலக்கிரமத்தில் அவை அழிந்து போய்வந்தன. கர்ஸன் பிரபு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டவராதலால் இந்தியாவின் புராதன மேன்மைக்கு அணிகலன்களாக விளங்கும் பழைய கட்டடங்களைக் காப்பாற்றவும், சரித்திர ஆராய்ச்சிக்குத் தேவையான புதிய ஆதாரங்களைக் கண்டுபிடிக்கவும் வேண்டிய முயற்சிகள் செய்ய அடி

கோலினர். புராதன சாஸனங்கள், சின்னங்கள் இவற்றை ஆராயும்பொருட்டு இப்பொழுது நம் நாட்டிலுள்ள இலாகா ஏற்பட்டதற்குக் கர்ஸன் பிரபுவே காரணமாவர். சர்க்காரால் பணவுதவி யளிக்கப்படும் இந்த இலாகாவின் முயற்சியால் இந்திய சரித்திர சம்பந்தமான புதிய உண்மைகள் பல வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விஷயமாகக் கர்ஸன் செய்த சேவை மறக்கற்பாலதன்று.

விவசாய இலாகா :—இந்திய விவசாயிகளுக்கும் அவர் அநேக நன்மைகள் செய்தார். அகில இந்திய விவசாய இலாகா (Imperial Agricultural Department) ஒன்றை அவர் ஏற்படுத்தினர். விவசாயிகள் நூதன முறைகளில் விவசாயம் செய்யுமாறு போதிப்பது இந்த இலாகாவின் வேலை. விவசாய சம்பந்தமான ஆராய்ச்சிகள் செய்யவும் இப்பொழுது ஒரு சபை இருந்து வருகிறது. சிறு நகரங்களிலும் கூட நாம் இப்பொழுதும் விவசாய அதிகாரி ஒருவர் விவசாயிகளுக்குப் புதுமாதிரியான கருவிகள், எருவுகள், விதைகள் முதலியவற்றைப் பற்றிப் போதிப்பதைக் காண்கிறோம். நம் நாட்டின் க்ஷேமம் விவசாயத்தையே சார்ந்து நிற்கிறது. ஆகவே மத்திய கவர்ன்மெண்டார் விவசாயத்தைப்பற்றி அதிக சிரத்தையெடுத்துக்கொண்டது மிகவும் நலமாகும். மேலும் அவர் கடன் வாங்கிய விவசாயிகள் தாங்கள் அடகுவைத்த நிலங்களை இழக்காமல் இருக்கவும், நிலவரி அதிகப்படுவதன் கொடுமையைப் பலவாறு குறைத்தும், பஞ்ச காலங்களில் ஏராளமாகப் பணத்தைச் செலவுசெய்து ஏழைகளுக்கு உதவியும் தமக்குப் பொது மக்களிடத்திருக்கும் அன்பைக் காட்டினர்.

ஐக்கிய நாணயச் சங்கங்கள் :—இவர் காலத்தில் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஏற்பட்டன. இச் சங்கங்கள் ஏழை விவசாயிகளுக்குப் பெரும் வரமாகும்.


இந்தக் கூட்டுறவு இயக்கத்தால் ஜெர்மனி, டென்மார்க்கு, முதலிய தேசங்கள் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன, இந்திய மக்கள் விருத்தியடைவதற்கு இது ஒரு பெரிய மூலாதாரம் என்று கருதவேண்டும். லேவாதேவியைத் தொழிலாகக் கொண்டவரிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கி, வட்டியைக் கூடத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கிராம வாசிகள் கஷ்டப்பட்டு வந்தார்கள். இவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுத்துதவி, சிறுகச் சிறுக முதலையும் வசூல் செய்து அவர்களுக்குச் சிக்கனமும் பழகுமாறு செய்வதால், இச் சங்கங்கள் பொதுமக்களுக்கு மகத்தான உதவியைச்செய்து வருகின்றன. தம்முடைய தானியங்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நல்ல விலைக்கு விற்கலாம். சிறுகச் சிறுகச் சேரும் பணத்தை வீண் செலவு செய்யாமல் சங்கத்தின் மூலம் சேர்த்து வைக்கலாம். கூட்டுறவுச் சங்கங்கள் கிராம மக்களுக்குள் ஒற்றுமையையும், தன்னம்பிக்கையையும் பரப்புகின்றன. இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் நம் நாடெங்கும் ஏராளமாகப் பரவி யிருக்கின்றன.

வங்காளப் பிரிவினை :—இந்திய சர்வ கலாசாலைகளைத் திருத்தி யமைத்ததால் கர்ஸன் பிரபுவின்பேரில் சிலருக்கு அதிருப்தி ஏற்பட்டதென்று முன்பு கூறினோம். அவர் செய்த வேறொரு காரியமும் அவருக்கு பெரும் எதிர்ப்புத் தோன்றுமாறு செய்தது. அது வங்காளப் பிரிவினையாகும். கம்பெனியார் வங்காளத்தில் தமது ராஜ்யத்தை ஸ்தாபித்த பிறகு, கல்கத்தா துரைத்தனத்தின் தலை நகரமாக இருந்து வந்தது. சென்னை, பம்பாய் இரு மாகாணங்களுக்கும் கவர்னர்கள் இருந்து வந்தனர். வங்காளத்தைக் கவர்னர் ஜெனரல் ஆண்டுவந்தார். 1853-ல் வங்காளத்திற்கும் ஒரு உப கவர்னர் நியமிக்கப்பட்டார். ஆனால் வங்காள மாகாணம் மிகவும் பெரி

தாயிருந்ததாலும், ஜனத்தொகை அதிகமாயிருந்ததாலும் ஒரு உப கவர்னரால் அதன் நிர்வாகத்தைச் சரிவர நடத்த முடியவில்லை என்றும், கீழ் வங்காளம் கொஞ்சமும் அபி விருத்தி யடையாமல் இருந்ததென்றும் உணர்ந்த கர்ஸன் பிரபு வங்காளத்தை இரண்டாகப் பிரித்துக் கீழ் வங் காளத்தை ஒரு புதிய மாகாணமாகச் செய்ய நிச்சயித்தார் (1905). ஆனால் இது வங்காள மக்களுக்குப் பிடிக்கவில்லை. வங்காள மக்கள் 19-ம் நூற்றாண்டில் பல துறைகளிலும் வெகுவாக முன்னேற்றமடைந்திருந்தனர். தமது மாகாணத் தில் அவர்களுக்கு எப்பொழுதும் பற்று அதிகம். வங் காளத்தை இரண்டாகப் பிரிப்பதால் தங்களுடைய ஒற்றுமை குறைவுபடும் என்று எண்ணி அவர்கள் பிரி வினையை எதிர்த்துப் பெருங் கிளர்ச்சி செய்தனர். நாடெங் கும் அவர்களுக்கு ஆதரவு கிடைத்தது. ஆனால் கர்ஸன் பிரபு தன்னுடைய தீர்மானத்தை மாற்றமுடியாதென்று கூறிவிட்டார். ஆகவே ஜனங்களுக்குத் துரைத்தனத் தாரிடம் நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டது. வங்காளப் பிரி வினை நியாயமான காரியமாகவே இருந்தாலும் கூட, ஒரு மாபெரும் தேசத்தினரனைவரும் சேர்ந்து ஒரு விஷயத்தை எதிர்க்கும்பொழுது, பொது ஜன அபிப்பிராயத்திற்குத் துரைத்தனத்தார் சிறிதும் இடங்கொடாமல் இருந்ததே மக்களுக்கு ஆத்திரத்தை யுண்டுபண்ணியதாகும்.

தேசீய இயக்கம்:—அக்காலத்தில்தான் சுதேசி இயக் கம் இந்தியாவில் தோன்றிற்று. அதுகாறும் மேனாட் டாரைப் பின்பற்றுவதே நாகரீகமென்று கருதப்பட்டு வந் தது; அது மாறித் தேசீய உணர்ச்சி மக்களிடத்தில் பர விற்று. வங்காளப் பிரிவினையை எதிர்த்துச் செய்த இயக் கத்தின் பயனாகவே நம் நாட்டில் இப்பொழுது எங்கும் பரவியுள்ள தேசீய உணர்ச்சி தோன்றியது. 1911-ல் வங்

காளப் பிரிவினை ரத்து செய்யப்பட்டு வங்காளம் மீண்டும் ஒன்றாக்கப்பட்டது. கர்ஸன் பிரபு துரைத்தன சம்பந்தமான





மற்றும் பல சீர்திருத்தங்களையும் செய்தார். பண சம்பந்தமாக மாறுதல்களைச் செய்தார். வியாபார, கைத்தொழில்

இலாகா (Department of Commerce and Industry) ஒன்றை ஏற்படுத்திஞர். வியாபாரிகளுக்கு வேண்டிய சௌகரியத்தை அந்த இலாகா அளித்து வருகிறது. புதிய இருப்புப்பாதைகள் (சுமார் 6000 மைல் நீளம் வரை போடப் பட்டன. இதனுல் பொருளாதாரத்துறையில் அபிவிருத்தி ஏற்பட்டது. நீர்ப்பாசன சம்பந்தமாக மக்களுக்குப் பெரும் உதவியைச் செய்தார். தினசரி துரைத்தன நிர் வாகத்தை அதிகத் திறனுடையதாகச் செய்தார். போலீஸ் இலாகா நன்ருக வேலே செய்ய ஏற்பாடுகளேயும் பண்ணிஞர். உப்பு வரியும், வருமான வரியும் குறைந்ததால் ஏழை மக்க ளுக்குச் சௌகரியமுண்டாயிற்று. 1905-ல் சேஞதி பதியின் அந்தஸ்து சம்பந்தமாகக் கர்ஸன் பிரபுவுக்கும் பிரிட்டிஷ் துரைத்தனத்தாருக்கும் அபிப்பிராய பேதமேற் பட்டதால், அவர் வேலையை ராஜீநாமா செய்தார்.

சாஸ்திர ஆராய்ச்சி :—இருபதாம் நூற்ருண்டில் பல துறைகளிலும் தேசத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. சர்வகலாசாலைகள், பத்திரிகைகள் மூலமாய் மேஞட்டுக் கல்வி பரவியதால் விஞ்ஞான ஆராய்ச்சி பரவிற்று. சுதேசி இயக்கம் காரணமாக தேச பக்தி பரவியதைப்போல, பல சாஸ்திரங்களேத் தெரிந்து கொண்டபடியால், விஷயங்களே ஆராய்ந்து பார்க்கும் குணமும், பகுத்தறிந்து பரிசீலனே செய்யும் பழக்கமும், மக்களிடையே பரவின. உலகுக்கு அழகைத்தரும் பெரியோர்களும் இந்தியாவில் தோன்றி ஞர்கள். கர்ஸன் பிரபு ஜேம்ஸெட்ஜி டாட்டா அவர்களின் வேண்டுகோளின்படி கைத்தொழில்களே விருத்தி செய்ய உத்தரவு செய்தார். விஞ்ஞான ஆராய்ச்சிக் கேதுவாக இப்பொழுது பெங்களூரில் விளங்கும் விஞ்ஞான கலாசாலே (Indian Institute of Science) ஏற்படுத்துவதற்குத் தமது பூரண ஆதரவையும் கர்ஸன் அளித்தார். இந்தி

யாவில் விவசாயமட்டுமல்லாமல், இதர கைத்தொழில்களும் அபிவிருத்தி ஆகும் பொருட்டு தேவையான சாஸ்திர ஆராய்ச்சி செய்து நம் தேசத்து வாலிபர்கள் தேசத்தை முன்னேற்றுவதற்குரிய சாதகங்களை உண்டு பண்ணுவதே



டாட்டா இரும்புத் தொழிற்சாலை—ஜாம்ஷட்பூர்

இக்கலாசாலையின் நோக்கம். இந்திய தேசத்துக் கைத் தொழில்களுக்கும், சாஸ்திர ஆராய்ச்சிகளின் முன்னேற்றத் திற்கும் அனுகூலமாக இது ஏற்பட்டது. மின்சார உற்பத்தி ஸ்தாபனங்கள் ஏற்படுத்த டாட்டாவின் திட்டத்தை ஆமோ தித்தார். இரும்புக்கைத்தொழிற்சாலைகளைப் பெரியஅளவில் நிர்மாணம் செய்வதற்கு, டாட்டாவுக்கு ஸர்க்கார் உதவிபுரிவ தாக வாக்களித்தார். இப்பொழுது இதுவே ஜாம்ஷட்பூர் "டாட்டா இரும்புத் தொழிற்சாலை" எனப் பிரசித்தி பெற்று விளங்குகிறது. பூசா என்னுமிடத்தில் விவசாய விஷயங்களை ஆராய்ந்து ஜனங்களுக்கறிவிக்க ஓர் கலாசாலை ஸ்தாபிக்கப் பட்டது; இவ்வாறு இயற்கை வளங்கள் அதிகமாகப் பயன்பெறும் வகையில் உபயோகிக்கப்பட்டன.

# அத்தியாயம் 14

## உள்நாட்டுத் துரைத்தனம் (தொடர்ச்சி)

### (மிண்டோ-வில்லிங்டன்)


மிண்டோ பிரபு

மிண்டோ பிரபு (1905—1910)வின் ஆட்சிக் காலத்தில் ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்தி மரணமடைந்தார். கர்ஸன் பிரபுவின் காலத்தில் இந்தியாவில் தோன்றிய சுதேசி இயக்கம் வலுத்துவந்தது. இராஜீயக் கிளர்ச்சி வெகு வேகமாகப் பரவியதுடன் பலவந்த முறைகளும் கையாளப்பட்டன. வெடி குண்டெறிதலும், இரகசியசங்கங்கள் ஸ்தாபித்தலும், தீவிரமான பிரசங்கங்கள் செய்வதும் அதிகரித்தன. எனவே துரைத்தனத்தார் அடக்கு முறையைக் கையாளவேண்டி வந்தது. கிளர்ச்சிக் காரர்களைப் பல முறைகளிலும் அடக்கமுயன்றது ஜனங்களுக்குள் அதிகமான பரபரப்பை உண்டாக்கியது. ஜனநாயகக் கொள்கைகள் பரவின. ஆனால் 1907-ல் காங்கிரஸ் மகா சபையில் ஒரு பிளவு ஏற்பட்டது. தீவிரமான முறைகளைக் கையாண்டவர்களுக்கும், மிதவாதிகளுக்கும் அபிப்பிராய பேத மேற்பட்டு மிதவாதிகள் காங்கிரஸைக் கைப்பற்றினர்; இவர்கள் சமாதான முறைகளில் இராஜீய முன்னேற்றத்திற்காகப் போராடவேண்டுமென்று கூறியவர்கள். இந்தியர்களுடைய இராஜீய முன்னேற்ற

ஆவலைத் தீர்க்கும் பொருட்டு மிண்டோ பிரபுவும் இந்தியா மந்திரி (Secretary of State for India)யாயிருந்த மார்லி பிரபுவும் 1909-ல் இந்திய சபைகள் சட்டம் ஒன்றியற்றி இந்தியாவுக்குச் சீர்திருத்த மளித்தனர். 1892-ல் ஸ்தாபிக்கப்பட்ட சபைகள் பெரிதாக்கப்பட்டன. மாகாண சட்ட சபைகளில் உத்தியோகஸ்தரல்லாதார் அதிகத் தொகையினராயினர். சட்ட சபைகளுக்கு முன்னிருந்ததைவிட அதிகமான அதிகாரமும் அளிக்கப்பட்டது. வைஸ்ராயின் நிர்வாக சபைக்கும், சில மாகாண நிர்வாக சபைகளுக்கும், இந்தியா மந்திரியின் சபைக்கும் இந்தியர்கள் நியமிக்கப்பட்டனர். சட்டசபை அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் முறை ஒப்புக்கொள்ளப்பட்டது. கேள்விகள் கேட்கும் உரிமையும் அளிக்கப்பட்டது. ஆனால் மிண்டோ—மார்லி சீர்திருத்தங்களில் குறைவுகள் இல்லாது போகவில்லை. இந்தியப் பிரதிநிதிகளுடைய அபிப்பிராயத்தைத் துரைத்தனத்தார் கேட்டுவந்தார்களாயினும், இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டைப்போலச் சர்வாதிகாரம் இச் சட்ட சபைகளுக்குத் தரப்படவில்லை. ஆகவே தீவிரவாதிகள் மிண்டோ—மார்லி சீர்திருத்தங்களைவிட முன்னேற்றமான திருத்தங்களை வேண்டலாயினர்.

ஹார்டிஞ்ச் பிரபு 1910 முதல் 1916 வரையில் வைஸ்ராயாயிருந்தார். 1911-ம் வருஷத்தில் டிசம்பர் மாதம் 12-ம் தேதியன்று டில்லியில் சிறந்த தர்பார் ஒன்று நடந்தது. மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் ஐந்தாம் ஜார்ஜும் மேரி ராணியாரும் தர்பாரை நடத்தி இந்தியர்களிடம் தமக்கிருந்த அன்பைக் காட்டினர். இந்தியர்களுக்குத் திருப்தியைத் தரும் விஷயங்களைச் செய்தனர். வங்காளப் பிரிவினை ரத்து செய்யப்பட்டது. இதுகாறும் கல்கத்தா இந்தியாவின் தலைநகராக இருந்தது மாறி, டில்லி தலைநகராகச்

செய்யப்பட்டது. அத்துடன் புதிய டில்லி ஒன்றை வெகு அழகாக நிர்மாணிக்க ஏற்பாடாயிற்று. கல்விக்காக துரைத் தனத்தார் வருஷா வருஷம் நன்கொடை யளிக்க ஒப்புக் கொண்டனர். இப்பொழுது புதிய டில்லியே இந்தியா விற்குத் தலைநகராக விளங்கி வருகிறது.

1914—1918-ல் இங்கிலாந்துக்கும் ஜர்மனிக்கும் மகா யுத்தம் நடந்தது. அப்பொழுது இந்திய மன்னரும் மக்களும் பலவிதங்களில் இங்கிலாந்துக்கு உதவியளித்தனர்.

ஹார்டிஞ்சு பிரபு தென்னாப்பிரிக்காவில் இருந்த இந்தியர்களின் குறைகளைத் தீர்ப்பதிலும் ஊக்கம் கொண்டிருந்தார்.

1916—1921-ல் செம்ஸ்போர்ட் பிரபு வைஸ்ராயானார். இவர் காலத்தில் இந்தியர்கள் இராஜீய முன்னேற்றமடைய வெகு ஆவலாயிருந்தனர். 1917-ல் மாண்டேகு என்ற



மாண்டேகு



செம்ஸ்போர்ட்

இந்திய மந்திரி ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் துரைத்தனத்தின் ஒவ்வொரு பகுதியிலும் இந்தியரை அதிகமாகச் சேர்த்துக்கொள்ளுவதும், பிரிட்டிஷ் ஏகாதி

பத்தியத்தில் ஒரு முக்கிய பகுதியாய் இருந்து இந்தியா பொறுப்புள்ள ஆட்சியைப் படிப்படியாய் அடையும் பொருட்டுச் சுய ஆட்சி ஸ்தாபனங்களைக் கொஞ்சங் கொஞ்சமாக அபிவிருத்தி செய்வதும் துரைத்தனத்தாரின் கொள்கையென்றும், துரைத்தனத்தார் எவ்வாறு இம் முன்னேற்றத்தை யளிப்பதென்று அவ்வப்பொழுது முடிவுக்கு வருவார்களென்றும் கண்டிருந்தது. 1919-ல் பார்லிமெண்டாரால் இந்தியத் துரைத்தனச் சட்டம் (Government of India Act) ஒன்று தீர்மானிக்கப்பட்டது. இச் சட்டத்தின்படி தான் இப்பொழுது ஆட்சி நடைபெற்று வருகிறது. அடுத்த அத்தியாயத்தில் இச் சட்டத்தின்படி ஏற்பட்ட துரைத்தன அமைப்பு விவரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மாண்டேகு செம்ஸ்போர்ட் (மாண்ட்போர்ட்) சீர்திருத்தங்கள் கூட இந்தியாவில் அமைதியை உண்டு பண்ணவில்லை. இந்தியர்கள் மகா யுத்தத்தில் தாங்கள் செய்த மகத்தான உதவிக்குப் பதிலாகப் பூர்ண சுயாட்சி கிடைக்குமென்று எதிர் பார்த்தனர். அது கிடைக்கவில்லை. யுத்தத்திற்குப் பிறகு உலகம் முழுவதிலும் ஏற்பட்டதைப்போல இந்தியாவிலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. துரைதனத்தாரும் பொது ஜன சம்மத மில்லாத சில சட்டங்களை இயற்றுவது அவசியமென்று கருதினர். ரௌலட் சட்டமென்பது இராஜீயக் கிளர்ச்சியை அடக்கும் விஷயத்தில் துரைத்தனத்தாருக்கு விசேஷ அதிகாரத்தை யளித்தது. மகாத்மா காந்தி சத்தியாக்கிரகப் போரைத் துவக்கினர். இந்திய மகமதியர்களும் இக்கிளர்ச்சியில் சேர்ந்துகொண்டனர். பஞ்சாபில் ஜலியன்வாலா பாக் என்ற இடத்தில் ஒரு கூட்டத்தினர் ஜெனரல் டயர் என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டது, ஜனங்களுக்கு ஆத்திரத்தை யுண்டு பண்ணியது.


1921-ல் ரீடிங் பிரபு வைஸ்ராய் ஆனுர். தேச மெங்கும் அமைதிக் குறைவு வெகுவாகப் பரவியிருந்தது. 1921-ல் மேன்மை தங்கிய வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு விஜயம் செய்தார்.

ரீடிங் பிரபுவின் ஆட்சியில் மகாத்மா காந்தியின் ஆதரவின் கீழ் ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்றது. பஹிஷ்கார இயக்கமும் போதிக்கப்பட்டு வந்தது. ஆனுல் ஒத்துழையாமை இயக்கம் மகாத்மா காந்தி எதிர்பார்த்தபடி வெற்றி பெறவில்லை. காங்கிரஸ்காரர்கள் சட்ட சபைகளுக்கு மட்டும் போகவில்லை. ஆனுல் 1924-ல் காங்கிரஸ் காரர்களில் பலர் ஸி. ஸர். தாஸ் என்பவரின் தலைமையின் கீழ் சட்ட சபைகளில் புகுந்து துரைத்தனத்தாருடைய செய்கைகளைப்பற்றித் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்து வந்தனர்.

1926-ல் இர்வின் பிரபு வைஸ்ராய் ஆனுர். சமூகச்



இர்வின்



மகாத்மா காந்தி

சண்டைகளை ஒழிக்க இவர் வழிதேடினுர். இவர் காலத்தில்

தேச நன்மைக்காக அநேக கமிஷன்கள் நியமிக்கப்பட்டு, விசாரணை செய்துவந்தன. இந்தியாவுக்கு ராஜீயச் சீர் திருத்தங்கள் அளிப்பதைப்பற்றிப் பிரிட்டிஷ் துரைத் தனத்தார் ஸர் ஜான் சைமன் என்பவருடைய தலைமையின் கீழ் ஏழு மெம்பர்கள் அடங்கிய ஒரு கமிஷனை நியமித்தனர். ஆனால் அதில் இந்தியர்கள் எவரும் இல்லாததால் பொது மக்கள் அக் கமிஷனைப்பற்றிக் குறை கூறினர். சைமன் கமிஷன் யாதாஸ்து ஒன்றைத் தயாரித்தது. மகாத்மா காந்தி மீண்டும் சத்தியாக்கிரகப் போரைத் துவக்கி, மீண்டும்




சிறையினுட் சென்றார். இர்வின் பிரபு இந்தியர்களுக்கு நம்பிக்கையை உண்டுபண்ண வேண்டி வட்டமேஜை மகாநாடு ஒன்றைக் கூட்டுமாறு பிரிட்டிஷ் துரைத்தனத்தாருக்குக் கூறினார்.

1931-ல் வில்லிங்டன் பிரபு வைஸ்ராயாக வந்தார் மகாத்மா காந்தி இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்றார். ஆனால் அவர் இந்தியா திரும்பி வந்ததும் மீண்டும் சிறிதுகாலம் சிறைவாசம் செய்ய நேரிட்டது. மூன்றாவது வட்டமேஜை மகாநாடு ஒன்றும் நடந்தது. கடைசியாக பிரிட்டிஷ் துரைத்தனத்தார் இந்தியாவின் பிற்கால துரைத்தன அமைப்பைப்பற்றி வெள்ளை யறிக்கை ஒன்றை விடுத்தனர். பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டி ஒன்று 1934-ல் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அதை யொட்டிப் பார்லிமெண்டு கூடிய சீக்கிரம் சட்டமொன்று நிறைவேற்றும்.

கிராம முன்னேற்றம் :—இந்தியா கிராமங்கள் நிறைந்த நாடு. எழு லக்ஷம் கிராமங்கள் நமது நாட்டில் இருக்கின்றன. விவசாயம் நமது மக்களின் முக்கியத் தொழிலாகும். ஆகவே சில வருஷங்களாகக் கிராம முன்னேற்றத்தில் துரைத்தனத்தாரும் பொது மக்களும் பாடுபட்டு வருகின்றனர். 1926-ல் லின்லித்கோ என்பவருடைய தலைமையில் இந்திய விவசாய கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணை செய்தது. துரைத்தனத்தார் கிராம முன்னேற்றத்தில் பாடுபடுவதைப் போலவே மகாத்மா காந்தி முதலான தேசியத் தலைவர்களும் ஒய். எம். சீ. ஏ. (Y. M. C. A.) அதிகாரிகளும் கவி தாகூர் விச்வபாரதியின் ஒரு பிரிவும் அதே துறையில் உழைத்து வருகின்றனர். சமீபத்தில் மகாத்மா காந்தி கிராம முன்னேற்றத்தின் பொருட்டு அகில பாரத கிராம ஊழிய சங்கம் ஒன்றை ஸ்தாபித்து இருக்கிறார். இது காறும் சீர்கேடாயிருந்த இந்திய கிராமங்கள் மறுபடியும் கல்வி, சுகாதாரம், விவசாயம், நெசவு, மற்றும் குடிசைத் தொழில்கள் புத்துயிர்பெற்று ஒளி திகழ்ந்தால் தான் நமது மேன்மை பொருந்திய பாரத நாடு மீண்டும் வளம் நிறைந்த தேசமாகும்.

## அத்தியாயம் 15

### தற்கால ராஜாங்க முறையும் அமைப்பும்

நாம் மேலத்தியாயங்களில் வாசித்தபடி இந்தியா ஆங்கிலேய சாம்ராஜ்யத்திற்குட்பட்ட நாடாக ஏற்பட்டிருக்கிறது. 1774-ம் வருஷத்திய ரெகுலேட்டிங் ஆக்ட் (Regulating Act) ஒழுங்கு முறைச் சட்டம், 1784-ம் ஆண்டில் பிட் ஏற்படுத்திய இந்திய மசோதா (Pitt's India Bill), 1813, 1833, 1853, 1858 இவ் வருஷங்களில் ஏற்பட்ட பார்லிமெண்டு சட்டங்கள் முதலியவற்றால் கொஞ்சங்கொஞ்சமாக இந்தியா முழுவதும் ஆங்கிலேய துரைத்தனத்தாருடைய ஆட்சியில் வந்தது. 1833-ம் ௵ முதல் இந்தியர்கள் ஸர்க்கார் உத்தியோகங்களில் நியமிக்கப்பெற்றனர்; 1861-ல் கானிங்பிரபு காலத்தில் பிரதிநிதித்துவமுள்ள ராஜாங்க சபைகளில் இந்தியர்களுக்கு இடம் கிடைத்தது. இவர்கள் சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்களாவர்; 1892 முதல் இச்சபையில் இந்தியர்களே தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1909௵ மிண்டோ—மார்லி சீர்திருத்தங்களின் பிரகாரம் ஜனப்பிரதிநிதிகளின் தொகை அதிகரிக்கப்பட்டது மல்லாமல், இந்தியர்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் பாத்யதை ஒரு அளவில் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு 1917-ம் ௵ பஹிரங்கமாய்ப் பிரசுரம் செய்தபடி 1919-ல் மாண்டேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள் செய்யப்பெற்று அடுத்த ஆண்டில் அமுலுக்கு வந்தன. அவற்றை அனுசரித்துத்தான் இப்பொழுது துரைத்தனம் நடைபெறுகிறது.

## கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா ஆக்ட் (1919)

நோக்கம் :—இந்தியா தேசத்துரைத்தன அமைப்பை மாற்றி ஜனப்பிரதிநிதி சபைகளை ஏற்படுத்தி, அதிகாரங் கொடுப்பதும், கவர்ன்மெண்டாரை இச் சபைகளுக்கு பொறுப்புள்ளவர்களாக்கி, (Responsible Government—உத்தரவாத ராஜாங்கம்) படிப்படியாய் நம்மவர்களுக்குச் சுய ராஜ்யம் அளிக்கவேண்டு மென்பதே இச் சட்டத்தின் நோக்கம். மத்திய ராஜீய அமைப்பில் (Central Government), முன் இருந்த சபைக்குப் பதிலாக, ராஜாங்க சபை (Council of State) யும்; மஹாராஜ்ய சட்டசபை (Legislative Assembly) யும் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்திலும், மாகாண சட்ட நிரூபணசபை (Provincial Legislative Council)யும் ஏற்பட்டது. மத்திய கவர்ன்மெண்டாருக்கும், மாகாண கவர்ன்மெண்டாருக்குமுள்ள அதிகாரவரம்பும் இந்த ஆக்டில் விவரிக்கப் பட்டுள்ளது.

மத்திய கவர்ன்மெண்டாரின் வரவு செலவு திட்டம் மஹாராஜாங்க சபையிலும், ராஜாங்க சபையிலும் ஆலோசனைக்கு வைக்கப்படவேண்டும். இதேபோல மாகாண வரவு செலவு திட்டத்தை பரிசீலனை செய்ய மாகாண சட்ட சபைகளுக்கு உரிமையுண்டு. ஆயினும், குறிப்பிட்ட இலாகா வரவு செலவுகளைப் பற்றி மட்டுமே ஆலோசிக்க இவற்றிற்கு அதிகாரமுண்டு. ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண அதிகாரியாகிய கவர்னருக்கு உதவியாக ஒரு காரிய நிர்வாக சபையும், மந்திரிகளும் உண்டு. மாகாண விஷயங்களை ஒதுக்கப்பட்ட இலாகா என்றும், மாற்றப்பட்ட இலாகா என்றும் இரு பிரிவாக்கி, காரிய நிர்வாக சபை அங்கத்தினர்களும், மந்திரிகளும் முறையே கவனிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டது.

இந்திய சரித்திரத்தில் முதன் முதலாக சட்ட சபை களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை சில விதிகளுக்குட்பட்டுப் பலருக்கு வழங்கப்பட்டது. இச் சபைகளுக்குப் பிரதிநிதிகளை அனுப்புவதற்காக ஒவ் வொரு மாகாணமும் பல தொகுதிக (Constituencies) ளாகப் பிரிக்கப்பட்டது. 1930-ல் 90 லக்ஷம் இலெக்டர் கள் இருந்ததாகத் தெரியவருகிறது. மாகாண கவர்ன் மெண்டாரே ஜில்லாபோர்டு, முனிசிபாலிடிகள் கிராம பஞ்சாயத்து முதலிய ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத் தைப்பற்றிய அதிகாரம் செலுத்தலாம் என்று ஏற்பாடா யிற்று.

## I. ஹோம் கவர்ன்மெண்ட்

நமது மாட்சிமை தங்கிய மஹா சக்கரவர்த்திக்கும் (இங்கிலாந்து அரசரும்) இங்கிலிஷ் பார்லிமெண்டின் இரண்டு சபைகளுக்கும் இந்திய ராஜாங்க விஷயங்களில் சர்வாதிகாரமுண்டு.

இந்தியா மந்திரி, இந்திய இராஜாங்க அத்தியக்ஷர் (Secretary of State for India) :— இவர் பார்லி மெண்டு சபையின் அங்கத்தினர். இங்கிலாந்தின் பிரதான மந்திரிக்கு ஜவாப்தாரி ஆவர். அச்சபையின் சார்பாக இவரே இந்தியாவைப் பற்றிய சகல விஷயங்களுக்கும் அதிகார முள்ளவராவர். இந்தியாவை ஆளும் இராஜப் பிரதிநிதியும், மாகாண கவர்னர்களும் காலா காலங்களில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்று உத்தரவளிக்க இவருக்கு அதிகாரமுண்டு. வருஷ மொரு முறை பார்லி மெண்டிக்கு இந்தியாவைப்பற்றி யாதாஸ்து (Report) ஒன்று தயாரித்துக் கொடுக்கவேண்டியது. பார்லிமெண்டு

அங்கத்தினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இவர் பதில் சொல்லும் கடமை யுடையவர்.

இந்த அத்யக்ஷருக்கு ஆலோசனை சொல்லவும், பரிபாலனத்திற்கு உதவிகள் புரியவும் 'இந்தியா கௌன்ஸில்' என்ற சபை யொன்றிருக்கிறது. அதன் மெம்பர்கள் யாவரும் இந்திய விஷயங்களில் அநுபவம் பெற்றவர்கள். அதில் இப்பொழுது இந்தியரும் மெம்பர்களாக இருந்து வருகிறார்கள்.


## II. இந்தியா கவர்ன்மெண்டு

இராஜப் பிரதிநிதி:—பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் சிபார்சை அநுசரித்துச் சக்கரவர்த்தி ஐந்து வருஷங்களுக்கு ஒரு தரம் இராஜப் பிரதிநிதியை நியமிக்கிறார்.

கார்ய நிர்வாக சபை :—இந்திய ஆட்சியில் இராஜப் பிரதிநிதிக்கு உதவியாக நிர்வாக சபையில் ஏழு மெம்பர்கள் இருக்கிறார்கள். இவர்களில் மூவர் இந்தியர்; இந்த மெம்பர்கள் ஒவ்வொருவரும் இந்திய ஆட்சியில் ஓரோர் பிரிவை மேற்பார்வை செய்கிறார்கள்.

சட்ட நிருபண சபைகள் :—சட்ட நிருபணம் செய்ய வைஸ்ராய்க்கு உதவிசெய்ய இரண்டு சபைகள் இருக்கின்றன. (1) ராஜாங்க சபை—கௌன்சில் ஆவ் ஸ்டேட் (Council of State). (2). மஹாராஜ்ய சட்ட சபை (Imperial Legislative Assembly).

ராஜாங்க சபை (கௌன்சில் ஆவ் ஸ்டேட்) :—கௌன்சிலில் உள்ள 60 மெம்பர்களில் 34 பேர்களை ஜனங்கள் தேர்தல் செய்து அனுப்புகிறார்கள். துரைத்தன உத்யோகஸ்தர்களின் தொகை இருபதிற்கு மேற்படக் கூடாது. மற்றவர்கள் துரைத்தனத்தாரால் நியமிக்கப்படுகிறார்கள். அக்கிராசனர் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்படுகிறார்.



இந்தியா பார்லிமெண்டு ஹவுஸ்—புதுடெல்லி

மஹாராஜ்ய சட்ட சபை:—அஸெம்பிளியில் உள்ள 145 மெம்பர்களில் 104 மெம்பர்கள் பற்பல மாகாணங்களின் தொகுதிகளிலிருந்து தெரிந்தெடுக்கப்படுகிருர்கள். தேச ஆட்சிக்கு அவசியமான சட்டங்களைச் சட்டசபையில் ஏற்படுத்திக் கொள்ளலாம். பிரதி வருஷமும் வரவுசெலவு திட்டத்தைச் சட்ட சபையின் அங்கீகாரத்திற்கு சர்க்கார் அனுப்புவார்கள். இந்திய ராஜாங்க வரவுசெலவுத் திட்டம் இந்தியா சட்ட சபையில் கவனிக்கப்படும். ஜனப் பிரதிநிதிகள் இந்த திட்டத்தில் உள்ள குற்றங் குறைகளை எடுத்துக் காட்டலாம். ராஜப்பிரதிநிதியின் அங்கீகாரத்திற்குட்பட்டு சபையோர்கள் தங்களில் ஒருவரை அக்கிராசனராகத் தேர்ந்து எடுக்கிருர்கள்.

இந்தியா கவர்ன்மெண்டு மேற்பார்வையில், தேசக் காவல், இந்திய ராஜ்ய விஷயங்கள், தபால், தந்தி, சுங்கத் தீர்வை, உப்பு, இருப்புப் பாதை விஷயங்கள், நாணயச் செலவாணி, வருமானவரி முதலிய இலாகாக்கள் உள. மற்றைய விஷயங்களை அந்தந்த மாகாண கவர்ன்மெண்டாரே கவனித்துக்கொள்வார்கள்.

## III. மாகாண கவர்ன்மெண்டு

கவர்னர்:—இவரே மாகாண அரசர் எனக் கருதலாம். மாகாண விஷயங்களைப் பொருத்த மட்டில் இவரே சர்வ அதிகாரி. மாகாண கவர்னரை இந்தியா மந்திரியின் சிபார்சுப்படி சக்கரவர்த்தி நியமிக்கிருர்.

மாகாண நிர்வாகம்:—கவர்னருக்கு உதவியாக மாகாண நிர்வாகசபையொன்றுநிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. மாகாண ஆட்சியில் ஒரு பாகம் நிர்வாக சபை மெம்பர்கள் பொறுப்பில் இருக்கிறது. கவர்னர் சிபார்சின் பேரில் நிர்வாக சபை மெம்பர்களை சக்கரவர்த்தி நியமிக்கிருர். நிர்வாக மெம்பர்கள் நால்வர். அவர்களில் இருவர் இந்தியர். போலீஸ், சட்டமும்

அமைதியும் சம்பந்தமான விஷயங்கள், ரேவினியூ, இந்த இலாகாக்கள் இவர்கள் வசம் இருக்கின்றன.

மந்திரிகள்:—மாகாணச் சட்ட சபையில் உள்ள ஜனப் பிரதிநிதிகளில் பெரும்பான்மைக் கட்சியில் உள்ள தகுந்த மூவரைக் கவர்னர் மந்திரிகளாய் நியமிக்கிறார். கல்வி, சுகாதாரம், மராமத்து, விவசாயம், கைத் தொழில், லோகல் போர்டு முதலிய இலாகாக்களை மந்திரிகள் மேற்பார்வையில் நடத்தப்படுகின்றன. இந்த பாகம் மந்திரிகள் வசம் ஒப்பு விக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிக்கு டிரான்ஸ்பர்டு (Transferred) பகுதி என்று பெயர். மற்றொரு பகுதி நிர்வாகசபையின் அங்கத்தினர்கள் பார்வை யிடுகிறார்கள். இதற்கு ரிசர்வெட் பகுதி (Reserved Half) என்று வழங்குகிறது.

மாகாண சட்ட நிருபண சபை:—(Provincial Legislative Council) ஒவ்வொரு மாகாண கவர்னருக்கும் உதவியாக ஒரு சட்ட நிருபண சபை யுண்டு. இதில் நிர்வாக சபை அங்கத்தினர்களும், கவர்னரால் நியமிக்கப் பட்ட மெம்பர்களும், ஜனங்களால் பல தொகுதிகளில் தேர்ந் தெடுக்கப்பட்டவர்களும் மெம்பர்கள். மெம்பர்களின் தொகை மாகாணங்களுக்கு தக்கவாறு குறிப்பிடப்பட்டிருக் கிறது. வங்காளத்தில் மிகவும் அதிகத் தொகையும், மத்திய மாகாணங்களில் குறைந்த தொகையும் உண்டு. சில ஜாதியார்களும் வகுப்பினர்களும் தனித்தனித் தொகுதி களின் மூலமாய் தேர்ந்தெடுத்து மெம்பர்களை அனுப்ப சுதந்தரம் பெற்றிருக்கிறார்கள். இந்த மாகாண சபையின் மெம்பர்களில் 100-க்கு 70 பேர்களுக்குக் குறையாமல் குடிகளால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களா யிருக்க வேண்டும் என்ற ஒழுங்கு ஏற்பட்டிருக்கிறது. இச்சபைக்கு முன்னை விட சட்ட நிருபணம், வரிவிதிகள், அரசியல் நிர்வாகம்,

வரவு செலவு திட்டம் முதலிய விஷயங்களில், அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கவர்னரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு அக்கிராசனர் சபையால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

இந்த அரசியல் அமைப்பு 1919-ம் வருஷத்திய ஆக்டின்படி நடைபெற்று வருகிறது. இப்பொழுது 1934-ம் வருஷம் நவம்பர் மாதம் வெளியிடப்பட்டிருக்கும் கூட்டுக் கமிட்டியின் யாதாஸ்தின்படி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு மசோதா இந்திய அரசாங்க சீர்த்திருத்தத்தைபற்றி ஏற்படும். அதனுல் இன்னும் இந்தியர்களுக்கு அதிகப் பொறுப்பும், பயனும் உண்டாகும்.

மேலும், நம்முடைய தேசத்திலேயே ஒரு புதிய ஏற்பாடுண்டாகும். இந்திய சுதேச ராஜ்யங்களுக்கு ஒரு கணக்கின்படி பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு, இந்தப் பிரதிநிதிகளும் மாகாணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் படும் பிரதிநிதிகளும் சேர்ந்து இந்தியா சட்ட சபையில் உட்காருவார்கள். இவ்வாறு சமஷ்டி (Federation) ஏற்பாடும் நடைபெறும். பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் சுய ஆட்சி முழுமையும் ஏற்படும்.

கொஞ்ச காலமாக நம்முடைய தேசத்தில் ஒரு புதிய ஊக்கம் உண்டாயிருக்கிறது. கல்வி, இலக்கியம், கைத்தொழில் விவசாயம், தேசாபிமானம், கூட்டுறவு கிராம சீர்திருத்தம், சாஸ்திர ஆராய்ச்சி, இந்தத் துறைகளில் மேன்மேலும் விருத்தியடைந்து வருகிறோம், 'வாக்குரிமை', 'வோட்' சுதந்தரம் பெரும்பான்மையானவர்களுக்குக் கிடைக்கும். நம்முடைய உரிமைகளை நாம் சரிவர உபயோகிக்க வேண்டும். நமது கடமைகளையும் நன்கு செலுத்தி தேச முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோமாக!

The Royal Printing Works, Educational Printers, Mount Road, Madras.